# உலகத்தமிழ்

**காலாண்டிதழ்** - அக்டோபர் 2021 ISSN 2581-9712

மலர் : 4 திருவள்ளுவராண்டு 2052

இதழ் : 14 பிலவ, புரட்டாசி



வெளியீடு

**உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை**

# ஆலோசனை மற்றும் ஆசிரியர் குழு


## தலைமை ஆசிரியர்

முனைவர் தா.லலிதா
இயக்குநர்
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை.
தொலைபேசி : 0452 2530766
நிகரி : 0452 2530799
மின்னஞ்சல் : director@utsmdu.org

## ஆசிரியர் குழு (இந்தியா)

முனைவர் கோ.பாலசுப்ரமணியன்
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கழைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு.
மின்னஞ்சல் : tamilunivc@gmail.com

திரு செ.சரவணன் இ.ஆ.ப
இயக்குநர் (பொ.),
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, தமிழ்நாடு.
மின்னஞ்சல் : iits@tn.nic.in

முனைவர் கோவி.இராசகோபால்
துறைத்தலைவர்,
நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியவியல் துறை,
தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி-110007.
மின்னஞ்சல் : grajagopaldu@gmail.com

முனைவர் அரங்க.பாரி
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், தமிழ்நாடு.
மின்னஞ்சல் : drramarajapandian@gmail.com

முனைவர் வை.இராமராஜபாண்டியன்
புலத்தலைவர், தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,மதுரை.
மின்னஞ்சல் : drramarajapandian@gmail.com

## ஆசிரியர் குழு (அயலகம்)

திரு ம.ஜெயராமசர்மா
விக்டோரியா இந்துக்கல்வி மையத்தின் ஆசிரியர்,
அக்கினிக்குஞ்சு மின்னிதழ் இலக்கிய ஆலோசகர்,
'தடாகம்' தமிழ் இலக்கிய ஆலோசகர்,
ஆசுதிரேலியா.
மின்னஞ்சல் : jeyaramiyer@yahoo.com.au

முனைவர் சி.இளங்குமரன்
விரிவுரையாளர், தமிழ்ப்பிரிவு, தற்காலமொழிகள்துறை,
மொழிகள் மற்றும் தகவல் தொடர்பியல்புலம்,
சுல்தான் இட்ரிஸ் பல்கலைக்கழகம்,
தாஞ்சோங்மாலிம், பேராக், மலேசியா.
மின்னஞ்சல் : s.ilangkumaran@gmail.com, ilangkumaran@fbk.upsi.edu.my

முனைவர் இர.பிரபாகரன்
கணினித் தொழில்நுட்ப வல்லுநர்,
பல்வேறு தமிழ்ச் சங்கங்களில் பதவி வகித்தவர்,
அமெரிக்கா.
மின்னஞ்சல் : prabu0111@gmail.com

திரு வி.ஜீவகுமாரன்
அரச நூலகத்தில் தமிழ்ப் பகுதியின் பொறுப்பாளர், ஆலோசகர்,
நகரசபையின் புவியியல் சார்ந்த தொழில்நுட்பப் பிரிவின் பொறுப்பாளர்,
டென்மார்க்.
மின்னஞ்சல் : jeevakumaran5@gmail.com

முனைவர் ஆ.ரா.சிவகுமாரன்
இணைப் பேராசிரியர், தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு,
தேசியக் கல்விக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்,
சிங்கப்பூர்.
மின்னஞ்சல் : sivakumaran.r@nie.edu.sg

ISSN : 2581-9712

# உலகத்தமிழ்

14

(ஆகத்து, செப்டம்பர், அக்டோபர்)

காலாண்டு மின்னிதழ்

## உலகத் தமிழ்ச் சங்கம்,  மதுரை

ISSN : 2581-9712

மலர்: 4 இதழ்: 14

திருவள்ளுவராண்டு 2052/ பிலவ, புரட்டாசி

ஆசிரியர் & வெளியிடுபவர்:

முனைவர் தா. லலிதா

இயக்குநர்

உலகத் தமிழ்ச் சங்கம்,

அரசு சட்டக் கல்லூரி அருகில்,

மருத்துவர் தங்கராஜ் சாலை,

மதுரை - 625020.

தமிழ்நாடு, இந்தியா.

தொலைபேசி: 0452- 2530799.

மின்னஞ்சல்:

utsmdu2@gmail.com

Editor & Publisher

**Dr. T. Lalithaa**

Director

World Tamil Sangam,

Near, Govt Law College

Dr. Thangaraj Salai,

Madurai - 625020.

Tamilnadu, India.

Telphone: 0452- 2530799

E.Mail: utsmdu2@gmail.com

**Web : www.ulagatamil.in**

வரவேற்கப்படுகின்றன...!

உலக நாடுகளில் இயங்கி வரும் அனைத்துத் தமிழ்ச்சங்கங்கள், தமிழ் அமைப்புகள், நிறுவனங்கள், தமிழ் ஆராய்ச்சி மேற்கொள்ளும் நிறுவனங்கள் ஆகியவை பற்றிய விவரங்களைத் தொகுத்தல், உலகமெங்கும் இயங்கிவரும் இவ்வமைப்புகளை ஒரு குடையின்கீழ் பதிவு செய்து ஒருங்கிணைத்துக் கூட்டமைப்பு உருவாக்குதல் என்பது உலகத் தமிழ்ச் சங்கத்தின் நோக்கமாகும். மேலும், தமிழறிஞர்கள், கலைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பித் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவற்றைப் பரப்புதல், தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் அயல் நாடுகளுக்கு ஆய்வாளர்களை அனுப்பித் தமிழர் நிலையினை ஆய்தல், அந்நாட்டு ஆய்வாளர்களைத் தமிழகத்திற்கு வரவழைத்துக் கருத்துப் பரிமாறுதல், பிறநாட்டுத் தமிழர் களஞ்சியம் தயாரித்தல், தமிழ் மொழியிலுள்ள சங்க கால நூல்கள், இலக்கியங்கள் முதலியவற்றை அயல்நாடுகளில் உள்ள தமிழர்கள் அறிந்து தெளிய வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மட்டுமல்லாமல் தமிழாராய்ச்சியை வளப்படுத்தும் நிலையில் உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சி மையம் அமைக்க நடவடிக்கைகள் எடுத்தல், உலக நாடுகளில் தமிழர்கள் வாழும் இரு நாடுகளைத் தேர்வு செய்து ஒவ்வோர் ஆண்டும் ஆய்வரங்கங்கள், கருத்தரங்கங்கள் நடத்துதல், கலைநுட்பம் வாய்ந்த சிற்பங்கள், நாட்டுப்புறப்பாடல்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் கண்டு, பாராட்ட வாய்ப்பு ஏற்படுத்துதல் இன்றைய தேவையாகும். தமிழ்க் கலை, பண்பாட்டை காக்கும் பொருட்டு உலக நாடுகளின் அருங்காட்சியகங்களில் இடம் பெற்றுள்ள தமிழ்த் தொடர்பான ஓலைச்சுவடிகள், அரிய கையெழுத்துச்சுவடிகள், அரிய கலைப் பொருட்கள் முதலிய தரவுகளைத் திரட்டுதல் போன்ற பணிகளைச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த மின்னிதழினை மேம்படுத்திடத் தகுந்த ஆலோசனைகள், தமிழ் மற்றும் தமிழர் தொடர்புடைய செய்திகள், தமிழாய்வுக் கட்டுரைகள் போன்றவை வரவேற்கப்படுகின்றன.

முனைவர் தா.லலிதா
ஆசிரியர்

ISSN : 2581-9712

# மலரின் உள்ளே.....


| வ.எண் | தலைப்பு | ஆசிரியர்கள் | பக் |
|---|---|---|---|
| 1. | 'சோமலே'யின் நடையியல் | முனைவர் ச. முருகேசன் | 04-07 |
| 2. | ஹாங்காங் தமிழர்களின் வாழ்வியல் | முனைவர் சித்ரா | 08-21 |
| 3. | இந்திரா சௌந்தர்ராஜன் சிறுகதைகளில் நம்பிக்கைகள் | முனைவர் கி. நீலகண்டன் | 22-26 |
| 4. | குழந்தைகளுக்கான தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் குறுஞ்செயலிகள் – ஒரு மதிப்பீடு | முனைவர் சி. சிதம்பரம் | 27-31 |
| 5. | சிற்றிலக்கியங்களில் இசைச் செய்திகள் | திருமதி. சுஜாதா நிரஞ்சன் | 32-39 |
| 6. | செவ்வியல் இலக்கியங்களில் ஆன்மிகக் கூறுகளும் தற்கால வளர்ச்சியும் | முனைவர் இரா. அசோக்குமார் | 40-53 |
| 7 | தமிழ் அகப்பொருள் மரபு | முனைவர் செ.சங்கீதா | 54-57 |
| 8. | தொகையிலக்கியத்தில் பெண்ணின் தமர் – மணவினைக்கு முன்னும் பின்னும் | ச. கண்மணி கணேசன் | 58-61 |
| 9. | நிலம் சார்ந்த தொழிலும் வேளாண் அறிவியலும் | முனைவர் ம. மணிமேகலை | 62-67 |
| 10 | புலம் பெயர்ந்த தமிழர்களின் இறைநெறி சார்ந்த வாழ்வியல் | அ. அழகுராஜா | 68-72 |
| 11 | பெரிய புராணத்தில் இறை நெறிக் கொள்கை | சங்கராமணி மாணிக்கம் | 73-77 |
| 12 | பெரியபுராணத்தில் திருமணம் | அ. மணிகண்டபூபதி | 78-85 |
| 13 | பேரறிஞர் அண்ணாவின் சிறுகதைகளில் சமுதாய விழிப்புணர்வு | முனைவர் அரங்க.மணிமாறன் | 86-93 |

ISSN : 2581-9712



# ‘சோமலே’யின் நடையியல்

முனைவர் ச. முருகேசன்
உதவிப் பேராசிரியர், கணேசர் கலை அறிவியல் கல்லூரி,
மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை.

## முன்னுரை

நடை என்பது வினை. இது இடத்திற்குத் தகுந்தாற் போல் பொருள் தருவதாகும். இயல் என்பது அதில் உள்ள பல்வேறு கூறுகள் அடங்கிய தொகுதியினை விளக்குவது. இவ்விரண்டும் சேர்ந்துதான் நடையியல் என்று பெயர் பெற்றது. இதனை ஆங்கிலத்தில் ‘ஸ்டெயிலிஸ்டிக்ஸ்’ என்றழைப்பர். ஒரு இலக்கியத்தில் அல்லது தனிப்பட்ட ஆசிரியரின் படைப்பில் உள்ள எழுது முறையினை ஆராய்வதே நடையியல். இவ்வகை ஆய்வின் வழி இலக்கியம் எந்தக் காலத்தைச் சார்ந்தது, ஆசிரியரின் காலம் யாது, ஆசிரியர் எப்பகுதியில் வாழ்ந்தவர், ஆசிரியர் கையாண்டிருக்கும் மொழி (வழக்கு நடை, எழுத்து நடை, கிளை மொழி – சமூகம் சார்ந்த, வட்டாரம் சார்ந்த மொழி) நடை எத்தகையது, ஆசிரியரின் தனிச்சிறப்பான நடை எது என்பதனை அறிந்துகொள்ள நடையியல் துணைபுரிகின்றது. நடையியல் கோட்பாடு மேலைத்தேயத்தில் தோன்றியதாகக் கூறுகின்றனர். ஆனால் தமிழ் இலக்கிய வரலாற்றை நோக்கும் போது சங்க காலம் முதல் ஒவ்வொரு ஆசிரியரும் தங்களுக்கான நடையினை வேறுபடுத்திக் காட்டியுள்ளனர் என்பதனை அறிய முடிகிறது. பெயர்தான் மேலைத்தேயத்தில் தோன்றியதாக எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. சங்ககாலத்தில் எழுதப்பட்ட பாடல்கள் அனைத்தும் ஆசிரியப்பாவால் அமைந்திருந்தாலும் நடையில் வேறுபடுகின்றன என்பதனைக் காணலாம். அன்ன, போல உவம உருபுகள் ஒரே பொருள் தந்தாலும், சங்கப் பாடல் எழுதிய ஒரு புலவர் ‘அன்ன’ என்ற உவம உருபையும் மற்றொருவர் ‘போல’ என்ற உவம உருபையும் தங்களது பாடல்களில் பயன்படுத்தி இருப்பதனை இதற்குச் சான்று கூறலாம்.

இவ்வாறு சங்க காலம் தொடங்கி தற்காலம் வரை மொழியில் மாற்றம் ஏற்பட்டு வந்துள்ளது. மொழியில் வேறுபாடு இருப்பது போல ஒவ்வொரு காலத்திலும் எழுதிய ஆசிரியர்கள் தங்களுக்கான நடையினை தாங்களே உருவாக்கி வந்தனர் என்பதனை அறிய முடிகிறது. தற்காலத்தில் இயக்கங்கள் சார்ந்த மொழி நடையாளர்களைச் சான்று கூறலாம். அவர்களின் நடையினை வைத்தே இவர் இந்த இயக்கத்தைச் சார்ந்தவர் என்று அடையாளம் காண முடியும். இதே போன்றுதான் இயக்கங்கள் சாராத ஆசிரியர்களும் தங்களுக்கான எழுது நடையினை வைத்துள்ளனர். அந்த வகையில் உலகம் சுற்றிய தமிழர் சோமலெ என்னும் சோம. லெட்சுமணன் அவர்கள் எவ்வகையான நடையினைத் தமது படைப்பில் கையாண்டுள்ளார் என்பதனை இக்கட்டுரை விளக்குகிறது.

## பழமொழி நடை

பழமொழி என்பது ஒன்றினை ஒப்பிட்டுக் காட்டுவதற்காகப்

ISSN : 2581-9712

பயன்படுத்துவதாகும். இது எதுகை, மோனை, இயைபுடன் அமைந்திருப்பதால் அனைவரும் எளிதாகத் தெரிந்து கொள்வர். தமிழ் – பந்திக்கு முந்து படைக்குப் பிந்து. பஞ்சாப் – பந்திக்கு முந்து படைக்கும் முந்து. சாது மிரண்டால் காடு கொள்ளாது. சீக்கியர் திரண்டால் இந்தியா தாங்காது. கடுகு சிறுத்தாலும் காரம் போகவில்லை முதலான பழமொழியின் வாயிலாக சொல்ல வந்த கருத்தினை எளிதாக விளக்குகிறார். தமிழ்ப் பழமொழிகள் மட்டுமல்லாது அதற்கு நிகராக இருக்கும் பிற மொழியில் உள்ள பழமொழியினையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

### எதுகை நடை

இலக்கணக் கூறுகளில் எதுகையும் ஒன்று. பாடல்களில் வரக்கூடிய எழுத்துக்களின் அடிப்படையில் இதனை விளக்குவர். பாடல்களை எளிதாக நினைவில் வைத்துப் பாடுவதற்கு எதுகை, மோனை இலக்கணக் கூறுகள் உதவின. ஒலியின் அடிப்படையில் அமைவதால் இவ்வகைப் பாடலை எளிதாகக் கற்றுக்கொள்கின்றனர். இவ்வகை ஒலி நடையினை சோமலெ அவர்களும் பயன்படுத்தியுள்ளார்.

> ***"வெள்ளத்தில் உள்ளானும்***
> ***வேங்கடத்தில் மேயானும்***
> ***உள்ளத்தில் உள்ளான்"*1**

இப்பாடலில் முதல் அடியிலும், மூன்றாவது அடியிலும் எதுகை 'ள்' பயின்று வந்துள்ளதைக் காண முடிகின்றது.

### மோனை நடை

முதல் எழுத்து ஒன்று போல இருப்பது மோனை. "தமிழ் நாட்டிலுள்ள இனத்தார் நாக நாட்டிலிருந்து குடி வந்ததாகவும் நாக வழிபாடு அவர்களால் பரவி, நாகப்பட்டினம், நாகூர், நாகர்கோவில் போன்ற பெயருடன் ஊர்கள் தோன்றியதாகவும் கூறுவர்"2. நீண்ட இவ்வரியில் 'நா'கார எழுத்து மோனையாக முதலில் வந்துள்ளதைக் காணலாம்.

### நீண்ட உரைநடை

நீண்ட உரைநடை என்பது பேச்சு வழக்கில் அதிகம் காணப்படுவது வழக்கம். இலக்கிய மொழியில் நீண்ட உரைநடையானது ஒரு சில இடங்களில் இடம்பெறுவது. நீண்ட நடை இலக்கிய வாசிப்புக்கு ஏற்றதாக அமையாது. அது வாசிப்பதற்கு ஒரு வித சலிப்பைத் தருவதாகும்.

"அங்குள்ள சிற்ப வேலைப்பாடுடன் கூடிய தூண்கள் – மதுரையிலும் நெல்லையிலும் இசையொலிகளை எழுப்பும் தூண்களும், தாராசுரத்தில் நுண்ணிய வேலைப்பாடுள்ள தூண்களும் தமிழ் நாட்டுக்குப் புகழ் தருவன போல ராஜஸ்தானுக்குப் பெருமை தருகின்றன"3.

"வாத்து வேட்டை, புலி வேட்டை, சிறுத்தை வேட்டை, மான் வேட்டை ஆகிய வேட்டைகளுக்குத் தங்கள் காடுகளில் பொருளீட்டுவதைத் தொழிலாக உள்ள மகா ராஜாக்களும் இருக்கிறார்கள்"4 என்று பிற மாநிலத்தில் இருக்கும் பண்பாட்டுக் கூறுகளை நீண்ட உரைநடையின் மூலம் சான்று காட்டியுள்ளார்.

### பேச்சு வழக்கு நடை

இலக்கிய நடையில் இருந்து பேச்சு வழக்கு முழுவதும் வேறுபடுவதாகும். இது வட்டார மொழி நாவல்களில் இடம்பெறுவதுண்டு. இலக்கிய நடையில் ஒரு சில மட்டுமே இடம்பெறும். வெந்ததைத் தின்றுவிட்டு விதி வந்தபோது சாவோம் என்று கூறும் வழக்கம் வழக்கு மொழியில் அதாவது போச்சுத் தமிழில் கூறுவதுண்டு. பகட்டான வாழ்க்கை என்பது திருப்பத்தூர் வட்டாரப் பகுதியில் பயன்பாட்டில் உள்ள ஒரு

ISSN : 2581-9712

சொல்லாகும். இது ஆடம்பரமான என்பதனைக் குறிக்க வரும் சொல்லாகும்.

**வட்டார வழக்கு**

தமிழ் மொழி ஒன்றாக இருந்தாலும் ஒவ்வொரு மாவட்டம் தோறும் வேறுபட்டு இருப்பதைக் காணலாம். அவர்கள் பேசுவது பிற வட்டார மக்களுக்குப் புரியாத ஒன்றாக இருப்பதனைக் காண முடிகின்றது. அந்தப் பையன்கள் சிவப்பாயும், அழகாகவும் இருப்பதாயும், மரியாதையுடனும் நடந்து கொள்வதாகவும் சொன்னார்கள். நடப்பதாயும், இருப்பதாயும் என்னும் சொல்லானது நெற்குப்பை பகுதியில் வழங்குவதாகும். ஒரு சொல்லுடன் 'உம்'மை இணைத்துச் சொல்வதாகும்.

இலக்கியச் சான்று

தமிழ் இலக்கியத்தில் வரக்கூடிய வரிகளை எடுத்துக்காட்டியுள்ளார். "தொல்காப்பியமும் திருக்குறளும் தந்து வான் புகழ் கொண்டது தமிழ்நாடு",5 "உண்பது நாழி, உடுப்பன இரண்டே"6. என்னும் புறநானூறு 189ஆம் பாடல் வரியினைச் சான்று தந்துள்ளார். சோமலெ தமது எழுத்து நடையில் தமிழ் இலக்கியப் பாடல்களை மேற்கோள் காட்டிச் செல்லுவதில் சிறந்தவர் என்பதனைக் காட்டுகின்றது இவ்வரிகள்.

**கட்டுரை நடை**

கட்டுரை நடை எடுத்துக்கொண்ட பொருளை மட்டுமே இன்றியமையாததாகக் கூறிச்செல்வது. அங்கு அடைகளுக்கு அதிக இடமில்லை. கருத்துக்கள் துல்லியமாகவும், மயக்கந்தராத சொற்களைக் கொண்டனவாயும் சுருக்கமாகவும் எடுத்துக் கூறப்படுவன. குஜராத்தில் விதவைகள் தங்க வளையல்கள் போட்டுக் கொள்வார்கள். சுமங்கலிகள் கண்ணாடி வளையல்கள்தான் போட்டுக் கொள்வார்கள். என்று எளிமையான நடையில் குறிப்பிட்டுள்ளார்.

**பிறமொழிச் செல்வாக்கு**

எந்த ஒரு மொழியாக இருந்தாலும் பிற மொழிச் சொற்கள் கலந்தே பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மொழிக் கலப்பு என்பது சமூக மாறுதலில் ஏற்படக்கூடியதாகும். "அசாம் ஒரு இனக் கதம்பம், மொழிக் கதம்பம், மதக் கதம்பம். இரசாயன வகைகள் 1000 டன், பீப்பாய்கள்"7. திருவிழாவின் போது இராஜஸ்தாரியர்கள் பைஜாமாவும், குத்தா, அக்சின் ஆகியவற்றுடன் போட்டியாவுக்குப் பதில் பதினெட்டு கெஜ நீளத்தில் பக்ரியும் அணிவர் எனப் பிறமொழிச் சொற்களைக் கையாண்டுள்ளார்.

**ஒப்பீட்டு நடை**

காவிரிக் கரையில் ஸ்ரீரங்கம் தீவு இருப்பது போல, பிரமபுத்திரா கரையில் கௌஹாத்தி அருகே மஞ்சுளி, உமா நந்தா என்ற இரு தீவுகள் உள்ளன. என்ற ஒப்பீட்டு நடையின் மூலம் இரு வேறு ஆறுகளை எடுத்துக்காட்டி அந்த இடத்தினை விளக்குகிறார். அதே போன்று "தமிழ்நாட்டில் புகழ்பெற்ற ஓர் ஊர் வேலூர். வங்காளத்தில் புகழ் பெற்ற ஓர் ஊர் பேலூர். வேலூர் உடலுக்கு மருத்துவ வசதி மூலம் அமைதி தருகிறது. பேலூர் இராமகிருஷ்ணரின் அறிவுரைகள் மூலம் மன அமைதி தருகிறது"8. இவ்விரண்டும் வெவ்வேறு வகையான சிறப்பிடமாக இருந்தாலும் வேலூர், பேலூர் எனும் இடப்பெயர் உச்சரிப்பில் ஒரே ஒலியாக வருதால் ஆசிரியர் இதனைத் தந்திருக்கலாம்.

**புள்ளி நடையியல்**

ஓர் ஆசிரியரை இனங் கண்டுகொள்வதற்கு இவ்வகை நடை

ISSN : 2581-9712

உதவுகிறது. "ஒவ்வொரு ஆசிரியரின் மொழிப் பயன்பாட்டிலும் சில மடக்குக் கூறுகள் காணப்படுவதுண்டு. குறிப்பிட்ட சொற்கள், தொடர் அமைப்புக்கள் ஒலிக்கோலங்கள் ஆகியவற்றை ஒவ்வொரு ஆசிரியரும் திரும்பத்திரும்பப் பயன்படுத்திக் கொண்டிருப்பது உண்மையாகும். இக்கூறுகள் அடிக்கடி அவருடைய படைப்பில் பயின்று வந்து கொண்டேயிருக்கும். அதே போன்று சில கூறுகள் பயின்று வாராவிடினும் விருப்பக்கூறுகளாக விளங்கும்"9 என்ற வரிகளுக்கு ஏற்ப 'பகட்டான' என்ற சொல்லினை ஆசிரியர் மீண்டும் மீண்டும் பயன்படுத்துகின்றார்.

**உணர்ச்சி நடை**

செங்கற்பட்டு மாவட்ட நூலில், "குருடர்களுக்காகப் பிறநாட்டு நல்லறிஞர்கள் 'பிரைல்' எழுத்து முறையை உருவாக்கியுள்ளனர்; நாமோ அவர்களைப் பிச்சை எடுப்பவர்களாக இரங்கத்தக்க அவல நிலையில் வைத்திருக்கிறோம். வெளிநாட்டினர் அவர்களின் முன்னேற்றத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் வழிவகைகளையும் பற்றிச் சிந்தித்துச் செயல்படுகின்றனர்; நாமோ 'ஊழ்வினை', 'தலைவிதி' என்றெல்லாம் காரணம் காட்டி அவர்கள் மூலையில் முடங்கிக் கிடக்கவே வழிவகை செய்கிறோம்"10 எனத் தனது உணர்ச்சியினை வெளிப்படுத்தியுள்ளார்.

**முடிவுரை**

நடையியல் என்பது ஒரு ஆசிரியரின் எழுது முறைகள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதனை அடையாளம் காண ஆராய்வதாகும். ஒரு ஆசிரியரின் சிறப்புக் கூறுகளையும் இதன் வழி அறிய முடியும். இலக்கிய எழுதலில் எவ்வகையான நடையினைப் பின்பற்றுகின்றார் என்பதனை இதன் வழி அறிய முடியும். சோமலெ இலக்கியத்தை எடுத்துக்காட்டுதல், வட்டார வழக்கு, பழமொழியினை பிற மொழியுடன் ஒப்பிட்டுதல், ஒரு செய்தியினை எதுகை, மோனை நடையில் எளிமையாக்குதல் முதலான நடையியல் உத்திகளைத் தமது எழுத்துக்களில் பயன்படுத்தியுள்ளார் என்பதனை இக்கட்டுரையின் வழி அறிய முடிகின்றது.

**துணைநூற் பட்டியல்**

1. சோமலெ. 1998, இமயம் முதல் குமரி வரை, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.

2. ………. 1963, செங்கல்பட்டு மாவட்டம், சென்னை, பாரி நிலையம்.

3. நீதிவாணன். ஜெ. 1979, நடையியல், மதுரை, தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் நினைவு அறக்கட்டளை வெளியீடு.

**அடிக்குறிப்பு**

1. சோமலெ. இமயம் முதல் குமரி வரை. ப. 141.
2. சோமலெ. இமயம் முதல் குமரி வரை. ப. 160.
3. மேலது. ப. 69.
4. மேலது. ப. 79.
5. சோமலெ. இமயம் முதல் குமரி வரை. ப. 134.
6. மேலது. ப. 138.
7. சோமலெ. இமயம் முதல் குமரி வரை, ப. 22.
8. மேலது. ப. 7.
9. நீதிவாணன். நடையியல், ப. 47.
10. சோமலெ. செங்கற்பட்டு மாவட்டம், பக். 78 – 79.

**************************

ISSN : 2581-9712



# ஹாங்காங் தமிழர்களின் வாழ்வியல்

**முனைவர் சித்ரா,** ஹாங்காங்.

**வரலாறு**

ஹாங்காங் என்பது 261 தீவுகளைக் கொண்ட ஒரு சிறிய நகரம். இது ஒரு நாடு. அது ஹாங்காங் தீவு, கவ்லூன் தீபகற்பம் மற்றும் இதர தீவுகள் என்று மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து, இரண்டு அபின் போர்கள் மூலம் 1842இல் ஹாங்காங்கில் சீனச் சிங் வம்சத்தினரிடமிருந்து கைப்பற்றித் தக்க வைத்துக்கொண்டது. பிறகு 1898ஆம் ஆண்டு, இங்கிலாந்து ஒப்பந்தத்தின் பெயரில், ஆங்காங்கை 99 ஆண்டுகள் குத்தகைக்கு, சீனா இங்கிலாந்திற்குக் கொடுத்தது. ஹாங்காங் அதன்பின் ஆங்கிலேயர்களின் முன்னெடுத்தால், ஒரு சர்வதேச நகரமாக உருவாகத் தொடங்கியது. 1974 வரையில், ஊழல் மலிந்து, மருத்துவம் முதற்கொண்டு கையூட்டு மலிந்த நாடாக, மக்களின் வாழ்க்கை சிக்கல்கள் நிறைந்ததாக இருந்ததாம். மாணவர்களின் எதிர் குரலால் கையூட்டை அறவே நீக்கும் ICAC (Independent Commission Against Corruption) அமைப்பு உருவாகி ஹாங்காங் அமைதியான, முன்னேற்றத்தை நோக்கி வேகமாக நடைபோடும் நகரமாக மாறியது. 1997ஆம் ஆண்டு, சீனாவின் ஒரே நாடு இரண்டு அமைப்பு முறை என்ற கொள்கையின் படி, இங்கிலாந்து அரசால் ஹாங்காங் சீனாவிற்குத் திருப்பித் தரப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளில் சீனா தேர்ந்தெடுக்கும் மனிதர் தான் இதன் தலைமைப் பொறுப்பை ஏற்றார். கடந்த வருடம் ஜூன் மாதம் முதல் 2020 தேர்தலில், தாங்கள் விரும்பும் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பைக் கேட்டுப் போராட்டம் வலுவாகத் தொடங்கினது. 2014இல் நடந்த மஞ்சள் குடை போராட்டத்தை அடக்கியது போல், பாதுகாப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்தி, ஹாங்காங் மக்களைத் தற்போது கட்டி போட்டுவிட்டது சீன அரசு.

அடுத்ததாக ஹாங்காங் நகரைப் பற்றிய சில புள்ளி விவரங்களைப் பார்க்கலாம். இதன் நிலப்பரப்பு 1104 சதுரக் கிலோ மீட்டர் மட்டுமே. 75 லட்சம் மக்கள் தொகையில் இந்தியர்களில் ஏறக்குறைய 39 ஆயிரம் பேர் வரை இந்தியக் குடி உரிமையுடனும், 32 ஆயிரம் பேர்கள் வரை அயலார் குடி உரிமையுடனும் வாழ்கின்றனர். அதில் மூவாயிரத்திற்கும் அதிகமாகத் தமிழர்கள் உள்ளனர். ஹாங்காங்கின் ஒரு டாலருக்கு நம் இந்திய மதிப்பு ஒன்பது ரூபாய்க்கு மேல். நான் 1996 வந்தபோது அது ஐந்து ரூபாயாக இருந்தது. மக்கள் இங்கு அடர்த்தியாக வாழ்கின்றனர். ஒரு சதுரக் கிலோ மீட்டரில் கிட்டத்தட்ட 6777 பேர்கள் வாழ்கிறார்கள்.

ISSN : 2581-9712

ஹாங்காங் நகரம் பல சிறப்புகளைப் பெற்றது. மிகு விலையுள்ள நகரம் என்பதில் முதல் இடத்திலும், அதிக வானளாவிய கட்டடங்கள் கொண்ட நகரங்களில் முதலிடத்திலும், அதிகக் கோடீஸ்வரர்களைக் கொண்ட நகரம் என்பதில் இரண்டாம் இடமும், அதிக நேரம் பணிபுரியும் கலாச்சாரம் கொண்ட நாட்டில் இரண்டாம் இடமும் பெற்ற நாடு இது.

நான் இங்கு வாழ்ந்த இந்த வருடங்களில் சீனர் தமிழர் கலாச்சார ஒற்றுமையைக் கண்டிருக்கிறேன். பாரம்பரிய மருத்துவம், முன்னோர் வழிபாடு, இல்லங்களில் வழிபாட்டு மாடங்கள், வாஸ்து (Feng Shui), செம்மொழி மற்றும் சந்திர நாட்காட்டியைப் பயன்படுத்துதல் என்று பல கருத்துகளில் நாம் ஒத்துப் போகிறோம்.

இப்போது நாங்கள் வாழும் பகுதியைப் பற்றி கூற விரும்புகின்றேன். ஹாங்காங் சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் உள்ள லாங் டாப் தீவு பகுதியில் உள்ள இடம். நான் 69 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தின் 51ஆவது மாடியில் வசிக்கிறேன். இந்தப் பகுதியில் இருக்கும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களில், 300க்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் உள்ளன. இங்குள்ள விமான நிலையம் 1998ஆம் வருடத்தில், நிலப்பகுதியும் செயற்கை நிலப்பகுதியும் இரண்டையும் கொண்டு அமைக்கப்பட்ட ஒன்று. அத்துடன் கடந்த 10 ஆண்டுகளில் இங்கு மேலும் ஒரு செயற்கைத் தீவு உருவாக்கப்பட்டது. ஹாங்காங்கை மக்காவ் மற்றும் சீனாவின் ஜியோ கால் பகுதியை இணைக்கும் விதமாக, உலகின் 55 கிலோமீட்டர் நீளமான கடல் பாலம் வெற்றிகரமாகக் கட்டப்பட்டது. அதன் உருவாக்கத்தைத் தினம் கண்முன் காணும் வாய்ப்பு இந்தப் பகுதியினருக்குக் கிட்டியது. மேலும், தற்போது கடற்பரப்பை நிலப்பரப்பாகும் பணி மும்முரமாக நடந்து வருகிறது.

ஹாங்காங்கில் வந்து இறங்கிய முதல் தமிழன் யார் என்பது தெரியாத போதும் முதல் குழு யார் என்பது பதிவு செய்யப்பட்டுள்ளது. அதைப் பற்றி கூற வேண்டுமானால் நான் 1741ஆம் வருடத்திற்கு உங்களை இட்டுச் செல்ல வேண்டும். தமிழகத்தில் அரசருக்குக் காவலாக உருவாக்கப்பட்ட படை, மார்த்தாண்டவர்மன் மூலமாகப் பயிற்சி பெற்ற படையாக மாற்றம் பெற்று, 1940ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தின் பத்மநாபபுரத்தில் இருந்து கண்ணனூர் ராணுவ நிலையத்திற்கு வந்து தங்கியது. அதற்கு ஒன்பதாவது பட்டாளம் சென்னை படைப்பிரிவு என்று பெயர்.

இந்தப் படை பரமேஸ்வரன் பிள்ளை என்பவரின் தலைமையில் பல வருடங்கள் வெளிநாடுகளுக்குச் சென்று சேவை புரிந்தது. இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பான் ஹாங்காங்கைத் தாக்கியது. அப்போது 1945ஆம் வருடம், இந்தப் படைப்பிரிவு கைமாவில் புறப்பட்டு, ஹாங்காங்கில் பணியாற்ற வந்திறங்கியது. கௌலூன் பகுதியிலிருந்த, துறைமுகப் பகுதியில் இறங்கிய பட்டாளம் 150ஆவது இந்தியக் காலாட்படை பிரிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஜப்பானின் போர் கைதிகளையும் விமானங்களையும் கப்பல் துறைகளையும் பாதுகாக்கும் பொறுப்பு இந்தப் படைப் பிரிவுக்குத் தரப்பட்டது. மேலும், போர்க்கைதிகளை ஜப்பானுக்குத் திருப்பி அனுப்பும் பணியும் தரப்பட்டது.

ISSN : 2581-9712

1947ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் தேதி இந்தப் பட்டாளம் ஆங்காங்கே விட்டுப் புறப்பட்டுச் சென்னையில் இறங்கித் திருவனந்தபுரம் சென்றடைந்ததாம். இவர்கள்தான் நவீன காலத்தில் முதல் தமிழர்களாக மண்ணை மிதித்தவர்கள் என்று நான் அறிகிறேன்.

போர்கள் அடங்கியபின், ஹாங்காங் ஆங்கிலேயர்களின் முன்னெடுப்பால், ஒரு சர்வதேச நகரமாக உருவாகத் தொடங்கினது. அமெரிக்காவிற்கும் ஆசியாவிற்கும் நடுவில் அமைந்த காரணத்தால், அது நல்ல துறைமுக நகரமாகவும் வர்த்தக நகரமாகவும் அதன் நிலைமாறியது. இந்தியச் சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும், இந்தியர்கள் ஹாங்காங் நகருக்கு வந்து சென்ற வண்ணம் இருந்தனர் என்றே சொல்ல வேண்டும். பஞ்சாப், ராஜஸ்தான் மாநிலங்களைச் சேர்ந்த பலரும் இங்குத் தங்கி வாழத் தொடங்கினனர். ஹாங்காங் நகரம் கடத்தல்காரர்களின் கூடாரமாகப் பல ஆண்டுகள் நம்பப்பட்டு வந்ததை நாம் நம் தமிழ் திரைப்படங்களின் மூலம் அறிந்திருக்கின்றோம். ஆயினும் இங்கும் மக்கள் வாழ்ந்து கொண்டுதான் இருந்தார்கள்.

படை பட்டாளங்கள் மூலமாக வந்தவர்கள் கூறியதைக் கேட்டோ, இந்தியா, பாகிஸ்தான் பிரிந்தபோது தனக்கென்று நாடு இல்லாமல் போனதாலோ, சிந்தி மக்கள் பலரும், ஹாங்காங்கைத் தங்கள் நாடாக ஏற்கப் புலம் பெயர்ந்தார்கள். அப்போது குடியுரிமை சட்டங்கள் அவ்வளவாக இருக்கவில்லை. வந்தவர்கள் அனைவரையும் ஹாங்காங் அரவணைத்தது. 1950களில் இந்திய வங்கிகள் தொடங்கப்பட்டன. அங்குப் பணி செய்ய வந்தவர்களில் தமிழர்கள் இருந்தனர். ஹாங்காங்கில் இருக்கும் வாய்ப்புகளை அறிந்த சிலர் புதிய நிறுவனங்களைத் துவக்கினர். 1960களில் பர்மாவில் ஏற்பட்ட உறுதியற்ற நிலை காரணமாக, அங்கு வாழ்ந்த பலரும் பல இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். அப்படி வந்தவர்களில் பர்மியத் தமிழர்களும் இருந்தனர். 1970களில் ஆபரணக் கற்கள், வாசனை திரவியங்கள், கடிகாரங்கள் என்று பல்பொருள் விற்பனை வாணிபம் காரணமாகப் பல தமிழர்கள் ஹாங்காங்கிற்கு வந்தனர். தமிழர்களும் இந்தியர்களும் தொடங்கின நிறுவனங்களில் பணி புரியவும் பல தமிழர்கள் வந்தனர். 1980களில் சிறிது சிறிதாகத் தமிழர்களின் எண்ணிக்கை கூடி, தற்போது பொறியியல் மற்றும் கணினித்துறை வளர்ச்சியால் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழும் நகரமாக உள்ளது.

இனி ஹாங்காங்கில் தமிழர் வாழ்வியலைப் பல்வேறு கூறுகளில் கூற விழைகிறேன். தொழில், உணவு, கல்வி, சமூகம், பொது நலச் சேவை, விருதாளர்கள், பொழுது போக்குகள், கலை, விளையாட்டு, பண்பாடு, ஆன்மிகம், ஊடகம் என்ற தலைப்புகளில் அதைக் கூற முயல்கிறேன்.

**தொழில்**

நான் ஏற்கனவே சொன்னது போல் தமிழர்கள் வணிகர்களாகவும் வங்கி பணியாளர்களாகவும் கணக்கர்கள் ஆகவும் தணிக்கையாளர்கள் ஆகவும் அலுவலகப் பணியாளர்கள் ஆகவும் என்ற படிநிலைகளில் பணியாற்றுகின்றனர். ஹாங்காங்கில் வாழும் மற்ற ஆசிய

ISSN : 2581-9712

நாட்டினரைக் காட்டிலும் இந்தியர்களும் தமிழர்களும் நல்ல நிலையில் வாழும் வாய்ப்பினைப் பெற்றவர்கள். மருத்துவர்கள், பேராசிரியர்கள் சிலரும் உண்டு. கணவனின் வேலை நிமித்தமாக இடம்பெயர்ந்த குடும்பத்தில், நன்கு கற்றறிந்த பெண்கள் பலரும், படிப்பிற்குத் தகுந்த வேலைக் கிடைக்காத காரணத்தால், கல்வித் துறையில் நுழைந்து, சிறந்த ஆசிரியர்களாகத் திகழ்கிறார்கள். கடந்த 15 வருடங்களாக யோகா மிகவும் பிரபலமான பயிற்சி அதன் காரணமாக யோகா பயிற்றுநராகப் பல தமிழர்கள் இங்கு வந்துள்ளனர்.

**வேலை வாய்ப்பு**

இந்த நேரத்தில், ஹாங்காங்கில் வேலைப் பற்றியும் சிறிது கூற விரும்புகின்றேன். வேலைக்கான அயல்நாட்டு நுழைவு சான்று இருந்தாலொழிய வேலைப் பெறுவது இங்கு முயற்கொம்பே. ஆயினும், குடும்பத்தில் ஒருவருக்கு நுழைவு சான்று இருந்தால் மற்றவருக்குச் சார் நுழைவு சான்று தரப்படும். அமெரிக்காவைப் போல் அல்லாமல், அவர்கள் வேலைச் செய்வதில் தடையேதும் இல்லை. ஏழு வருடங்கள் வரை, வேலைச் செய்யும் நிறுவனம் நுழைவு சான்று பெற்றுத்தர வேண்டும். அதற்குப் பிறகு குடியுரிமை பெற்றுக் கொள்ளலாம். அதன் அடிப்படையில், வேலைப் பெறுவது சிறிது எளிதாக இருக்கும். ஹாங்காங் கடவுச்சீட்டு அதைச் சீனக் கடவுச்சீட்டு ஆகவும் கொள்ளலாம். அதைப் பெறும் வாய்ப்பும் உண்டு. 1997இல் ஹாங்காங் சீனாவிற்குக் கை மாறியபோது, பல இந்தியர்களும் தமிழர்களும் ஆங்கிலக் கடவுச்சீட்டு, BNO என்று அழைக்கப்படும் கடவுச்சீட்டைப் பெறும் வாய்ப்பு கிட்டிய போது பயன்படுத்திக் கொண்டனர்.

**உணவு**

அடுத்ததாக உணவு பற்றிய விவரங்களைத் தர விரும்புகின்றேன். நான் 1996இல் வந்தபோது 2 தமிழ் உணவகங்கள் இருந்தன. இப்போது அது எண்ணிக்கையில் பெருகிப் பல சுவைகரமான உணவுகளைத் தருகின்றன. இந்தியர்கள் மட்டுமல்லாமல் பல நாட்டவரும் விரும்பி வந்து உண்ணும் இடமாக இவை உள்ளன. எங்கள் வீடுகளில் தமிழர் உணவு வகைகளைத்தான் பெரும்பான்மையானவர்கள் சமைத்து உண்கின்றோம். அதற்கு ஏதுவாக உணவுப் பொருள்கள் தமிழகத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு இந்திய மற்றும் தமிழகக் கடைகளில் விற்கப்படுகின்றன. இட்லி அரிசி கூடக் கிடைக்காத நிலை மாறி, நம்முடைய பாரம்பரியத் தானிய வகைகளான கேழ்வரகு, தினை, சாமை, வரகு, கம்பு, குதிரைவாலி ஆகியவை கூட இங்குக் கிடைக்கும் நிலை உள்ளது.

**கல்வி**

வேலை மற்றும் உணவுக்குப் பின் என்ன? குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கான கல்வி அல்லவா! அதைப் பற்றி நான் அறிந்ததைக் கூறுகிறேன்.

ஹாங்காங்கில் அரசு கல்விக் கொள்கை கீழ் உள்ள, அரசு மற்றும் தனியார் பள்ளிகளும், பல நாட்டவர்கள் அமைந்துள்ள சர்வதேசப் பள்ளிகளும் உண்டு. ஹாங்காங்கில் பேசப்படும் மொழி கான்டோனிய (Cantonese) எனப்படும். சீன நாட்டில் பேசப்படும் மொழி மாண்டரின் அல்லது புதுங்வா (Putonghua) எனப்படும். இந்த இரண்டு மொழிகளும் பள்ளிகளில்

ISSN : 2581-9712

கற்பிக்கப்படுகின்றன. பிரெஞ்சு, ஸ்பானிய, ஜப்பானிய, கொரியப் போன்ற சர்வதேச மொழிகள் பலவும் கற்பிக்கப்படுகின்றன. ஹாங்காங்கில் அமைந்துள்ள பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுவதில்லை.

அதனால் தமிழர்களின் குழந்தைகள் தமிழ் கற்கும் வாய்ப்பினைக் கொடுக்க வேண்டும் என்று எண்ணி 2003ஆம் வருடம் முதலாக இளம் இந்திய நண்பர்கள் குழு தமிழ் வகுப்புகளை நடத்தி வருகின்றது. இதுவரை 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர். வருடம்தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில்கின்றனர். இவர்களுக்கு 30க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பலன் கருதாது ஆசிரியர்களாகவும் உதவியாளர்களாகவும் ஒருங்கிணைப்பாளராக இருந்து, பள்ளியை நடத்தி வருகின்றனர். வாரத்தில் சனிக்கிழமை 3 முதல் 5 மணி வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அண்மையில் இதன் தரத்தை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்லும் வண்ணம் YIFC Academy for Education and Enrichment என்று பெயர் மாற்றம் கொடுத்து, தமிழ் மொழிக்கல்வி மட்டுமல்லாமல், தமிழகக் குழந்தைகளின் திறன் வளர்க்கும் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**தமிழ்ச் சமூகம்**

தொழில், கல்வி, உணவு இவை குடும்பத்திற்கான அடிப்படை உறுப்புகள். இவை கிடைத்ததும் அடுத்ததாகச் சமூகத்துடன் நண்பர்களுடன் இணைய விரும்புவோம் அல்லவா? அதன் பலனாகத் தான் இங்குப் பல சங்கங்கள், குழுக்கள் உருவாயின என்று சொல்லலாம்.

அதில் முதலாவது முக்கியமானதும், தமிழ் பண்பாட்டு கழகம். 1960களில் தங்கள் குடும்பத்துடன் வசிக்கத் தொடங்கின தமிழர்கள், தங்கள் மண்ணின் நினைவுகளை நெஞ்சில் தாங்கிக்கொண்டு, சீனர்களுடன் மொழி காரணமாக அதிகம் கலக்க முடியாமல், தன் தமிழ் உறவுகளைத் தேடிச் சென்று, கூடி மகிழ்ந்தனர். விடுமுறை நாட்களில் பொழுதைக் கழித்த சுற்றுலா சென்றனர். கூட்டங்களைக் கூட்டிக் கலந்துரையாடினர். தமிழ் திரைப்படங்களைக் காண முடியாமல் தவித்த திரைப்பட விரும்பிகள், தமிழகத்திலிருந்து படங்களை வரவழைத்துத் திரையிட முயன்றனர். அப்போது உருவாகியதே தமிழ் பண்பாட்டு கழகம். அரசின் அனுமதியுடன் கழகம் 1967இல் பதியப்பட்டது. தமிழ் திரைப்படங்களைப் பார்ப்பதற்குத் திரையரங்குகளை வாடகைக்கு அமர்த்தவும், அரசாங்க அனுமதி பெறவும், ஒரு சங்கம் இருந்தால் வசதியாக இருக்கும் என்று கருதியே கழகம் தொடங்கப்பட்டதாக அதன் மூத்த உறுப்பினர் திரு யூனுஸ் ஐயா குறிப்பிடுவார். இந்த முயற்சியில் முக்கியப் பங்கு வகித்தவர் பலநாடுகளில் தன் திறனைக் காட்டிய திரு பி. எஸ். அப்துல் ரஹ்மான் அவர்கள். கழகத்தின் முதல் தலைவராகத் திரு புகாரி ஆனார். இதே சமயத்தில் தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா முதலமைச்சர் பொறுப்பேற்றார். அவர் அந்த வருடத்தில், அமெரிக்கா சென்று திரும்பும் வழியில், ஹாங்காங் வரும் வாய்ப்பு ஏற்பட்டது. அண்ணா அவர்களுக்கு மிகச் சிறப்பான வரவேற்பு கழகத்தின் முதல் வரவேற்பு நிகழ்ச்சியாக அமைந்தது. அதற்குப் பிறகு பல அரசியல் தலைவர்களுக்கு வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

கழகம் தொடங்கினதற்கு மற்றொரு முக்கியக் காரணம் பட்டிமன்ற நிகழ்வுகள். பேச்சு மற்றும் பட்டிமன்றங்கள் வருடம்தோறும் நடத்தப்பட்டு வந்துள்ளது என்பதையும் அறிகிறோம்.

தமிழ் பண்பாட்டு கழகம் 50 ஆண்டுகள் கடந்தும், இன்று வரையிலும் தமிழர்களுக்குப் பல சிறந்த நிகழ்வுகளையும் திரைப்படங்களைத் திரையிட்டு மகிழ்ச்சியில் ஆழ்த்தி வருகிறது. மகளிர் மட்டும் என்று பெண்களுக்கான நிகழ்ச்சி, அரும்புகள் என்று குழந்தைகளுக்கான நிகழ்ச்சி, உடல் நலத்தைக் காக்க விளையாட்டுப் போட்டிகள், கூடி மகிழச் சுற்றுலா நிகழ்ச்சிகள், தமிழ் அறிவைப் போற்றத் தமிழகத்திலிருந்து அறிவார்ந்த சான்றோர்களின் உரை நிகழ்வுகள், கேட்டு மகிழச் சிறந்த இசை நிகழ்ச்சிகள், உயிர்த்து உணர நாடகங்கள் என்று பல தரப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தித் தமிழர்களின் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளது.

1960களில் இசுலாமியர்களுக்கான கழகமும் தமிழர்களால் தொடங்கப்பட்டது. விளையாட்டில் தமிழர்கள் ஈடுபட வேண்டும் என்ற நோக்கிலேயே இளம் இந்திய நண்பர்கள் குழு தொடங்கப்பட்ட போதும், தற்போது விளையாட்டு மட்டுமல்லாமல் தமிழ் கல்வியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

தமிழ் பண்பாட்டு கழகத்தின் நிகழ்வுகளில் குழந்தைகள் பங்குகொண்டு தமிழ் உணர்வினைப் பெறவேண்டும் என்ற நோக்கில் தொடங்கப்பட்ட குழு, தமிழ் குழந்தைகள் கலைக்குழு. நாடகம் நடனம் வினாடி–வினா போன்ற நிகழ்வுகளில் குழந்தைகளை ஈடுபடுத்தி வரும் குழு. துங் சுங் பகுதியில் வாழும் முஸ்லிம்களின் நலனைப் பேண அமைக்கப்பட்டது துங் சுங் தமிழ் முஸ்லிம் ஜமாத். இவை அனைத்தும் ஹாங்காங் அரசுடன் பதிவு செய்யப்பட்ட குழுக்கள்.

இந்தக் கழகம் மற்றும் குழுக்களைத் தவிரவும் குறிப்பிடப்பட வேண்டிய மற்றொரு குழு இலக்கிய வட்டம் என்பது. பதிவு செய்யப்படாத போதும், தமிழில் ஆர்வம் கொண்ட, தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட, தமிழர்கள் மாதம்தோறும் கூடி ஆலோசனைப் படி நிகழ்ச்சியை நடத்த ஏற்படுத்தப்பட்ட குழு. இந்த இலக்கிய வட்டத்தில், திருக்குறள் தொடங்கிப் பல்வேறு இலக்கியங்களை அறிஞர்கள் ஆர்வத்துடன் அலசி ஆய்ந்தனர். இதன் வெள்ளி விழா கூட்டத்தின் போது ஒரு மலரும் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**பொது நலச் சேவை**

உலகிலே பல நேரங்களில் மக்கள் பேரிடர்களால் அல்லல்படுகின்றனர். அவர்களுக்கு உதவ ஹாங்காங் தமிழர்கள் என்றுமே தயங்கியதில்லை. அதைத் திறம்படச் செய்யத் தமிழ் பண்பாட்டு கழகம் இருக்கிறதல்லவா? ஆழிப்பேரலை, வெள்ளம், நிலநடுக்கம் என்ற பேரிடர்களால் அல்லல் பட்டவர்களுக்கு நன்கொடை வசூலித்து நிதி உதவி செய்தது. மேலும், தமிழர்கள் கூடி, நிகழ்ச்சிகளை நடத்தி, தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்ததும் உண்டு. ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கைகாக உதவி கூறக் கோரப்பட்ட போது, ஹாங்காங் தமிழர்களும் நன்கொடை அளித்தனர்.

குஜராத்தைச் சேர்ந்த திரு டீகே பட்டேல் என்பவர் எண்ணத்தில் உருவான, கண் பார்வையற்றவர்களின் கல்விக்கான ஹெல்ப் தி லைன் பவுண்டேஷன் அமைப்பு (Help the Blind Foundation) தமிழகத்தில், முக்கியமாக மதுரை பகுதியிலும், மற்ற பகுதிகளிலும் உள்ள கண் பார்வையற்றவர்களுக்குக் கல்விக்கான உதவித் தொகையை அளித்து வருகிறது, இதைத் திரு ஜே. வீ. ரமணி என்பவர் முன்னின்று, இன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண் பார்வையற்ற பட்டதாரிகளாக உருவாக்கி, வேலைக்குத் தகுதி உள்ளவர்களாக அவர்களை மாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் இதன் மூலம் பயன்பெறுவது தமிழன்னைக்குச் செய்யும் சேவையாகவே நான் கருதுகிறேன். அந்த அமைப்பில் பணியாற்றும் அனைத்துத் தன்னார்வலர்களும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**விருதாளர்கள்**

தமிழர்கள் ஹாங்காங் நகரில் வாழ்வது மட்டுமல்லாமல், பல சேவைகளைச் செய்து வருவதை நாம் பார்த்தோம். அதில் சிலருக்கு விருதுகள் கொடுத்து ஊக்கப்படுத்தி உள்ளதை இப்போது பார்ப்போம். வெளிநாட்டு வாழ் இந்தியர் விருதினை 2005ஆம் ஆண்டு இந்திய அரசு திரு எம். அருணாசலம் அவர்களுக்கு வழங்கியது. அதை நம் மக்கள் குடியரசுத் தலைவரான மருத்துவர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் அவர்களிடம் பெரும் பேரினைத் திரு அருணாசலம் பெற்றார். மேலும், ஹாங்காங் அரசின் உள்துறை அமைச்சகத்தின் விருதினை இரண்டு தமிழர்கள் பெற்றுள்ளனர். 2016ஆம் ஆண்டு திருப்பதி நாச்சியப்பன் அவர்களும் திரு முகமது நூகூ அவர்களும் ஹாங்காங் தலைவர் திருமதி கேரி லாம் அவர்களிடமிருந்து பெற்றனர்.

**பொழுது போக்குகள்**

இனி வேலை நேரம் போக, குழந்தைகள் படிக்கும் நேரம் போக, மற்ற நேரங்களில் என்ன செய்கின்றனர் என்று பார்ப்போம். இங்கு அவர்கள் பலவிதமான பொழுதுபோக்குகளில் ஈடுபடுகின்றனர். இல்லங்களில் ஒன்று கூடுதல், பலவித விளையாட்டுகளில் ஈடுபடுதல், கடற்கரைகளிலும் பொது மற்றும் தனியார் நீச்சல் குளங்களில் நீச்சல் பழகுவது, மலையேற்றம், நெடுந்தூர ஓட்டம், நெடுந்தூர நடை செய்வதும், சுற்றுலா செல்வதும், நீண்ட விடுமுறை நாட்களில் வெளிநாடுகளுக்குப் பயணம் செல்வது என்று பல உண்டு. அத்துடன் பெற்றோரும் குழந்தைகளும் கலைகளைக் கற்பதிலும், திறன்களைக் காட்டும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும், போட்டிகளை நடத்திப் பங்கு கொள்வதிலும் தங்களைத் திறன்களை வளர்த்துக் கொள்ள முயல்வதும் உண்டு.

**முத்தமிழ் – கலைகள்**

தமிழர் கலை என்றால் முத்தமிழ் சார்ந்தது அல்லவா? அதனால் ஹாங்காங் மக்கள் கலையின் பால் காட்டும் ஆர்வத்தினை இயல், இசை, நாடகம் மூலமாகக் கூற விரும்புகின்றேன்.

**இயல்**

பேசுவதும் எழுதுவதும் இயல் சார்ந்தவை. ஹாங்காங் தமிழ் பண்பாட்டு கழகம் பல தமிழ் அறிஞர்களை அழைத்து அவர்களது கருத்துகளை இங்கு வாழும் தமிழர்களுக்குக் கொண்டு சேர்த்துள்ளது. திரு நெல்லை கண்ணன், திரு சாலமன்

ISSN : 2581-9712

பாப்பையா, திரு சுகிசிவம், பேராசிரியர் திருஞானசம்பந்தன், பேராசிரியர் பர்வீன் சுல்தானா, திரு கோபிநாத், திரு மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் என்று பல சான்றோர்களை ஹாங்காங் தமிழர்கள் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. சின்னத்திரையைக் கலக்கும் நகைச்சுவை நட்சத்திரங்களும் திரை இசைக் கலைஞர்களும் தமிழர்களைச் சிரிக்கவும் மகிழவும் செய்துள்ளனர்.

ஹாங்காங்கில் பல விழா மலர்கள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ் பண்பாட்டு கழகத்தின் மலர்களும், வெள்ளிவிழா மலரும், பொன்விழா மலர் “நெய்தல்” என்ற தலைப்பிலும் வெளியிடப்பட்டன. தமிழ் பண்பாட்டு கழக மலர்கள் யாவும், பல ஹாங்காங் தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்களை வெளி கொணர்ந்தது. ஹாங்காங் மக்கள் இங்கு வாழும் தமிழர்களைப் பற்றி அறியும் வண்ணம் கல்சுரல் ஒடிசி (Cultural Odyssey) என்ற பெயரில் ஆங்கிலக் கையேடாக வெளியிடப்பட்டுச் சர்வதேச விழாக்களின் போது வினியோகிக்கப்பட்டது.

இலக்கிய வெள்ளி என்பது இலக்கிய வட்ட வெளியீடு. எனது பர்மா குறிப்புகள் நூல் வெளியீட்டு சிறப்பு மலர், 2010இல் வெளியிடப்பட்டது. பத்தாம் ஆண்டு நிறைவினை ஒட்டி ‘தாய்த்தமிழ்’ என்ற மலரை, இளம் இந்திய நண்பர்கள் குழு வெளியிட்டது.

தமிழ் மொழிக்காக, பல ஹாங்காங் வாழ் தமிழர்கள் பணிகளைச் செய்துள்ளனர். சைனீஸ் லாங்குவேஜ் அன் இன்றோடக்சன் (Chinese Langugae : An Introduction) என்ற நூல் இந்தியத் தூதரக அதிகாரி திரு ஸ்ரீதரன் என்பவரால் எழுதி வெளியிடப்பட்டது. தமிழில் சீன மொழியான மாண்டரின் கற்பதைப் பற்றிய நூல் இது. மேலும், அவர் சீன இலக்கியமான சி ஜிங் (Shi Jing) என்ற நூலில் உள்ள கவிதைகளை மொழிபெயர்த்து வாரிச் சூட்டினும் பார்ப்பவர் இல்லை என்ற தலைப்பில் கவிதைத் தொகுப்பினை வெளியிட்டுள்ளார்.

பர்மாவில் இருந்து புலம் பெயர்ந்து, ஹாங்காங்கில் 40 வருடங்களுக்கு மேலாக வசித்து வந்த திரு முகமது யூனுஸ் ஐயா அவர்களின் பர்மா வாழ்க்கை அனுபவங்களைத் தொகுத்து, எனது பர்மா குறிப்புகள் என்ற நூல் வடிவில் தந்தார் திரு ராமநாதன் அவர்கள். கட்டிடக்கலை வல்லுனர் ஆனாலும், தமிழின் பால் கொண்ட பேரன்பால் 10 பேர்கள் கொண்ட தமிழர் குழுவின் உதவியுடன், முகமது யூனுஸ் அய்யா கூறக் கூற அதை நாடாவில் பதிவு செய்து, அதைக்கேட்டு, தட்டச்சு செய்து, நூலாக வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. பர்மாவில் தமிழர் நிலையை அழகாக எடுத்துக் காட்டும் நூல் இது.

திரு பிரசாத் அவர்கள் தான் விரும்பிப் பயின்ற கம்பராமாயணம் பற்றி மிகவும் அழகாக ஆய்ந்து தன் அனுபவங்களை இணைத்து, என் நினைவலைகளில் கம்பன் என்று வலை பதிவை வெளியிட்டார். திரு ராமநாதன் அவர்கள் பல்வேறு தலைப்புகளில் இணைய இதழான திண்ணையிலும் காலச்சுவடு இதழிலும் இன்று சென்னை திரும்பிய போதும் ஹாங்காங் நிகழ்வுகளை 5 ஹிந்து நாளிதழிலும் எழுதித் தமிழ் ஆர்வத்தைத் தொடர்ந்து வருகிறார்.

ISSN : 2581-9712

ஹாங்காங்கில் வாழும் போது, சிறுவர்களுக்கான பல நூல்களை வெளியிடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. மாப்பிள்ளைப் பதிப்பகம், பழனியப்பா பிரதர்ஸ் மற்றும் மணிமேகலை வெளியீடு வழியாக ஏழு தமிழ் நூல்களை வெளியிட்டு உள்ளேன். மேலும், திண்ணை இணைய இதழில் தொடர் கட்டுரைகளையும் சுட்டி விகடனில் ஜாக்கி சான் பற்றிய சாகச நாயகன் என்ற தொடரையும் வீரகேசரி இதழுக்குச் சீன ஜோதிடம் என்ற தலைப்பில் ஒரு தொடரையும் வழங்கியுள்ளேன். தினசரிகளில் மாணவர் பக்கத்திற்குக் கட்டுரைகளை எழுதியுள்ளேன்.

**இசை**

ஹாங்காங்கில் தமிழர்களின் இசை ஆர்வம் மிகவும் சிறப்பானது. கர்நாடக இசையைப் பல ஆசிரியர்கள் கற்றுத்தருகிறார்கள். தமிழிசை என்று எடுத்துக்கொண்டால், திருப்புகழ் கோயிலில் சஷ்டி தினங்களில் தவறாமல் பாடப்பட்டு வருகிறது. மேலும், இசை ஆசிரியை கணக்கா பாலசுப்பிரமணியம், தன் மாணவி உமையாளுடன் சேர்ந்து திருப்புகழ் பாடல்கள் அடங்கிய குறுந்தகட்டை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ் பண்பாட்டு கழகம் பல இசைக் கலைஞர்களை அழைத்துச் சிறப்பித்துள்ளனர். கதிரி கோபால்நாத் மற்றும் மாண்டலின் ஸ்ரீநிவாஸ் நிகழ்வுகள் நெஞ்சில் நின்றவை. பன்முக இசை கலைஞர் திரு கங்கை அமரன் அவர்களும் தமிழர்கள் ஏற்பாடு செய்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். இளைஞர்கள் நிரம்பிய குழுக்களையும் கழகம் ஒத்துழைப்பு கொடுத்து உள்ளது என்றே சொல்லவேண்டும். யோதக்கா குழுவினர் நினைவில் நிற்கும் நிகழ்ச்சியைக் கொடுத்துச் சென்றனர்.

தனியாரால் நிகழ்த்தப்பட்ட இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் அவர்களின் பிரம்மாண்டமான இசை நிகழ்ச்சியைக் கண்டு களித்தது பல மனங்களில் நீங்காமல் நின்ற நிகழ்ச்சி. பின்னர் டிரம்ஸ் சிவமணி அவர்களும் வந்து இங்குக் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளும் உண்டு. லால்குடி ஜெயராமன் அவர்களின் வழிவந்த ஜே.விஜயலட்சுமியும் ஜே.கிருஷ்ணனும் வயலின் இசையை வழங்கிச் சிறப்பித்தனர்.

இன்னிசை தரும் இசைக்கருவி நிகழ்வுகளும் ஏராளம். உலகின் தலைசிறந்த தமிழகக் கலைஞர்கள் பலரும் ஹாங்காங்கில் இசை விரும்பிகளுக்கு நல்விருந்து அளித்துள்ளார்கள். அவர்களில் இந்தியா பை த வே என்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற வயலின் வித்வான் பத்மபூஷன் எல்.சுப்பிரமணியம் மற்றும் கடம் வித்வான் பத்மபூஷன் விக்கு விநாயகராம் குறிப்பிடத்தக்கவர்கள். அதேபோன்று புகழ்பெற்ற பாடகர்கள் தங்கள் குரல்களால் ஹாங்காங் மக்களை வசீகரித்து உள்ளனர். அதில் பத்மவிபூஷன் யேசுதாஸ் அவர்கள் மலையாளச் சங்கம் நடத்திய நிகழ்ச்சியில், பல தமிழ் பாடல்களைப் பாடித் திகைக்கவைத்தார்.

ஹாங்காங் அரசு வருடா வருடம் நடக்கும் கலை விழாவில் வயலின் வித்வான் குமரேஷ் அவர்களும் வீணை வித்வான் ஜெயந்தி குமரேஷ் அவர்களும் பங்குகொண்டு சிறப்பித்தனர்.

ஹாங்காங்கில் “இன்றுவரை வாழும் தமிழ் இசை” என்ற தலைப்பில் ஒரு ஆய்வு

ISSN : 2581-9712

கட்டுரை கடந்த வருடம் முதலாவது உலகத் தமிழர் மாநாட்டில் ஒப்படைக்கப்பட்டது.

**நடனம்**

தமிழ் பண்பாட்டு கழகம் மற்றும் பிற அமைப்புகள் நடத்தும் நிகழ்ச்சிகளில் நம் தமிழகத்தின் பாரம்பரிய நடனங்கள் ஆன மயிலாட்டம், ஒயிலாட்டம், கும்மி, கோலாட்டம், காவடியாட்டம் பலமுறை இடம்பெற்றது உண்டு.

தமிழ்நாட்டின் கலாச்சாரத்தின் சான்றாக விளங்கும் பரதக் கலையின் தாக்கமும் ஹாங்காங்கில் அதிகம். இதைப் பல ஆசிரியர்கள் கற்றுத்தருகிறார்கள். ஸ்ரீராமா தொடங்கி ரஞ்சனி மேனன், சந்தியா கோபால், தேவி பாபு, ரூபா நாகராஜ், ஒக்சானா போன்ற ஆசிரியர்கள், பல நடனக் கலைஞர்களை உருவாக்கியுள்ளனர். இதுவரை 20க்கும் மேற்பட்ட மாணவிகள் அதைக் கற்று அரங்கேற்றமும் செய்துள்ளனர். அவர்களைப் பற்றிய விபரங்களை அடங்கிய நூலும் குழந்தைகள் கலைக் குழு மூலமாக வெளியிடப்பட்டுள்ளது.

**நாடகம்**

“ஹாங்காங்கில் நாடகம்” இந்தத் தலைப்பில் தனியே ஒரு கட்டுரையே எழுதலாம். அத்தனை விவரங்கள் அதில் அடங்கும். தமிழகத்திலிருந்து நாடகக்குழுக்களை அழைத்து, நாடகங்கள் அரங்கேறியுள்ளன கிரேசி மோகன் மற்றும் வை. ஜி. மகேந்திரன் குழுக்களின் நாடகங்கள் தமிழர்களுக்குத் தமிழகத்தில் உள்ளது போன்ற உணர்வினைத் தந்தது என்றே கூறலாம். தமிழ் பண்பாட்டு கழகம் நாடக விழா என்று மூன்று ஆண்டுகள் போட்டியாக நடத்தி, உள்ளூர் தமிழர்களின் நாடகங்களை அரங்கேற்றி, அவர்களுக்கு ஊக்கம் அளித்தனர். ஒவ்வொரு ஆண்டும் தமிழ் பண்பாட்டு கழக நிகழ்வின்போது பல நாடகங்கள் குழந்தைகள் மற்றும் பெரியோர் பங்கேற்ற நாடகங்கள் கண்களுக்கு விருந்தாக அமைந்தன.

கூத்துப்பட்டறையில் பயிற்சி பெற்ற இந்தியத் தூதரக அதிகாரி திரு ஸ்ரீதரன் அவர்களின் முன்னெடுப்பில், ஒரு சிறந்த நாடகம் பார்க்கும் வாய்ப்பு ஹாங்காங் தமிழர்களுக்குக் கிடைத்தது. பல மாதங்கள் பயிற்சி பெற்ற பின், “நிரபராதிகளின் காலம்” என்ற நாடகம் மிகச் சிறந்த முறையில் அரங்கேறியது. அதைத் தொடர்ந்து அவரது மேற்பார்வையில், திரு ராமநாதன் இயக்கி, பாரதியின் பாஞ்சாலி சபதமும் மேடை நாடகமாக அரங்கேறியது.

தமிழ் பண்பாட்டு கழகத்தின் மேடைகளில் 30 நிமிட நாடகங்கள் நடத்திய அனுபவத்தின் பேரில், குழந்தைகள் கலைக் குழு தங்கள் பங்கிற்கு, இரண்டு மணி நேர முழு நாடகம், குழந்தைகள் மட்டுமே நடித்து, அரிச்சந்திரனின் வாழ்க்கை கதையை “உண்மையே உன் விலை என்ன?” என்ற பெயரில் மேடையேற்றியது.

தமிழர்கள் என்றுமே கண்டு களிக்க விரும்பும் திரைப்படங்களுக்கும் ஹாங்காங்கில் தற்போது பஞ்சமில்லை. திரைப்படங்களை திரையிட ஏதுவாக தொடங்கப்பட்ட தமிழ் பண்பாட்டுக் கழகம் தொடக்கத்தில் பல படங்களை திரையரங்குகளில் திரையிட்டனர். இடையிலே காணொளி நாடா, விசிடி, சிடி வந்தபின் சற்று தொய்வு ஏற்பட்டபோதும், மீண்டும் திரைப்படங்களை தமிழகத்தில் இருந்து பெற்று திரையிடுவது துவங்கி,

ISSN : 2581-9712

இன்று ஓராண்டிற்கு பல திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.

ஒரு முறை, சர்வதேசத் திரைப்பட விழாவின் போது பாரதியார் படம் திரையிடப்பட்டது. ஹாங்காங்கில் உலகம் சுற்றும் வாலிபன் இல் தொடங்கிப் பல படங்களின் படப்பிடிப்புகள் இங்கே நிகழ்ந்துள்ளன.

**விளையாட்டு**

கேளிக்கைகளில் அடுத்த முக்கிய வகை விளையாட்டு. இங்குத் தமிழர்கள் பலரும் ஒன்று கூடி மட்டைப்பந்து, கால்பந்து விளையாடுகிறார்கள். குழுக்களை அமைத்து, குழுக்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொள்வர்.

குழுக்களாக விளையாட முடியாத பலர், இறகுப் பந்து விளையாட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். தமிழ் பண்பாட்டு கழகம் பல ஆண்டுகளாக ஆண்டுதோறும் இறகுப்பந்து போட்டிகளை நடத்தி வருகிறது. நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஒரு நாள் முழுவதும் விளையாடும் வாய்ப்பினைப் பெற்று வருவது பயிற்சியின் பயனைக் காட்டி வருகிறது. இது போன்று, கடந்த சில வருடங்களாகக் கபடி போட்டிகளும் நடந்து வருகிறது.

தயாள் இறகுப்பந்து போட்டி, கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஹாங்காங் இந்தியர்களின் விருப்பமான போட்டியாக அமைந்துவிட்டது. 200க்கும் மேற்பட்ட, பல நாட்டினர் கலந்து கொள்ளும் இந்தப் போட்டியை, இந்திய இறகுப் பந்து வீரர் திரு தயாளன் அவர்கள் முன்னெடுப்பால், பல தமிழ் ஆர்வலர்களின் உதவியுடன் நடந்து வருகிறது. மேலும், கடந்த சில வருடங்களாக ஹெல்த் பவுண்டேசன் இதுவும் ஒரு இறகு பந்து போட்டி நடத்தப்பட்டு வருகிறது.

குழந்தைகள், பெரியவர்கள், முதியவர்கள் அனைவரையும் உற்சாகப்படுத்தும் வகையில் கடந்த பல ஆண்டுகளாக ஐ.எஃப்.சி விளையாட்டு விழாவினை நடத்தி வருகிறது. ஓட்டப்பந்தயம் தொடங்கிப் பல போட்டிகளைப் பல வயதினருக்கும் ஏற்ற வகையில் நடத்தி, தமிழர்களை உடற்பயிற்சி பக்கம் அழைத்துச் செல்வதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

முன்பே கூறியது போல், யோகம் ஹாங்காங்கில் சீனர்கள் நடுவிலும் மிகவும் பிரபலமான ஒன்று. இதில் பயிற்றுநர்கள் பலரும் தமிழகத்தில் இருந்து வந்தவர்கள். அதில் யோகராஜ் என்று அழைக்கப்படும் பூவேந்திரன் அவர்கள் 3 கின்னஸ் சாதனைகளைச் செய்து தன் யோகத் திறனைக் காட்டியுள்ளார். அதே போன்று, யுவ தயாளன் அவர்கள் நூற்றுக்கணக்கில் கூடி ஒரு யோக நிலையில் நின்று கின்னஸ் சாதனை ஒன்றை நிகழ்த்திக் காட்டினார். யோகா என்பது இங்கு மிகவும் சிறப்பான முறையில் பயிற்றுவிக்கப்பட்டு, அதைத் தமிழர்களும் தங்கள் உடல் நலனைப் பேணச் செய்து வருவதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் இங்கே உண்டு. தமிழர் திருநாளைக் கொண்டாடும் போது உரியடி, கயிறு இழுக்கும் போட்டி நடத்தப்படுகின்றன. சேவை நிறுவனங்கள் ஏற்பாடு செய்யும் விழாக்களின்போது பல்லாங்குழி, ஒத்தையா ரெட்டையா, ஐந்து

ISSN : 2581-9712

கல் விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

**பண்பாடு**

ஆதி காலம் தொட்டே, தமிழர்கள் தாங்கள் எங்கே சென்றாலும் தங்கள் பண்பாட்டையும் உடன் எடுத்துச் செல்வார்கள் என்ற கூற்றை நான் செய்த தமிழ் கொரிய மற்றும் தமிழ் சுமேரியா ஆய்வுகளின் மூலம் தெளிவாகப் புரிந்து கொண்டேன். அதற்கு ஹாங்காங் தமிழர்களும் விதிவிலக்கல்ல. தமிழர் விழாக்களை மிகவும் ஆர்வத்துடன் கொண்டாடுவார்கள். பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு, தீபாவளி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வரும் விழாக்கள். சீனர்களும் பல பாரம்பரிய விழாக்களைக் கொண்டாடுகின்றனர். அதில் கலந்து கொண்டு, அந்த விழாக்களில் சிறப்புகளை அறிந்து கொள்கின்றனர். அச்சமயத்தில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்றுள்ளனர்.

உலகத்தில் பெயர் பெற்ற ஹாங்காங் சீனப் புத்தாண்டு விழா அணிவகுப்பு பல நாட்டுக் கலாச்சாரங்களைக் காட்டும் ஒரு பிரம்மாண்டமான நிகழ்வு. அதில் ஒரு முறை நம் தமிழர்களும் பங்கு கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. பரதம், சிலம்பம், யோகம் ஆகிய தமிழ்ப் பண்பாட்டு கூறுகளை மக்களுக்குக் காட்டும் வகையில் தமிழ் பண்பாட்டு கழகத்தைச் சார்ந்த கலைஞர்கள் சிறப்பாக அணிவகுப்பில் கலந்து கொண்டனர். வருடந்தோறும் நடக்கும் ஆசியச் சிறுபான்மையினருக்கான விழா (Asian Ethnic Performances) என்ற அரசாங்கம் நடத்தும் சர்வதேச விழாவிலும் யுனெஸ்கோ நடத்தும் அமைதி விழாக்களிலும் (UNESCO Peace Festival) தமிழர்கள் கலந்து கொண்டு நம் கலாச்சாரத்தை வெளிக்காட்டும் நிகழ்ச்சிகளைக் கொடுத்து வந்துள்ளனர்.

**ஆன்மிகம்**

கலை, விளையாட்டிற்கு அடுத்ததாகத் தமிழர்களின் ஆன்மீகம் பற்றிப் பார்ப்போம். திருப்புகழ் சங்க உறுப்பினர்கள் 40 ஆண்டுகளாகத் தமிழ்க் கடவுளான முருகனை மாதம் தோறும் கந்த சஷ்டி நாட்களிலும், வருடம் ஒருமுறை வரும் சஷ்டி விழா நாட்களிலும் சிறப்பாக வழிபாடுகள் செய்து வழிபட்டு வருகின்றனர். ஒன்பது நாட்கள் விழாவான நவராத்திரியும் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடி வருகின்றனர். ஒவ்வொரு நாளும் வழிபாடுகள் செய்யப்பட்டுப் பெண்களும் குழந்தைகளும் ஒருவர் மற்றவர் வீட்டிற்குச் சென்று கூடி மகிழ்ந்து வருவது தமிழர் பண்பாட்டு கூரான விருந்தோம்பலை இன்றைய தலைமுறையினரும் அறிந்துகொள்ள வழிவகை செய்கிறது என்று நான் எண்ணுகிறேன். ஐயப்பன் வழிபாடு, மார்கழி மாதத்தில் மிக விமர்சியாக செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நிகழ்விலும் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறையருள் பெற்று வருகின்றனர். வழிபாடுகள் அனைத்தும் இந்து கழகம் என்ற இந்து அமைப்பினர் பொறுப்பிலிருக்கும் ஹாப்பி வேலி (Happy Valley) கோவிலில் செய்யப்பட்டு வருகிறது. அந்த அமைப்பில் நம் தமிழர்கள் உறுப்பினர்களாக இருந்து முக்கியத் தொண்டாற்றி வருகின்றனர்.

**ஊடகம்**

இறுதியாக ஹாங்காங் தமிழர்கள் ஊடகங்களில் அளிக்கும் பங்களிப்பைப் பற்றிப் பார்ப்போம். செய்தித்தாள்களை எடுத்துக் கொண்டால் முகமது ஹாசன்

அவர்கள் தினமலர் செய்தியாளராகச் செய்திகளைத் தந்து வந்தார். அவருக்குப் பின் இப்போது வரை நான் செய்தியாளராக இருந்து ஹாங்காங்கில் வாழும் தமிழர்களின் செயல்பாடுகளை அவ்வப்போது செய்திகளாகத் தந்து வருகின்றேன். மேலும், ஹாங்காங்கில் பல வருடங்கள் பணி செய்த பின் தன்னுடைய சுரங்கத் தொடர்வண்டி திறனைக் கொண்டு சென்னை சுரங்கத் தொடர்வண்டி திட்டத்தில் பணி ஏற்று, இன்று சென்னையில் வாழ்ந்த போதும், ஹாங்காங் வாழ்க்கையை மறக்காமல் பல செய்திகளை இந்து நாளிதழில் கட்டுரையாக அளித்து வருகிறார் மு. ராமநாதன் அவர்கள் தன் எழுத்துப் பணியை இன்றளவும் தொடர்ந்து வருகிறார். 2014 முதல் 2018 வரை ‘ஹாங்காங் தமிழ் மலர்’ என்ற மாதாந்திர மலர், குழந்தைகள் கலை குழுவால் வெளியிடப்பட்டு வந்தது.

ஹாங்காங் தமிழர்களின் தடம் திரைத்துறையிலும் தொலைக்காட்சியிலும் உண்டு. திரு. ராம் என்று அழைக்கப்படும் வெங்கட்ராமன் அவர்கள், புதிய தலைமுறை தொலைக்காட்சியிலும் சன் தொலைக்காட்சியிலும் செய்திகளைக் கொடுத்து வருகிறார்.

அவரும் அவரது நண்பர்களும் இணைந்து குறும்படங்களையும் எடுத்து வெளியிட்டுள்ளது. “ஐபிசி 302 மார்தட்டிக் காணி நிலம்” என்ற குறும்படங்கள் தமிழர்களைப் பிரமிக்க வைத்த படங்கள் நினைவில் நின்ற படங்கள். திரைப்படம் என்று எடுத்துக் கொண்டால் ராம் அவர்கள் மிஷ்கின் அவர்களின் தயாரிப்பில் உருவான “பிசாசு” என்ற படத்தில் நடிக்கும் வாய்ப்பினைப் பெற்றதை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

மேலும், கல்யாணச் சமையல் சாதம் என்ற படத்தை வெளியிட்ட ஆர்.எஸ்.பிரசன்னா ஒருமுறை ஹாங்காங் வந்தபோது, சின்மயா மிஷன் பள்ளியில் பயின்ற காரணத்தால், இங்கிருந்த சின்மயா மிஷன் மடத்திற்குச் சென்றபோது அவருக்குச் சின்மயானந்தர் பற்றிய படம் எடுக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டதை உணர்ந்தாராம். அதற்குப் பிறகு முதல் படம் முடிந்ததும் ‘The Quest’ என்ற பெயரில் சிறப்பானதொரு படத்தை உலகிற்குக் கொடுத்தார்.

இன்று மிகவும் பிரபலமாக விளங்கும் யூடியூப் அலைவரிசையில் பல படங்கள் வெளியிடப்படுகின்றன. ஹாங்காங் பற்றிய பல செய்திகளைத் தன்னுடைய அலைவரிசையில் வெளியிடுவதோடு தமிழ் பண்பாட்டு கழகம் மற்றும் தமிழ் பள்ளி நடத்தும் அனைத்து விழாக்களையும் பதிவு செய்து தேசிய மற்றும் வறட்சி அலைவரிசைகளில் பதிவேற்றம் செய்து அளப்பரிய தொண்டாற்றி வருகிறார்.

கடந்த ஐந்து வருடங்களாக, ஹாங்காங்கில் வாழும் வெளிநாட்டவர்கள் தங்களைப் பற்றியும் தங்கள் கலாச்சாரம் பற்றியும் நகரவாசிகளுக்கு எடுத்துக் கூறும் வகையில் வானொலி நிகழ்ச்சி தயாரிப்புகளைச் செய்யும் வாய்ப்பை அரசு வழங்கியது. அதை நம் தமிழர்கள் செவ்வனே பயன்படுத்திக் கொண்டுள்ளனர் என்றே சொல்ல வேண்டும். முதன் முதலில் தமிழ் பண்பாட்டு கழக நிகழ்ச்சியாக 13 வாரத் தொடராக “தமிழோசை” முழங்கியது பிறகு அவர்களின் தயாரிப்பில் தமிழில் பேசுவோம் (Lets Talk in Tamil) என்ற நிகழ்ச்சியின் மூலமாக ஹாங்காங் தமிழர்கள் திருக்குறள், புலவர்கள், பெரியபுராணம் தலைப்புகளில் தமிழர்கள்

ISSN : 2581-9712

பற்றியும் அவர் தம் இலக்கியங்கள் பற்றியும் சுவையான நிகழ்ச்சிகளைப் படைத்தார். 52 வாரங்கள் தமிழ் ஹாங்காங் வானொலியில் ஒலித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், “அருந்தமிழில் பகவத்கீதை” என்ற நிகழ்ச்சியில் திரு எஸ்.மெய்யப்பன் எழுதிய உரை 13 வாரங்கள் ஒலித்தன. இந்திய இசை நிகழ்ச்சி (Indian Instrumetntal Dhamakka) என்ற 13 வார நிகழ்ச்சியில் தமிழரின் கருவிகளான நாதஸ்வரம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் மாண்டலின் மற்றும் வயலின் இசை, தமிழகக் கலைஞர்களின் இசை ஒலித்தன. தமிழக மற்றும் இந்தியக் குழந்தைகளின் தமிழகம் மற்றும் இந்தியா பற்றிய பல்வேறு விபரங்களையும் தகவல்களையும் அறிந்து கொள்ளும் வண்ணம் நடத்தப்பட்ட 13 வார CCG-CIBS வினாடி வினா நிகழ்ச்சியில் மாணவர்களும் பெற்றோரும் குழுவாகக் கலந்து கொண்டனர். அதில் வெற்றி பெற்ற குழு மருத்துவர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் பெயரிடப்பட்ட (Dr. APJ Abdul Kalam Quiz Wiz Trophy) கோப்பையைப் பெற்றனர். இது இரண்டு முறை நடத்தப்பட்டது. மேலும், பாலாம்பாள் என்பவர் இரண்டு முறை “சக்தி” என்ற பெயரில் சாதனை செய்யும் பெண்களை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்.

ஹாங்காங்கில் வசிக்கும் தமிழ் மாணவர்களும் தாங்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்று காட்டும் வகையில் யுனைட்டட் விஷன் ஆஃ யூத் (United Vision of Youth) என்ற 13 வார நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்கள். YIFC குழுவின் உதவியுடன் இதைச் செய்து காட்டிய அவர்கள் அத்துடன் நின்றுவிடாமல் மற்றொரு நிகழ்ச்சியைச் சுட்டிகளின் பேச்சு (Chutties Talks) என்ற பெயரிலும் வெற்றிகரமாகத் தொகுத்து வழங்கினார்கள். நான் அறிந்தவரையில் ஹாங்காங் நகரைப் பற்றியும் இங்குத் தமிழர்கள் வாழும் தன்மைகள் பற்றியும் அவர்கள் செய்யும் செயல்களைப் பற்றியும் முடிந்தவரையில் கூறியுள்ளேன். நான் எடுத்துச் சொன்னவை மிகக் குறைவே. விட்டுப் போனவை ஏராளம்.

மகாத்மா காந்தி குறிப்பிடும் செவ்விய நாடாக இரவிலும் ஒரு பெண் பாதுகாப்பாக நடமாடும் விதமாக, திகழும் நாடாகத், ஊழலற்ற மக்கள் மகிழ்ச்சியாக வாழும் நாடாக திகழும் நாடு ஹாங்காங். பல தமிழர்களின் கனவுகளை நனவாக்கிய நாடு. இது ஆனால் 2019 ஜூன் மாதம் முதல் அது சற்றே பொலிவிழந்து போராட்டத்தின் நடுவில் பல இடங்கள் விரிந்தும் சுருங்கியும் பெயர்ந்தும், மேலும் களையிழந்து, 2020 ஜனவரி தொடங்கிக் கொரோனாவால் வலுவிழந்து போய் விட்டது. நகரம் மீண்டும் புத்துயிர் பெற்றுப் பல சிறப்புகளை அடைய இறைவனிடம் வேண்டுகிறேன்.

**********************************

ISSN : 2581-9712



# இந்திரா சௌந்தர்ராஜன் சிறுகதைகளில் நம்பிக்கைகள்

முனைவர் கி. நீலகண்டன்
உதவிப் பேராசிரியர் மற்றும் ஆய்வு நெறியாளர்,
முதுகலைத் தமிழாய்வுத்துறை,
காதிர் முகைதீன் கல்லூரி, அதிராம்பட்டினம்,
தஞ்சாவூர்.

## *முன்னுரை*

இக்கால இலக்கியங்களில் தனி ஒரு இடத்தைப் பிடித்த சிறுகதை இலக்கியங்கள் உருவாக்கப்பட்ட காலகட்டத்திலிருந்தே ஏதாவது ஒரு வகையில் புழக்கத்தில் இருந்திருக்கலாம் என்றே கூறலாம். தாயின் கருவறையில் இருக்கும் குழந்தை முதல் கல்லறைக்குச் செல்லும் முதுமைப் பருவம் வரை பல்வேறு படிநிலைகளில் சிறுகதை பரிமாறப்படுவதை நடைமுறை உலகில் காண முடியும். தகவல் தொழில்நுட்ப துணைக்கருவிகளில் காட்சியால் கவரும் துணைக்கருவிகள் பெருகிய நிலையில் சிறுகதை வாசிப்பு சற்று பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது என்றே கூறலாம். சிறுகதையை தொடராக வெளியிட்ட இதழ்கள் எல்லாம் ஒரு பக்கக் கதையாக ஒரு கட்டத்திற்குள் கதையாக சுருக்கிக் கொண்டு வாசகர்களின் நேரமின்மைக்கும், மன நிலைக்கும் ஏற்றார்போல் சிறுகதைகளை வெளியிட்டு வருவதை இன்றைய நடைமுறை உலகில் காணமுடிகிறது. இவ்வாறான சூழலில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள இக்கால படைப்பாளர்கள் தமது படைப்புகளை வெளியிடும் பொழுது இக்காலகட்ட வாசகனின் மனநிலைக்கு ஏற்றார்போல் படைத்து வெளியிட பழகிய நிலையையும் காணமுடிகிறது. சிறுகதையின் போக்கு இக்காலச் சூழலில் இவ்வாறிருக்க கால் நூற்றாண்டிற்கு முன் புகழ்பெற்ற சிறுகதைப் படைப்பாளர்கள் வழி சிறந்த சிறுகதைகள் வெளிவந்ததை இலக்கிய வரலாற்றின் வழி அறிய முடியும். அவ்வகையில் சிறந்ததொரு சிறுகதைகளை வெளியிட்ட இந்திரா சௌந்தர்ராஜன் சிறுகதைகள் போற்றத் தகுந்தவை எனலாம். அவற்றுள் கட்டுரைச் சுருக்கம் கருதி சிறுகதைத் தொகுப்பில் இடம் பெறும் நம்பிக்கை சார் நிகழ்வுகளில் குறிப்பாக சுகாதாரம் சார்ந்த நம்பிக்கைகள் மூட நம்பிக்கை சார் நிகழ்வுகள் மட்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

## *நம்பிக்கைகள்*

மனித வாழ்வியலோடு இணைந்ததொரு நடைமுறை செயல்பாட்டை நம்பிக்கை எனலாம். இயற்கையோடு இயைந்து வாழ்க்கை நடத்திய பண்டைய கால மனிதன் முதல் பல துறைகளில் முன்னேற்றம் கண்ட இக்காலம் வரை மனித வாழ்வியல் நடைமுறையோடு பின்பற்றக்கூடியதாக நம்பிக்கை இருந்து வருவதை காணமுடிகிறது. நம்பிக்கைகள் காலம் காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்கு கற்றுக் கொடுத்து பின்பற்றப்பட்டு வருகிறது.

நம்பிக்கை அறிவியலுக்கு ஆட்பட்டு நன்மை பயக்கும் பொழுது மதிப்பைப் பெறும்

ISSN : 2581-9712

நம்பிக்கையாகவும், அறிவியலுக்கு அப்பாற்பட்டு தீமை பயக்கும் பொழுது மூடநம்பிக்கையாகவும் சமூகத்தினரால் அடையாளப்படுத்தப்படுகிறது. உதாரணம் வாசற்படியில் தலை வைத்துப் படுக்கக்கூடாது, ஆகாது என நம்பிக்கையின் வழி கூறுவதுண்டு. ஒரு காலகட்டத்தில் வீட்டின் வாசல் தாழ்வாக அமைக்கப்பட்டிருந்தது, அங்கு தலைவைத்துப் படுக்கும் பொழுது இரத்த ஓட்டம் சீராக இல்லாமல் உடலுக்கு கேடு விளைவிக்கும் என இந்நம்பிக்கையின் அறிவியல் தன்மையை எடுத்துக் காட்டும் பொழுது நல்வழிசார் நம்பிக்கைகளாக எடுத்துக்கொள்ளலாம். இந்த நம்பிக்கை இக்காலகட்ட கிரானைட் டைல்ஸ் எனும் சமமான தளத்திற்கு பொருந்தாது. இவ்வாறான சூழலில் இந்த நம்பிக்கையை கட்டாயப்படுத்தும் பொழுது மூடநம்பிக்கையாக எடுத்துக் கொள்ளலாம்.

மக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவை தாம் பண்பாடாக மலர்கின்றன என்கிறார் மானிடவியல் பேறறிஞர் டெய்லர். பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையில் தோன்றியவையாகும் என்கிறார் மாலினோவஸ்கி. இவை வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கை என்பர். மனிதனின் தன்னல உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. இவை காலம் காலமாக தொடர்ந்து வரக்காண்கிறோம். மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்கு காரணம் கற்பிக்க இயலாத பொழுது மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன என சான்றோர்கள் பலவாறு விளக்கம் தருகின்றனர். மேற்கண்ட நம்பிக்கை சார் விளக்கங்கள் மனித வாழ்வியலோடு நம்பிக்கை இணைந்து பயணிப்பது என்பதையும், பிரிக்கமுடியாதது என்பதையும் காட்டி நிற்கிறது.

### *நல்வழி சார் நம்பிக்கைகள்*

மனித வாழ்வியலுக்கு உகந்த ஒரு சில நடைமுறை நிகழ்வுகளை நம்பிக்கைகளாக உருவாக்கி அதன் வழி நலம் பெறுவதுண்டு. அவ்வகையில் வாழ்விடச் சூழல் சுகாதாரம் நிறைந்து காணப்பட வேண்டும் என்பதை நல்வழிசார் நம்பிக்கையின் வழி ஏற்றிக் கூறியிருப்பதை இந்திரா சௌந்தர்ராஜன் சிறுகதை எடுத்துக் காட்டுகிறது. மனித வாழ்விடப் பகுதியை சுகாதாரமாக வைத்துக் கொள்ள நம்பிக்கையின் வழி தீர்வு கான நினைத்திருப்பதை "சாரங்கா என்னவே ஊரு இது? நாய், பன்றி, பெருச்சாளி, கோழி, ஆடு, மாடு, கொசு, ஈன்று அம்புட்டு ஜீவராசிகளும் உருண்டு திரியிற சகடமா போச்சே இந்த வீதி, இருவரும் வீதியை சுத்தப்படுத்த ஒரு திட்டம் தீட்டினர். மறுநாள் காலை இடிந்த வீட்டுத் திண்ணை மேல் சாரங்கன் சவம் போல் படுத்துக்கிடக்கிறான், கால்மாட்டில் ஏழெட்டு பேர் டாக்டர் வந்து பார்த்து விட்டு முகத்தை சுளிக்கிறார். எல்லோர் காதிலும் விழும் ரகத்தில் பேசுகிறார்.

சாரங்கனுக்கு வந்திருக்கிறது "எய்ட்ஸ்"நோய்க்கு சமமான கொடுமையான நோய் ரொம்ப வேகமா பரவக்கூடிய நோய் இது. இது குழந்தைகளுக்குவந்தாநிச்சயமா காப்பாத்த முடியாது. இது குப்பை கூளங்களாலேயும், மழைத் தண்ணியாலேயும், ஈ, கொசு, தெருநாய்கள்,

ISSN : 2581-9712

பன்றி, பெருச்சாளி போன்ற ஜந்துகளாலேயும் பரவி விடும். இந்த ஏரியா கிணத்து தண்ணியிலேயும், மண்ணுலயும் அயோடின் சத்தே இல்லை. ஆகையால் இங்கே கொஞ்சம் அசந்தாலும் இந்த நோய் நொழைஞ்சிடும். இவரை ஜாக்கிரதையா கவனிச்சுக்குங்க. முன்பே திட்டமிட்டபடி பேசிவிட்டு நகர்ந்தார் டாக்டர். சரவணன் அவரை நன்றியுடன் பார்த்தான். வேண்டுமென்றே அவர் எதிரே காசநோயாளி போல இருமினான். பசி நாயைப் போல சுருண்டு படுத்தான். உம் எல்லாருக்கும் விதி வந்துருச்சி. போய்ச் சேர வேண்டியது தானே என்று முனகிக் கொண்டான். அடுத்து ஒரு நாட்டு வைத்தியர் வந்து பார்த்துவிட்டு அடப்பாவி வரக்கூடாத சீக்கு உனக்கு வந்துருச்சேடா... அடேய் சீதியையே சாணியால மெழுகுங்கடா, அங்கங்கே வேப்பிலைக் கொத்தை கட்டுங்கமா, மாரியாத்தா தயவு வேணுமடா... என்றார். இரண்டு நாளில் வீதியே தலைகீழாக மாறிவிட்டது. வீதி சுத்தமாக்கப்பட்டு விட்டது''1 என சிறுகதைப் பகுதி விளக்கி நிற்கிறது.

போதனைகளால் சீர்படுத்த முடியாத நிகழ்வுகளை நம்பிக்கையின் வழி சீர்படுத்தி தீர்வு கண்டிருப்பதை சிறுகதை வழி அறியமுடிகிறது. அக்கால கட்ட கிரிமி நாசினிகள் வழி ஆரோக்கியத்திற்கான தீர்வுகாண மக்கள் பின்பற்றும் நம்பிக்கை நல்வழிக்காக பின்பற்றப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்கு வரலாம்.

### *மூடநம்பிக்கைகள்*

அறிவியல் செயல்பாட்டிற்கும் உலக நடைமுறைக்கும் அப்பாற்பட்ட நிகழ்வுகளையும், மனித வாழ்வியலுக்கு தீங்கு தரக்கூடிய நிகழ்வுகளையும் மூடநம்பிக்கை எனலாம். வாழ்வியல் நடைமுறையில் ஒரு சில மருத்துவ நிகழ்வுகள் பேய், ஆவி, இம்மை, மறுமை என்பன போன்ற நவீன காலகட்டத்தில் தீர்வுகாண முடியாத நிகழ்வுகள் போன்றவற்றை மூடநம்பிக்கைகள் எனக் கூறுவதுண்டு. இவற்றுள் மருத்துவம், மன அச்சம் சார்ந்த நம்பிக்கைகள் ஒரு காலகட்டத்தில் ஏற்புடையனவாகவும், ஒரு காலகட்டத்தில் மறுப்புடையனவாகவும் இருந்து வந்திருப்பதை இலக்கிய வரலாற்றின் வழி அறிய முடிகிறது. அவ்வகையில் இந்திரா சௌந்தர்ராஜன் சிறுகதைகளில் காணப்படும் ஒரு சில மூடநம்பிக்கை சார் நிகழ்வுகள் மட்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

பூமிவாழ் உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு அவசியத் தேவையாக இருக்கக்கூடிய மழையின் அவசியத்தை உணர்ந்து அவற்றை வரவழைப்பதற்கும், பாதுகாப்பாக சேமித்து வைப்பதற்கும் பல்வேறு விதமான முயற்சிகள் எடுத்துக் கொண்டு வருவதை இக்கால கட்டத்தில் கூட காணமுடிகிறது. தமிழக நிலப்பரப்பில் வளம் கொண்டவையாக ஒரு சில பகுதிகளும் வானம் பார்த்த பூமியாக பெரும்பகுதிகளும் இருந்து வருகிறது. இத்தகைய நிலப்பரப்பில் வானம் பார்த்த பூமியில் வாழ்வியலைக் காணும் மனிதர்கள் உயிர்காக்க உதவும் மழையை வரவழைக்க ஒரு சில நிகழ்வுகள் நம்பிக்கை சார்ந்து நடைமுறைப்படுத்துவதுண்டு. அவற்றுள் ஒரு சில இக்கால கட்டச் சூழலில் மூடநம்பிக்கையாக பார்க்கப்படுகிறது என்பதை "மழையே மழையே வா வா" எனும் சிறுகதை எடுத்துக் காட்டுகின்றன. மழை பெறுவதற்காக மனிதனின் மனம் எவ்வாறு சிந்திக்கிறது என்பதை "நம்ம ஃப்ளாட் செக்ரெட்டரி மழைக்காக வேம்பும் அரசும்

வெச்சு அதுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கப் போறாளாம். டொனேஷன் வேணுமாம் வந்திருக்கார். கொடுங்கோ என்றாள் மனைவி சுசிலா. இது என்ன பைத்தியக்காரத்தனம்…? என மறுத்தார் சங்கரன். உங்க வொய்ஃப் சொல்லியிருப்பாங்கனு நினைக்கிறேன்… என்று ஒரு சின்னச் சிரிப்பை தவழவிட்டார் செக்கரெட்டரி. ஆமா… இப்படி அரசமரத்துக்கும் வேப்பமரத்துக்கும் கல்யாணம் பண்ணி வெச்சா மழை வந்துடுமா…? சங்கரன் கேட்டான்.

ஒரு நம்பிக்கை தான்… பேப்பர்ல பார்த்திருந்தா தெரிஞ்சிருக்கும். கர்நாடகால கூட சரியா மழை இல்லை. அங்க ஒரு வில்லேஜில் ஒரு கன்னிப்பொண்ணு சுத்தமா துணியே இல்லாம அர்த்த ராத்திரியிலே ஊரைச்சுத்தி வந்திருக்கா.. இது ஏதோ கிராம தேவதையைச் சாந்தப்படுத்தற சாங்கியமாம் என்றார் செக்ரெட்டரி.

செக்ரெட்டரி பேச்சில் நல்ல அபத்தம். சங்கரன் அவரைப் பதிலுக்கு வெறித்தான். பக்கமாக மாலதி நின்று கொண்டிருந்தது. ஆறு வயசுப் பெண் குழந்தை அப்பாவும் செக்ரெட்டரியும் பேசுவதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தது.

சரி சங்கரன்… நீர் டொனேஷன் தருவேளா, மாட்டேளா…? எனக் கேட்டார். மறுக்கப்பட்டது. பிறகு அம்மாவும் அப்பாவும் விவாதம் செய்து கொண்டிருப்பதை மாலதி பார்த்து பயந்துவிட்டாள். வீட்டை விட்டு வெளியேறிவிட்டாள்.

டொக்… டொக்…! கதவை திறந்தார் சங்கரன். போலிஸ் இன்ஸ்பெக்டரும் அவர் அருகில் ஒரு டவலால் உடம்பை போர்த்தியபடி தன் குழந்தை மாலதியும் நிற்பதைப் பார்த்து பதறியபடி எழுந்தான்.

சார் கொட்டற மழைல உங்க பொண்ணு ஒரு கடை வாசலில் பரிதாபமா நின்னுட்டிருந்தது. அழைச்சுட்டுப் போய் விசாரிச்சேன். மழை பெய்யணும்…. எங்கப்பா, அம்மா பிரியக்கூடாது. உடம்புல துணியில்லாம பொண்ணு தெருவில நடந்து போனா மழை பெய்யும்னு சொன்னாங்க அதுதான் இப்படி டிரஸ் இல்லாம வந்தேங்குது என்றார் இன்ஸ்பெக்டர்.

துணி இல்லாம உங்க மக போனதாலதான் மழை வந்துச்சுன்னு நினைக்காதீங்க… இன்னும் சொல்லப் போனா மழை வந்ததாலதான் நாங்க ரோந்து போனோம். உங்க மகளும் எங்க கண்ணுல பட்டா… பத்திரமா அவளை அழைச்சு வர முடிஞ்சுது… இல்லேன்னா, இந்நேரம் அவ எங்கே போயிருப்பாளோ. எந்த ரவுடிகிட்ட மாட்டிக்கிட்டு திண்டாடியிருப்பாளோ…. குழந்தை மனசுல மூடநம்பிக்கை வளர்க்காதீங்க… இப்படியெல்லாம் செஞ்சா மழை கொட்டாது. கொட்டவும் கூடாது! இயற்கையின் காரணமாத்தான் மழை பொழியும்கறதை உங்க குழந்தை மனசுல பதியவைங்க… என்று இன்ஸ்பெக்டர் கூறினார்”2 என வரும் பகுதி எடுத்துக் காட்டுகிறது. மேற்கண்ட பகுதி ஒரு காலகட்டத்தில் குறிப்பாக வானம் பார்த்த பூமியில் ஒருசில பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட சடங்காக இருந்து வந்திருப்பதை நாட்டுப்புற இலக்கியங்கள் பல எடுத்துக் காட்டுகின்றன. இந்நிகழ்வு எந்த விதத்தில் பொருத்தமாக இருந்து மழையை வரவழைத்திருக்கும் என வினா எழுப்பி விடை தேட முயன்றாள். அவை ஒரு ஆய்விற்கு வழிவகுக்கும். இருப்பினும் உடலில் துணியில்லாமல் ஊர் சுற்றி வரவைப்பது முற்றிலும் பொருத்தமில்லாத செயல்பாடு என்றே கூறலாம். இவ்வாறான நம்பிக்கை குழந்தை மனதில்

ISSN : 2581-9712

விதைக்கப்பட்டு அவ்வாறு செயல்படுவது மூடநம்பிக்கையின் அவலம் என்றே கூறலாம்.

சில மருத்துவம் சார்ந்த நம்பிக்கைகள் இன்றைய நவீன மருத்துவ காலத்தில் மூடநம்பிக்கையாகத் திகழலாம். அன்றைய காலச்சூழலில் நல்வழிசார் நம்பிக்கைகளாக இருந்திருக்கலாம். குறிப்பாக ஒவ்வாமை (அலர்ஜி) எனும் நோயிற்கு அதாவது குழந்தைகளுக்கு திருமண வீட்டில் ஆடைகளின் சாய நெடியால் ஏற்படும் ஒவ்வாமை நோயிற்கு அழுக்கு வேட்டியில் போட்டு உருட்டி குணப்படுத்துவது என்பது அன்றைய காலகட்டத்தில் நல்வழி நம்பிக்கையாக இருந்திருக்கலாம். ஆனால் இன்றைய காலச்சூழலில் இவை மூடநம்பிக்கையாக பார்க்கப்படலாம். இவ்வாறான சமூகப் பார்வையை காலச்சூழல் ஏற்படுத்தி விடுகிறது எனலாம்.

***முடிவுரை***

தகவல் தொழில் நுட்பத்தால் சிறுகதை வாசிப்பு சற்று பின்தங்கிய நிலையில் இருப்பதையும் புகழ்பெற்ற சிறுகதை வரிசையில் இந்திரா சௌந்தர்ராஜன் சிறுகதைகள் சமூக கருத்தாக்கங்களை அதிகம் வெளிப்படுத்தியது. அவற்றுள் நம்பிக்கை சார் கருத்தாக்கங்கள் பல பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மனித வாழ்வியலோடு ஒன்றிணைந்த நம்பிக்கை மதிப்பைப் பெறும் பொழுது நல்வழிசார் நம்பிக்கையாகவும் தீமை பயக்கும் பொழுது மூட நம்பிக்கையாகவும் பார்க்கப்பட்டிருக்கிறது. ஒரு சில மூடநம்பிக்கைகள் குழந்தைகள் மனதில் பதிந்து அவர்களால் நடைமுறைப்படுத்தும் பொழுது இடர்கள் நிறைந்திருப்பதையும் இக்கட்டுரை வழி அறிய முடிகிறது. மதிப்பைப் பெறும் நல்வழிசார் நம்பிக்கை மூட நம்பிக்கை எனப் பகுத்துக் காணப்படும்.

***அடிக்குறிப்புகள்***

1. இந்திரா சௌந்தர்ராஜன் சிறுகதைகள் தொகுப்பு ஐ பக் 55–56

2. மேலது, தொகுப்பு II, பக்.137–138

************************************

ISSN : 2581-9712



# குழந்தைகளுக்கான தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் குறுஞ்செயலிகள் – ஒரு மதிப்பீடு

**முனைவர் சி. சிதம்பரம்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம்,
காந்திகிராமம்.

மொழி கற்பித்தலின் முகம் இன்று உலக அளவில் பல்வேறு பரிமாணங்களை எட்டிவிட்டது. நம் மாணவர்களின் கற்றல், மனனம் செய்யும் திறமையை மட்டும் தேக்கிக்கொண்டிருக்கவேண்டிய தேவை இன்று இல்லை. கற்றலின் மூலம் மாணவர்களின் கேட்டல், படித்தல், பேசுதல், எழுதுதல் மற்றும் சூழல் அறிவு, வரலாற்று அறிவு, தேவைகளைத் திறன்பட அடையத் தன்னைத் தகுதிபடுத்திக்கொள்ளும் அறிவு போன்ற பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் கல்விக்கொள்கைகளை உள்ளீடாகக் கொண்டு கற்றல் கற்பித்தல் தொடர்பான புதிய அணுகுமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமே இன்றைய உலகமயமாதல் சூழலில் மொழிக்காப்பு முயற்சிகள் முழுவெற்றி பெற முடியும். ‘பேச்சாலும் எழுத்தாலும் மனிதன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கும் கருவி மொழியாகும். அவன் வாழ்ந்ததும், வாழப்போவதும் மொழியாலே தான். மக்கள் வாழ்வில் பிறந்து மக்களால் வளர்க்கப்பட்டு மக்களின் வாழ்வை நாகரிகமுடையதாக உயர்த்தி வரும் அரிய கலை மொழியே. ஆறறிவு பெற்ற மனித சமுதாயத்தையும் ஐந்தறிவு கொண்ட விலங்குகளையும் வேறுபடுத்துவது மொழி’ ஆகும்.

### *தொடர்பு மொழி*


“மனித வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்தே மனிதன் தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டிய உணர்வோடு முயன்று வந்த முயற்சியின் முற்றிய வளர்ச்சியே இன்றைய மொழியாகும்”1. எனினும் தொடக்க காலத்தில் மனிதன் விலங்குகளிடமிருந்தே மொழியைக் கற்றுக்கொண்டான். விலங்குகள் காட்டும் சைகை, எழுப்பும் ஒலி ஆகியவற்றின் அடிப்படையில் மொழியைக் கற்கத் தொடங்கினான். மனிதனின் தோற்றம் குரங்கிலிருந்து வந்தது (பரிணாம வளர்ச்சி) என்று உறுதிப்படுத்தும் அறிவியல் ஆராய்ச்சியில்,அகுரங்கு எழுப்பும் 31 வகை சைகைகளையும், 18 வகை முகபாவங்களையும், சில ஒலிகளையும் பயன்படுத்தி தன்னுடைய கருத்தினை வெளிப்படுத்த முயற்சிப்பதாகக் கண்டுபிடித்துள்ளனர். இவ்வாறு விலங்கிலிருந்து மொழியைக் கற்கத் தொடங்கிய மனிதன் படிப்படியாக எழுத்துகளையும், சொற்களையும், தொடர்களையும் ஏற்படுத்தத் தொடங்கினான். வரிவடிவம், இலக்கியம், இலக்கணம் எனப் பல்வேறு வளங்களைப் பெருக்கி இன்று உலக மொழிகளுள் முன்னோடி மொழியாகவும் உயர்தனிச் செம்மொழியாகவும் தமிழ்மொழியை உயர்த்திய பெருமை ஒவ்வொரு

தமிழனையும் சாறும். “ஆற்றங்கரை ஓரங்களில் வாழ்ந்த மக்களே நாகரிக வளர்ச்சி பெற்றுள்ளனர்”2 என்ற கருத்திற்கு தக்க சான்றுகளாகச் சிந்து சமவெளி, ஹரப்பா, மொகஞ்சதரா நாகரிகங்கள் அமைந்துள்ளன.

எந்த ஒரு மனித சமுதாயம் இலக்கண மரபுகளின்படி தாய்மொழியைப் பயன்படுத்துகிறதோ அந்த சமுதாயமே சிறந்த சமுதாயமாகும். பண்டைத்தமிழகம் சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளாகப் பிரித்து ஆட்சி செய்யப்பட்டது. பிற்காலத்தில் சேர நாட்டைச் சேர்ந்த கொங்கு மண்டலத்தில் தமிழ்மொழி முறையாக இலக்கண முறைப்படி பயன்படுத்தப்பெறாத நிலையில், வட்டார மொழிவழக்குகள் பெருகி அதுவே ஒரு கிளைமொழியாக (மலையாளம்) தோன்றக் காரணமாகிவிட்டது என்பது மொழி வரலாறு. அதே போன்ற சூழல் தற்பொழுது உலகமயமாதல் பின்னணியில் நிகழ வாய்ப்புள்ளது. இன்று தாராளமயமாதல் (liberalization), தனியார்மயமாதல் (Privation), உலகமயமாதல் (Globalization) சூழலில் தமிழ்மொழியின் வளர்ச்சி கேள்விக்குறியாகி விட்டது. உலகமயமாதல் சூழலில் தமிழ்மொழி கற்றல், கற்பித்தல், உலக மொழிகளுக்கு இணையாக வளரும் நிலை, நவீன சாதனங்களில் தமிழைப் பயன்படுத்தும் முறை, புதிய கலைச்சொற்களை உருவாக்குதல், மொழிபெயர்த்தல், தமிழ்மொழிக்குப் புதிய அணிகலன்களை (வளங்களை) உருவாக்குதல், உலகத்தமிழர்களை ஒரு குடையின் கீழ் இணைத்தல் எனப் பல்வேறு பங்களிப்புகளை இன்றைய நவீன, தொழில்நுட்பக்கருவிகள் வழங்கி வருகின்றன.

***நவீன சமூக ஊடகங்கள்***

பெரும்பாலான ஊடகங்கள் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பிற்குள் உள்ள வாசகர்களை மட்டும் நோக்கியே அக்கறை காட்டுகின்றன. ஆனால் இன்று இணையம் என்னும் அறிவியல் கண்டுபிடிப்பு உலகத்தமிழர்களை இணைக்கும் பாலமாக உள்ளது என்றால் அது மிகையாகாது. விரல் நுனியில் விரியும் விவரக் களஞ்சியமாக இணையம் இருந்தபோதிலும் அதனைப் பயன்படுத்தக் கணினி, இணைய இணைப்பு, மாற்றி (Modam) எனப் பல்வேறு கருவிகள் தேவைப்படுகின்றன. இன்று உலகம் அதிவேகமாக சுழன்று கொண்டிருக்கும் வேளையில் அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் மனிதனுக்குக் கிடைத்த அறிய சாதனமே நவீன, விவேக அலைபேசிகள் ஆகும்.




இந்தியாவில் நடைபெற்ற சமீபத்திய ஆய்வில், “கழிப்பறையைப் பயன்படுத்தும் மக்களைக் காட்டிலும் (40ரூ) கைபேசிகளைப் பயன்படுத்தும் மக்களின் எண்ணிக்கை (80ரூ) அதிகமாக உள்ளது”3. நடப்பாண்டில் “உலக அளவில் செல்போன் பயனாளர் எண்ணிக்கையில் இந்தியாவுக்கு இரண்டாம் இடம் (86 கோடி பேர்) என்ற புள்ளி விவரத்தையும் தருகிறது”4. இந்தியத் தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI). அந்த வகையில் மழலையர்களுக்கு

ISSN : 2581-9712

தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் புதிய தொழில்நுட்பத்தின் பங்கு அளப்பெரிது.

### *இன்றைய கல்விச் சூழல்*

உலகம் இன்று பொருளாதாரத்தை முன்னிறுத்தியே அனைத்து நிலைகளிலும் வணிகமயமாகி வருகிறது. கல்வி என்பது இன்று வேலைவாய்ப்பை முன்னிறுத்தியே கற்பிக்கப்படுகிறது. எனவே தாய்மொழிக்கல்வி (தமிழ்) கற்பதைவிட ஆங்கிலக்கல்வி கற்பதன் வாயிலாக வேலைவாய்ப்பு எளிமையாகக் கிடைக்கிறது. இதனால் இன்று கல்வி வணிகமயமாகி வருகிறது. “மூலதனம் எங்கு இருக்கிறதோ அங்கிருந்து அதனைப்பெற்று, மனித வளம் எங்கு அபரிமிதமாகவும், செலவு குறைவாகவும் இருக்கிறதோ அங்கு உற்பத்தி செய்து, பொருள்களுக்கு எங்குச் சந்தை அதிகமாக இருக்கிறதோ அங்கு விற்பனை செய்வதுதான் உலகமயமாதல்”5 என்று விளக்கம் தருகிறார் நாராயணமூர்த்தி. ஆனால் உலகமயமாதல் என்பதை வெறும் பொருளாதாரப் பார்வையில் மட்டும் சுருக்கிவிடமுடியாது. பொருளாதாரம் சமூகத்தைப் பாதிக்கிறது. அதனால் அதனைத் தொடர்ந்து வரும் மொழி, கலாச்சாரம், பண்பாடு என அனைத்து மட்டங்களிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பாதிப்பு என்றால் அது மோசமான பாதிப்பு என்று எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. நல்ல பாதிப்புகளும் உள்ளன. உலகமயமாதல் சிந்தனை இன்று புதிதாகப் பிறந்த சிந்தனை என்று கருதமுடியாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சங்கத்தமிழன் கணியன் பூங்குன்றனார், “யாதும் ஊரே, யாவரும் கேளிர்”6 என்று உலகமயமாதல் சிந்தனையை முன் வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று உலகமயமாக்கலின் விளைவாகப் பல்வேறு பாதிப்புகளும், பயன்களும் ஏற்பட்டுள்ளன. இருப்பினும் மொழிக்காப்பு முயற்சி என்பது மிகக்கடினமான சவாலாக மாறிவிட்டாலும், உலகமயமாக்கத்தின் விளைவாக ஏற்பட்ட தொழிற்புரட்சியால் இன்று பல்வேறு புதிய கண்டுபிடிப்புகளின் வருகையால் தமிழ்மொழியைக் கற்பிக்க புதிய முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இன்று புதிய சூழல், புதிய கற்றல் கருவிகள், புதிய கற்றல், கற்பித்தல் அணுகுமுறைகள் என புதுமையான வகைகளில் பல பள்ளிகளில் வகுப்பறைகள் (Smart Class Rooms) அமையத் தொடங்கிவிட்டன. அந்த வகையில் நவீன அலைபேசியில் மாணவர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்றுத்தருவதில்



பல்வேறு செயலிகள் உதவி செய்கின்றன. இவற்றை இடைநிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி, உயர்கல்வி என அனைத்து நிலைகளிலும் ஏற்படுத்தி மேம்படுத்தத் திட்டமிடவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

ISSN : 2581-9712

### *குறுஞ்செயலி விளக்கம்*

தேவைகள் தான் கண்டிபிடுப்புகளின் தாய் என்பர். "ஒரு செயலைச் செய்யக்கூடிய செய்கையை விவரிக்கும் நிரல் துண்டைச் செயலி என்ற சொல் குறிக்கிறது"7. அதாவது ஒரு செயலை அல்லது வினையைச் செய்ய வல்ல ஆணைத்தொடர்களைக் குறிக்க செயலி என்ற சொல் தற்போது அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. "நவீனத் தொலைபேசிகளில் ஒரு குறிப்பிட்ட செயலைச் (Action) செய்துமுடிக்க மனிதர்களால் பல கட்டளைகளைப் பிறப்பித்து உருவாக்கப்படும் நிரல் தொகுப்பு குறுஞ்செயலி (Apps) என்று அழைக்கப்படுகிறது. கணினியில் பல செயல்களைச் செய்யும் செயலிகளை, மென்பொருள் (Applications- Software) என்றும், குறுகிய நிலையில் செய்யக்கூடியதை குறுஞ்செயலி என்றும் வழங்கப்படுகிறது"8.

### *கற்றல் கற்பித்தல் சூழல்கள்*

தமிழ்மொழி ஒரு காலத்தில் உலகெங்கிலும் பேசப்பட்ட மொழியாகத் திகழ்ந்ததை அறிஞர்கள் குறிப்பிட்டுள்ள போதிலும் அதனை நிறுவ போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. எனினும் தமிழனுக்கு என்று ஒரு நாடு இல்லை. ஆனால் தமிழன் இல்லாத நாடு இல்லை என்று சொல்லும் அளவிற்கு தமிழ்மொழி தமிழர்களைப்போலவே புலம்பெயர்ந்து வாழ்ந்துகொண்டிருப்பதைக் கண்கூடாகப் பார்க்கமுடிகிறது. அந்த வகையில் புலம்பெயந்த தமிழ்க் குழந்தைகள் தாய்மொழியாம் தமிழ்மொழியை அந்தந்த நாட்டுச்சூழலுக்கு ஏற்றவாறு கற்றுக்கொடுக்க தமிழ் இணையக் கல்விக்கழகம் புலம்பெயர்ந்த தமிழ்க்



குழந்தைகளுக்காக மழலையர் முதல் உயர்கல்வி வரை சான்றிதழ், பட்டயப்படிப்புகளை முதன்முதலாக இணையம் வாயிலாக வழங்கிவருகிறது குறிப்பிடத்தக்கது (www.tamivu.org).



### *குழந்தைகளுக்கான தமிழ்க் குறுஞ்செயலிகள்*

நவீன அலைபேசியில் குழந்தைகளுக்குத் தமிழ்மொழியைக் கற்றுத்தருவதில் பல்வேறு குறுஞ்செயலிகள் உதவி செய்கின்றன. அவை, I write Tamil, Trace Tamil Alphapets-1,2, Tamil Rhymes, Fun 2 Learn Tamil, Tamil Lessons-1,2, Avyaiyaar Books, Tamil Numbers, Tamil Slate, I Tamil Kids, Flash cards Tamil Lessons, ஆத்திசூடி, மழைப்பாடம், செல்லமே செல்லம், தமிழ்ப் பழமொழிகள், சங்கம், தமிழ் எழுத்து, பாட்டி சொன்ன கதைகள் என இவை அனைத்தும் குழந்தைகள் ஆர்வமுடன் தமிழ் எழுத்துகளையும் எண்களையும் எளிதில் கற்றுக்கொள்ள உதவுகின்றன. கூட்டுக்குடும்ப வாழ்விலிருந்து வேலை,

பொருளாதாரம் காரணமாக தனித்து வாழும் இன்றைய சமூகத்திற்கு வீட்டில் உள்ள பெரியவர்கள் கதை சொல்லிக் குழந்தைகளை வளர்க்கும் சூழல் இல்லாத நிலையில் பாட்டி சொன்ன கதைகள் எனும் குறுஞ்செயலி இக்குறையை நிவர்த்தி செய்கிறது. தமிழ்ப்பெயர்கள் என்ற குறுஞ்செயலி குழந்தைகளுக்குத் தமிழில் பெயர் சூட்டத் தகுதியான தமிழ்ப் பெயர்களை பட்டியலிடுகின்றன. குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு பாட்டி வைத்தியம் என்ற குறுஞ்செயலி அருமருந்தாக உள்ளது. இவ்வாறு தமிழ் மொழியின் மரபு சார்ந்த பண்பாடுகளை பறைசாற்றுவதில் தமிழ்க் குறுஞ்செயலிகளுக்கு தனி இடம் உண்டு.

இந்த குறுஞ்செயலிகளை குழந்தைகள் பயன்படுத்தி தமிழ்மொழியின் அடிப்படை இலக்கண, இலக்கியங்களை கற்பதில் ஆர்வமிகுதி எற்படுகின்றது. மேலும் அவர்கள் புதிதாக சிந்திப்பதற்கும் இந்த குறுஞ்செயலிகள் பேருதவியாக இருக்கின்றன. இந்த வகை தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் குறுஞ்செயலிகள் பல்லூடக வடிவில் இருப்பதால் குழந்தைகள் மனதில் எளிதில் பதிந்துவிடுகின்றது. குழந்தையாக இருக்கும்போது கற்கும்போது அது ஆழமாகப் பதிந்துவிடுகிறது. கற்றல் கற்பித்தல் முறைகளில் காட்சிவழிக் கற்றல், கேட்டல்வழிக் கற்றல் ஆகிய இருவகையான செயல்பாடுகள் நவீனத் தொழில்நுட்பக்கருவிகளின் மூலம் நடைபெறுகிறது.

*முடிவாக*

தமிழ்க் குறுஞ்செயலிகள் வழி குழந்தைகள் தமிழ்மொழியைக் கற்றல் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்கள், அவற்றை நீக்குவற்கான தீர்வுகள் முதலியவற்றைக் கண்டறிதல் இன்றியமையாத பணியாகும். இதுவரை வெளிவந்துள்ள தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் தொடர்பான குறுஞ்செயலிகளில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி, அதனை நிவர்த்தி செய்து, உருவாக்கப்பட வேண்டிய தமிழ்குறுஞ்செயலிகளை வரையறை செய்வதும், அவற்றை மேம்படுத்துவதும், தரப்படுத்துவதும் இன்றைய தேவையாக உள்ளது.

*சான்றெண் விளக்கம்*


1. சு. சக்திவேல், தமிழ்மொழி வரலாறு, ப. 14

2. A. Karmekam kone, Anciant Famous Tamil Poet's, Part-1, Pp. 51–52.

3. தினமணி நாளிதழ் செய்தி, மதுரைப் பதிப்பு, நாள்:18–06–2011, ப. 12.

4. புதிய தலைமுறை மாத இதழ், ஜூன் 2013, ப. 63.

5.http://www.tamilmurasuaustralia.com/2010/07/blog post.html.

6. புறநானூறு. 192 : 1 (கணியன் பூங்குன்றனார் பாடல்).

7. https://ta.wikipedia.org/wiki/ செயலி–(கணினியியல்)

8. முரசு. முத்து நெடுமாறன் அவர்கள் நவீனத் தொழில்நுட்பத்தில் தமிழ் என்ற பொருளில் இணையக்கல்விக்கழகத்தில் ஆற்றிய சிறப்புரை. காணொளிக்காட்சி: http://www.youtube.com/watch?feature=player_embedded&v=7UdRM1kwrXw).


**********************************

ISSN : 2581-9712



# சிற்றிலக்கியங்களில் இசைச் செய்திகள்

திருமதி. சுஜாதா நிரஞ்சன்
சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

தமிழிலக்கியம் "இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழாலானது. மொழியின் வாயிலாக மக்களின் வாழ்க்கை முறையினை எடுத்துக் காட்டுவதே இலக்கியம்" என்று ஹட்சன் எனும் மேனாட்டறிஞர் குறிப்பிடுகின்றார்.

"உலகக் குளிர எமது மதியில் ஒழுகும் அமுதக் கிரணமே
உருகும் அடியர் இதயம் நெகிழ உணர்வில் எழு நல் உதயமே" என்பது குமரகுருபரர் திருவாக்கு.

சங்க இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தாலும் அச்சங்க இலக்கியமின்றும் வேறானவையாக இலக்கியங்கள் அமைந்துள்ளன. சிற்றிலக்கியங்கள் சங்கக் காலத்தில் தோற்றம் பெற்றாலும் இக்காலம் வரையிலும் தொடர்ந்தும் தோன்றிக்கொண்டே இருக்கின்றது. சிற்றிலக்கியங்கள் அவற்றின் தோற்றம், வளர்ச்சி, சிறப்புகள், தமிழ் இலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கியங்களில் கூறப்பட்ட இசைச் செய்திகளைக் கூறுவதே இவ்வாய்வின் நோக்கமாகும். சிற்றிலக்கிய வடிவங்கள் மருவிச் சென்றாலும், அவற்றில் கூறப்பட்டுள்ள இசைச் செய்திகளை வெளி உலகிற்குக் காட்டுவதற்கும் உந்துதலாக அமையும். சிற்றிலக்கியங்களை முழுமையாகப் பெற்றுக்கொள்வது ஆய்வுப் பிரச்சினை ஆகும்.

***திறவுச் சொற்கள்: சிற்றிலக்கியம், இசை, தமிழிலக்கியம்***

தமிழில் இலக்கியங்கள் காலத்துக்குக் காலம் எழுந்து மக்களின் வாழ்வியல் முறைமைகளையும் இசைச் செய்திகளையும் எமக்கு எடுத்து இயம்புகின்றன. டி.வி.நாராயணசாமி அவர்களின் கருத்துப்படி மக்களது வாழ்வியலை, பண்பாட்டை, நாகரிகத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடிகளாக இலக்கியங்கள் விளங்குகின்றன. இவ்வாறு எழுந்த இலக்கியங்கள் பேரிலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் என இரு வகைப்படுத்தலாம். பெரும்பாலும் இலக்கியங்கள் அனைத்தும் சமயங்களைச் சார்ந்தவர்களால் இயற்றப்படுகின்றன. சங்க இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தாலும் அச்சங்க இலக்கியமின்றும் வேறானவையாக இலக்கியங்கள் அமைந்துள்ளன. சிற்றிலக்கியங்கள் சங்கக் காலத்தில் தோற்றம் பெற்றாலும் இக்காலம் வரையிலும் பல வடிவங்களில் தொடர்ந்தும் தோன்றிக் கொண்டே இருக்கின்றது. இறைவன், மக்கள், மன்னன் என அனைத்து நிலையினரும் தலைவர்களாக அமைகின்றனர். நாட்டுப்புற வடிவங்களைப் பெற்ற சிற்றிலக்கியங்கள் பாமர மக்களையும் கவருகின்றன. பேரிலக்கியத்திற்கு இணையான இலக்கியச் சுவையும், இலக்கிய நயமும், கருத்துச் செறிவும் பெற்று

ISSN : 2581-9712

இலக்கியத்தரம் மிகுந்தவையாக இலக்கியங்கள் திகழ்கின்றன.

பக்திக்கால இலக்கியங்களைத் தவிரப் பல சிற்றிலக்கியங்கள் 15 முதல் 19ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழில் தோன்றியுள்ளன. அவை அக்காலத்து வாழ்வியலுக்குத் தக்கவாறு பொருளமைப்பு கொண்டவை. சமயங்கள், சமுதாயநிலை மற்றும் கலைகளையும் நன்கு எடுத்துக் காட்டுவனவாக விளங்குபவை. பிள்ளைத்தமிழ், கலம்பகம், சதகம், மாலை, அந்தாதி போன்றவை இலக்கிய அமைப்பு, பாடல் அமைப்பு ஆகியவை பற்றிப் பிரிக்கப்பட்டவை. பள்ளு, குறவஞ்சி, நொண்டி, குளுவம், மகுடி போற்றவை அவற்றுள் அடங்கிய கலைத்தன்மை கொண்டு பிரிக்கப்பட்டவை. நாடகக் கீர்த்தனைகள் இசை பற்றியன. விலாசம், இசைக்கூத்துகள் போன்றவையும் அக்காலக் கட்டத்துள் தோன்றிய கலை இலக்கியங்களாகும். இத்தகைய இலக்கிய இனங்கள் பலவிதப் பொருள்களை விளக்கும் நோக்குடனும், இசைபற்றிய குறிப்புகளைத் தருவதில் ஒன்றுபடுவனவாக உள்ளன. இதில் காவடிச்சிந்து, வழிநடைச்சிந்து என்பன இசைப்பாடல்களாக உள்ளன.

### *தமிழ் இலக்கிய அறிமுகம்*

தமிழ் இலக்கியங்கள் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என்னும் இரு வகைப்பாடு இருபதாம் நூற்றாண்டில் வந்தது. பேரகத்தியம், சிற்றகத்திகம், சிற்றட்டபம், பெருங்கதை எனப் பெருமை சிறுமைகளை அடைமொழிகளாகக் கொண்டுள்ள நூல்களின் பெயர்களைப் பார்த்து இப்படிப் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என வகை படுத்தியிருக்கலாம். சொல்ல வந்த ஒரு கருத்தை ஒரு செய்யுளில் முடிப்பது சிற்றிலக்கியம் என்றும், ஒருவர் வாழ்க்கையை அல்லது அவர் செயல்களை அல்லது ஒரு நெடுங்கதையைப் பல செய்யுள்களில் தொடர்ந்து முடிப்பது பேரிலக்கியம் என்றும் கொள்ளப்படுகிறது உலா, தூது, அந்தாதி, முதலியவை ஒரு செய்யுள்களிலே அமைவன. கலம்பகம், பதிகம், மாலை முதலியன பல செய்யுட்களைக் கொண்டவை எனினும் ஒவ்வொரு செய்யுளிலும் ஒவ்வொரு கருத்து முடிவதைக் காணமுடியும். முந்நூறு செய்யுள்களுக்கு மேற்பட்ட அகப்பொருள் பற்றிக் கூறும் கோவை இலக்கியம் ஒரு நெடுங்கதை போல் அதினும் சிற்றிலக்கியத்தில் சேர்த்தனர். பேரிலக்கியத்தை நெடுங்கதை போலவும், சிற்றிலக்கியங்களைச் சிறுகதை போலவும் இக்காலத்தில் கூறுவோரும் உண்டு.

தமிழ் இலக்கியங்களின் வகை தொண்ணூற்றாறு எனக் கூறப்படுகிறது. கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிவந்தெழுந்த பல்லவன் உலாவில் தான் முதன் முதலாக இலக்கிய இலக்கியங்கள் தொண்ணூற்றாறு எனக் காணப்படுகிறது. தமிழிலக்கிய வரலாற்றைப் பழங்காலம், இடைக்காலம், இக்காலம் என்று வகுக்கலாம். இவற்றுள் பழங்காலத்தினுள் சங்க இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், பழம்பெரும் காப்பியங்கள் ஆகியவை அடங்கும். இடைக்காலம் என்பதற்குள் பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள் புராண இலக்கியங்கள், உரைவளங்கள் ஆகியவை அடங்கும். இக்காலம் என்பதில் உரைநடை, நாவல், நாடகம், சிறுகதை, புதுக்கவிதை உள்ளிட்ட இலக்கிய வகைகள் அடங்கும். இக்காலப் பாகுபாட்டைச் சங்ககாலம், சங்க மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், தற்காலம் என்று தமிழகத்தை ஆண்ட மன்னர்களின் ஆட்சியை அடிப்படையாக வைத்துப் பகுத்துக் கூறுவர்.

இதனையே வீரயுகக்காலம், நீதி இலக்கியக் காலம், பக்தி இலக்கியகாலம், காப்பியக் காலம், உரை இலக்கியக் காலம், மறுமலர்ச்சி இலக்கியக் காலம் என்று இலக்கிய வகையை அடிப்படையில் பகுத்துக் கூறுவர்.

### *சங்கக் காலம்*

கி.மு 400 முதல் கி.பி 200 ஆண்டு வரையான காலப்பகுதி கடைச்சங்கக் காலமாகவும் தமிழிலக்கிய வரலாற்றில் பொற்காலம் என்றும் கருதப்படுகிறது. இங்கு அகம், புறம், சார்ந்த நூல்கள் தோற்றம் பெற்றன. புறச்சான்றுகளைவிட அகச்சான்றுகளையே அடிப்படையாகக் கொண்டு இக்காலத்தை வரையறுக்க முடிகிறது. புறநானூற்றுப்பாடலில் சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல், கரு, உரி என மூன்றாக வகுத்து மக்களின் வாழ்க்கை முறையினை அகத்திணை, புறத்திணையினையூடாகச் சிறப்பிக்கும் காலமாக இக்காலம் அமைகிறது.

### *சங்கமருவிய காலம்*

இக்காலம் கி.மு 100 முதல் கி.பி. 500 வரையான காலகட்டமாகும். சங்ககாலத்தை அடுத்துத் தோன்றிய காலம் சங்கமருவிய காலம் ஆகும். இக்காலக் கட்டத்தில் நீதி இலக்கியங்கள் தோன்றின இந்நீதி இலக்கியங்கள் பெரும்பான்மையானவை வெண்பா யாப்பில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்காலக் கட்டத்தில் இரட்டைக் காப்பியங்கள் என்று புகழப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களும், முத்தொள்ளாயிரம் என்ற நூலும் தோன்றின. இந்தச் சங்கக் கால இலக்கியங்களையும், சங்கமருவிய கால இலக்கியங்களையும் சேர்த்துச் செம்மொழி இலக்கியங்கள் என்று வழங்கப்படுகின்றன. சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற பக்தி இலக்கியங்களில் அந்தாதி வடிவம் கையாளப்பட்டமை இலக்கிய வடிவத்தைக் காரைக்கால் அம்மையாரும் முதல் ஆழ்வார்களும் கையாண்டு தனது பக்தி உணர்வு, அனுபவங்களை வெளிப்படுத்தினர்.

### *சிற்றிலக்கியங்களின் தோற்றம்*

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு எனச் சங்க இலக்கியங்களும் சங்கமருவிய கால இலக்கியங்களும் பகுக்கப்பட்டது போன்று பிற்கால இலக்கியங்கள் மூவேந்தர்களின் ஆட்சிக்குப் பிறகு தமிழகத்தில் மாலிக்கா பூரி படையெடுப்பு நிகழ்ந்தது. இசுலாமியப் படையெடுப்பையும், ஆட்சியையும் தடுத்து, நிறுத்த விஜய நகரப் பேரரசு தோன்றியது. அவர்களின் நிகராளிகளாக மதுரையில் நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது. தஞ்சைப் பகுதியை மராட்டியர்கள் கைப்பற்றினர். இவர்கள் கலைகளையும், இலக்கியங்களையும் போற்றி வளர்த்தனர். நிலக்கிழார்கள், சிற்றரசர்களைத் தலைவர்களாகக் கொண்டு புலவர்கள் சிற்றிலக்கியங்களை இயற்றினர். அந்த வகையில் எழுந்தவையே இந்த 96 வகைப் பிரபந்தங்கள்.

பிரபந்தம் என்ற வட சொல்லிற்குப் பொருள் நன்கு கட்டப்பட்டது என்பதாகும். சங்க இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தாலும் அச்சங்க இலக்கியத்தினின்றும் வேறானவையாக இவை அமைந்துள்ளன. கி.பி 9ஆம் நூற்றாண்டு முதல் தொடங்கிய சிற்றிலக்கியங்கள் கி.பி 17ஆம் நூற்றாண்டளவில் நன்கு தோற்றம் பெற்று நன்கு வளர்ச்சி அடைந்து வந்தன. நாயக்க மன்னர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் பெருவளர்ச்சி பெற்றன.

ISSN : 2581-9712

தமிழ் சிற்றிலக்கியம் தோன்றி வளர்ந்த வரலாற்றினை முன்வைக்கும் முனைவர் ந.வி.ஜெயராமன் தொல்காப்பியர் காலத்தில் இடம்பெற்ற சிற்றிலக்கிய வித்து சங்கக் காலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு 5ஆம் நூற்றாண்டில் கோவையென்ற செடியாகி 9ஆம் நூற்றாண்டில் சதகமாக அரும்பி 12ஆம் நூற்றாண்டில் பிள்ளைத்தமிழாக மொட்டாகி 16ஆம் நூற்றாண்டில் தூதாகப் பூத்து 17ஆம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்தது, 18ஆம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது என்று நா.வீ. ஜெயராமன் அவர்கள் தமிழ் சிற்றிலக்கியச் செல்வம் என்ற நூலில் கூறியுள்ளார்.

ஆற்றுப்படை இலக்கியங்கள் தோன்றிய காலத்திலிருந்தே சிற்றிலக்கியங்கள் உச்ச நிலையில் தோற்றம் பெற்றாலும் இது உச்ச நிலையில் இருந்த காலத்தை நாம் கணக்கில் கொள்ள முடியாதுள்ளது. பல்லவர் காலத்தைப் பக்தி இலக்கியக் காலமென்றும் இடைக்காலச் சோழர் காலத்தைக் காப்பியகாலமென்றும் அதன் மேலோங்கிய தன்மையாற் கூறுகிறோம். அது போல நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று அழைக்கலாம் என்றார் தமிழ் அண்ணல். அதாவது கி.பி 15, 16, 17ஆம் நூற்றாண்டுகளை நாம் சிற்றிலக்கியக் காலமென்று அழைக்கலாம். நாயக்கர் காலத்தில் தமிழில் சிற்றிலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றி வளர்ந்தன.

சிற்றிலக்கியம் – சிறிய இலக்கியம் எனப் பொருள்படுகிறது. சிற்றிலக்கியம் என்றும் வகைமையை விளங்கிக்கொள்ளச் சிற்றிலக்கியங்கள் என்று சொல்லப்படும் இலக்கியங்களைப் பேரிலக்கியங்கள் என்று சொல்லப்படும் இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காணவேண்டும்.

- ❖ சிற்றிலக்கியம் அளவில் சுருங்கியதாக அமைவது.
- ❖ அகப்பொருள் புறப்பொருளில் ஏதேனும் ஒரு துறையைப் பற்றியதாக அமையும்.
- ❖ பாடப்பெறும் கடவுள் அல்லது மன்னன் அல்லது வள்ளல் ஆகியோருடைய வாழ்வில் ஒருசில கூறு மட்டுமே விளக்கப்பட்டிருக்கும்.
- ❖ அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப்பொருள்களுள் ஏதேனும் ஒன்றைத் தருவதாக அமைவது.

இந்த வகையில் பிள்ளைத்தமிழ் குறம், இரட்டை மணிமாலை, கலம்பகம் போன்ற பலவகை இலக்கியங்கள் சிற்றிலக்கியம் என்ற வகையுள் அடங்கும்.

### *சிற்றிலக்கிய வளர்ச்சி*

பொருள் அடிப்படையிலான வளர்ச்சி என்னும் போது அகப்பொருள் சார்புடைய சிற்றிலக்கியங்கள்(எ.கா.தூது இலக்கியம்), புறப்பொருள் சார்புடைய சிற்றிலக்கியங்கள் (எ.கா.பிள்ளைத்தமிழ்), துணைப்பொருள் சார்புடைய சிற்றிலக்கியங்கள் (எ.கா. அந்தாதி தத்துவப்பொருள் சார்புடைய சிற்றிலக்கியங்கள்(எ.கா.நெஞ்சுவிடு தூது), நீதிப்பொருள் சார்புடைய சிற்றிலக்கியங்கள் (எ.கா.தண்டலையார் சதகம்) என்பவற்றின் மூலமாகவும் சிற்றிலக்கிய வளர்ச்சியில் இடம்பெறும் பாடல்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு சிற்றிலக்கியம் வளர்ந்து சென்றது. ஐந்து பாடல்களைக் கொண்டும் சில சிற்றிலக்கிய வகைகள் காணப்படுகின்றன. சான்றாகப் பஞ்சகம் என்ற சிற்றிலக்கிய வகைகளைக் கூறலாம். சில சிற்றிலக்கியங்கள் பத்துப்பாடல்களைக் கொண்டும் விளங்குகின்றன. சான்றாகப் பத்துப்பதிகம் என்ற சிற்றிலக்கிய வகைகளைக் காட்டலாம். வேறு

ISSN : 2581-9712

சிற்றிலக்கியங்கள் நூறு பாடல்களைக் கொண்டு விளங்குகின்றன. சான்றாகச் சதகம் என்ற சிற்றிலக்கிய வளர்ச்சியைக் கூறலாம்.

### *திருக்கருவைப் பதிற்றுப்பந்தாதியில் இசைக்கருத்துகள்*

திருக்கருவை மாநகரில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானை அதிவீரராம பாண்டியர் போற்றிப் பாடிய திருக்கருவைப் பதிற்றுப் பந்தாதியில்,

*"பாமாலை வாய்பாடிக் கைகொட்டிப் பதம்பெயர்த்து*
*நாமாட வம்மின்காள்; தொண்டராய் நமரங்காள்"* (பா.44; 3–4)

என்பது இசைமாலையாகப் பாடல்களை வாய்பாடும் போது கைத்தாளம் இடவேண்டும். பாடல்கள் பதமாக அமையும். கூட்டுப் பாடலாக அடியவர்கள் இறைவனைப் போற்றியும் புகழ்ந்தும் பாடி ஆடுவதை இப்பாடல் குறிப்பிடுகிறது.

### *பள்ளில் இசை*

2, 3ஆம் நூற்றாண்டுகளாகத் தமிழ்நாட்டில் வழக்கத்திலிருந்த முழுவதும் இசைப்பாடல்களாக அமைந்த இவ்விசை நாடகப் பாடல்கள் மக்கள் முன்பு பாடப்பட்டு அவற்றுக்குத் தக்கவாறு நடித்து விளக்கப்படும். முக்கூடல் பள்ளிலுள்ள காப்புச் செய்யுள்,

*"பூமேவு நீலவெற்பிற் பொன்னிறமு முண்டெனப்பூ*
*மாமேவு முக்கூடல் மாலழகர் பள்ளிசைக்கே*
*பாமேவு சொற்புரப்பார் பாவலரென றெட்டெழுத்து*
*நாமேவு பத்தர்பத்து நாவலரும் காப்பாமே"*
(முக்கூடற்பள்ளு; காப்பு)

இது இசைத்தன்மையுடைய இசைப்பாடலாக விளங்குகிறது.

பந்துவராளி இராகம் அடதாளத்திலமைந்த "நெற்றியிலிடும் மஞ்சணைப் பொட்டும்...." என்ற இசைத்தன்மையுடைய சிந்துப்பாடல் வகையொன்று முக்கூடற்பள்ளுவினுள் காணப்படுகிறது. சங்கராபரணராகம் அடதாளத்திலமைந்த "மேடை ஏறித்தன் காலைப் பவுசு..." என்ற விருத்த வகை சிந்துப்பாடலும் காணப்படுகிறது.

### *நாடகக்கீர்த்தனைகள்*

ஒரு வரலாற்றை இசைப்பாடல்கள் ராகத் தாளங்களுடன் பல்லவி, அனுபல்லவி, சரணம் அல்லது அனுபல்லவி இல்லாமலோ கீர்த்திப்பாக்களால் நாடகத்தன்மை விளங்க எழுதுவதை நாடகக் கீர்த்திப்பாக்கள் என்று கூறலாம். தமிழ்மொழியில் 1771இல் சீர்காழி அருணாசலக்கவிராயர் இராமநாடகக் கீர்த்தனையையும், 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கோபால கிருஷ்ணபாரதியார் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, இயற்பகை நாயனார் சரித்திரம், திருநீலகண்ட நாயனார் சரித்திரம் என்பவற்றைக் கீர்த்தனைகளாக இசைநயத்துடன் அமைத்துள்ளார்.

### *ஆனந்தக்களிப்புப்பாடல்*

வள்ளலார் கீர்த்தனையமைப்புடன் ஆனந்தப்பரவச நிலையில் சௌராஷ்டிர ராகம், மிஸ்ர ஏக தாளத்திலமைந்த "காணாமலிருக்கலாகாது..." என்ற இவ்வகைப்பாடலை இயற்றியுள்ளார். மேலும் குமரகுருபர சுவாமிகள் திருச்செந்தூர் செந்தில் பெருமான் திருவருளால் வாக்குபெற்றுக் கந்தர்கலிவெண்பா என்ற பிரபந்தத்தையும் கைலாசநாதர் மீது 'கலைக்கலம்பகம்' என்ற பிரபந்தத்தையும் இயற்றினார். மதுரையில் சிலகாலம் தங்கியிருந்த போது மீனாட்சி அம்மையின் மீது ஒரு பிள்ளைத்தமிழ்,

ISSN : 2581-9712

‘மதுரைக்கலம்பகம்’ எனும் பிரபந்தத்தையும் இயற்றினார். திருவாரூருக்குச் சென்று தியாகராஜப் பெருமானைத் தரிசித்துக் கொண்டு ‘திருவாரூர் நான்மணிமாலை’ என்னும் பிரபந்தத்தையும், சிதம்பரத்திற்கு வைத்தீஸ்வரன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் முத்துக்குமாரசுவாமி மீது ஒரு பிள்ளைத்தமிழையும், நடராஜப் பெருமானைத் தரிசித்து ‘சிதம்பர மும்மணிக்கோவை’ என்னும் பிரபந்தத்தையும் இயற்றினார். ஞானதேசிகர் நினைவாக ‘பண்டார மும்மணிக்கோவை’ என்ற பிரபந்தத்தை இயற்றினார். குமரகுருபரர் காசியில் தங்கியிருந்த மடத்திற்குக் குமாரசாமி மடம் என்று பெயர் வைத்தனர்.

அக்காலத்தில் காசித்துண்டி விநாயகர் பதிகமும், காசிக்கலம்பகமும் இவரால் இயற்றப்பெற்றன. பண் அனைவரையும் கவர்வது இன்ப உணர்வை ஊட்டுவது, இத்தகைய உணர்வை ஊட்டும் பண் கவர்ச்சியாகி மனிதனை உலகியல் வாழ்வில் நன்கு ஈடுபடச் செய்யும் ஆகையினால் துறவிகள் பண்ணைக் கேட்க விரும்புவதில்லை. இந்தக்கருத்தை விளக்கும் தரமாகக் குமரகுருபரர் ஒரு குறிப்பைத் தருகிறார்.

***“பண்ணொடு பாடல் செவிமடார்”*** (நீதி நெறி விளக்கம், 85 : 2 –3)

இவர் நீதிநெறி விளக்கத்தில் துறவியர்கள் பெண்களை விரும்பமாட்டார்கள் என்றும் பெண்கள் மிக இனிய பண்களோடு பாட்டினும் அவற்றைச் செவிமடுக்க மாட்டார்கள் என்றும் கீழ்க்காணும் வெண்பாவில் கூறியுள்ளார்.

***“பெண்மை வியவார் பெயரும் எடுத்தோதார்***
***கண்ணொடு செஞ்சுரைப்ப நோக்குகிறார்***
***பண்ணோடு”***

இசை இனியது அனைவரையும் கவர்வது ஆகையினால் உலக இன்பத்தை வெறுத்து வரும் துறவிகள் கேட்க மறுக்கிறார்கள் அவர்களுக்கே தங்களைப் பற்றி நம்பிக்கை இல்லை. தங்களையும் மயக்கிவிடலாம் என்ற எண்ணத்தில் இசையைக் கேட்கத் தயங்குகிறார்கள். இசையின் ஆற்றல் இதனால் நன்கு விளங்கும். அது மனிதனைக் கவர்ந்து இன்பத்தை ஊட்டும்; தன்மையை மிகுதியாக உடையது. சகலகலாவல்லி மாலையில் பண் வாழ்வுக்குக் கல்வியைப் போன்று தேவையானது என்ற செய்தி தரப்படுகிறது. இறைவனின் அருளை வேண்டும் போது,

***“பண்ணும் பரதமும் கல்வியுந்***
***தீஞ்சொல் பனுவலும் யான்***
***எண்ணும் பொழுதெளிநெய்த நல்காய்...”*** *(6:1 – 2)*

பண், பரதம், கல்வி, தீச்சொல் பனுவல் ஆகிய நான்கும் சிறப்பு உடையதாகக் கருதப்பட்டுள்ளதை இதனால் அறியலாம். பண் என்பது இசைக்கலை, அதனை மக்கள் தேவையானதாகக் கருதினர் என்பதற்கு நல்ல சான்றாக அமையும். விளரிப்பண், செவ்விழிப்பண் என்ற இரு பண்களும் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. பழங்காலப் பண்ணிசை வழக்கத்தைத் தமிழர் மறக்கவில்லை என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். குமரகுருபரர் பாணர் பற்றிய குறிப்பைத் தருகிறார். “தௌவிளியெடுக்கும் சீறியாழ்ப்பாண” என்றும், “ஏழிசைப் பாணர்” என்றும் பாணரை விளித்துக் குறிப்பிடுவதைக் காணலாம். இசைக்கருவிகளில் யாழ் பற்றிய குறிப்புகள் பழமையின் நினைவாக இடம்பெறுகின்றன.

***“மகரயாழ்”*** (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (7:10) என்றும்,

*“சீறியாழ்”* (மதுரைக்கலம்பகம் : 46, காசிக்கலம்பகம் 58:4)
என்றும் யாழ் இடம்பெறுகின்றது.

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழின் விபஞ்சி என்ற இசைக்கருவி பற்றிய குறிப்பு தரப்பட்டுள்ளது. “வண்டு புதுமது அருந்தி மல்லிகைப்படுக்கையில் தமிழிசை பயின்ற பெடையொடு தூங்கும்” என்றும் “செவ்வழிப்பண்ணை பதங்கள் பாட அதனைக் கேட்டுக் கொண்டு தூங்கும்” இப்புலவர் விவரிக்கின்றார்.

*“மழலை வண்டு தடமலர் குடைந்து புது*
*மதுவருந்தி மல்லிகைச் சேர்க்கையின்*
*வடிப சுந்தமிழினிசை பயின்ற பெடை*
*யொடுதுயின்றினிய செவ்வழிய பாட்டினை*
*வருவி விபஞ்சி பயில் தருமதங்கள் தெரு”*
(முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.4)
இப்பாடலில் விபஞ்சி என்பது ஒரு வீணை மதங்கள் அதனை இசைத்துக் கொண்டு செவ்வழிப்பண்ணை இரவில் பாடுவார்கள் என்று குமரகுருபரர் கூறுகிறார்.

பண்டார மும்மணிக்கோவையில் பெண்கள் கூடிப்பாடுவதைப் பற்றிய விளக்கம் உள்ளது.
*“தடாகத்தியன்ற சூடகக் கரத்தால்*
*மாடகத் திவ்வியாழ் மருமமீ தணைத்து*
*மூவகை நிலையத் தேழு சுர நீறிக்*
*கொவ்வைவாய் திறந்து குயிலென மிடற்றுபு*
*மென்னமரம் புகிரான்விரன்முறை தடவிக்*
*கின்னரம் வியக்கும் கீதம்பாட”* (பண்டார மும்மணிக்கோவை (17:12 – 17)
இப்பாடலில் மந்திர, மத்திம, தாரம் என்றும் மூவகை ஸ்தாயிகளை “மூவகை நிலையம்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சீறியாழை மழிலைச்சீறியாழ் என்றும் பண்களை எப்பொழுதும் இசைக்கப் பயன்படும் சீறியாழ் என்றும் போற்றியுள்ளார்.

*“பண் அறா மழலை சீறியாழ் மதுரப்*
*பாடற்குத் தேடுவார்கள் காதும்”*
(மதுரைக்கலம்பகம் :41)
காதில் கந்தர்வர்கள் மேற்படி பாடலில் சிவபெருமானார் தம்முடைய ஒவ்வொரு செவியிலும் இசைபாடும் கந்தர்வர்களை அணிந்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

குமரகுருபரர் சிதம்பரச் செய்யுட் கோவையில் குறைப்பு முறையில் நாற்சீர் ஓரடி அம்போதரங்கம் முச்சீர் ஓரடி அம்போதரங்கம், இருசீர் ஓரடி அம்போதரங்கம் என்று சொட்டச் சொட்டச் சொல்லமுதம் பெய்து ஆங்காங்கு அமைந்துள்ளார்.

*“இருசீர் ஓரடி அம்போதரங்கம்*
*பாடுவார் சிலர் ஆடுவார் சிலர்*
*பரவுவார் சிலர் விரவுவார் சிலர்*
*வாடுவார் சிலர் ஓடுவார் சிலர்*
*மகிழுவார் சிலர் புகழுவார் சிலர்”*

பல்வேறு நடைகளில் (சிதம்பரச் செய்யுட் கோவை, 58) என்ற சந்த விருத்தங்களைப் பாடிப் பொழிந்துள்ளார்.

*“மூன்றன் அலகு நடையில் ஒரு சந்தவிருத்தம்*
*உலகுளிர வெமது மதியலொழுகு மமுத கரணமே*
*ஊருகுமடிய ரிதய நெகிழவுணர்விலெதுதலுதயமே*
*கலையு நிறையு மறிய முதிரமுதிரு மதுர நறவமே*
*கழுவுதுகளர் முருக நெடிய கருணை பெருகு கலதியே”* (முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் வருகைப் பருவம்.3).

யாழிசை மீட்டிச் சங்ககால முறைப்படி குமரகுருபரர் காட்டியுள்ளார். தேவர் இனமான கின்னர் இசை வல்லுநர், கின்னரம் என்ற யாழால் இசைமீட்டிப்பாடும் திறனுடையவர் அவர்கள் வியக்குமாறு கீதம்

ISSN : 2581-9712

பாடிய பெண்கள் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர். மதுரைக் கலம்பகத்தில் "குழலிசையை வேயிசை"(99) என்றும், காசிக் கலம்பகத்தில் "தீங்குழற்கானம்"(79) என்றும் கூறப்படுவதில், குழல் குறிப்பிடப்படுகிறது. குழலும், வேயும், வேறுபடுவதில்,குழல் குறிப்பிடத்தக்கதாகும். வேய் வேறுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வேய் என்பது மூங்கில் குழலான புல்லாங்குழலைக் குறிக்கும். அவ்வாறாயின் குழல் என்று கூறியிருப்பது நாதசுரமாகத் தான் இருக்க முடியும்.

நாதசுரத்தைக் குழல் என்று தனித்துக்கூறும் வழக்கம் இருப்பதை இதன் வாயிலாக உறுதிப்படுத்தலாம். பாடல், கீதம், கானம் ஆகிய மூன்று சொற்களும், இசைப்பாடலைக் குறிக்கும், இயல் பாடலையும் பாடல் என்று குறிப்பர். ஆனால் கீதம், கானம், இரண்டும் இசைப்பாடலையே சுட்டுவன, கானம் குமரகுருபரர் பாடலில் பயனுக்கு வந்து விட்டதை அறியலாம். கீதம் திவ்வியப் பிரபந்தத்தில் காணப்படுகிறது. தேவாரத்திலும் இடம்பெறுகிறது. இவர் தாம் இயற்றிய மதுரைக் கலம்பகத்தில் செவ்வழிப்பண்ணைக் குறிப்பிட்டுள்ளார். செவ்வழிப்பண் என்பது இரு மத்திமங்கள் கொண்டு தேடி இதில் பஞ்சமம் இடம்பெறாது. பாணபத்திரன் இறைவனைச் செவ்வழிப்பண் பாடித் தொழுதான் என்றும், அவனுக்குச் சிவபெருமான் சொற்பலகையைக் கொடுத்தார் என்றும் குமரகுருபரர் கூறியுள்ளார்.

*"கரும்பொளிச் சுரும்பர் செவ்வழி பாடச்*
*சேயிதழ்விரிக்கும் சொற்பொருட்டு அம்புயம்*
*பாண் மகற்கு அலச் பொற்பலகை நீட்டும்"*
(மதுரை கலம்பம் – 48)

குமரகுருபரர் பற்பலச் சிற்றிலக்கியங்கள் இயற்றியதன் மூலமாகச் சிறந்த தமிழ்ப்பணி ஆற்றியுள்ளார்.

### *முடிவுரை*

பல்வேறு வகை அமைப்புகள் அமைந்த சிற்றிலக்கியங்கள் வாயிலாக நாம் பல இசைச் செய்திகளை அறியக்கூடியதாக உள்ளது. இதுவரை இந்த விடயங்களைத் தொகுத்து நோக்கும் போது சிற்றிலக்கியங்கள் பற்றியும், அவற்றின் தோற்றம், வளர்ச்சி, சிறப்புகள், அதன் வகைகள் மற்றும் இசைச் செய்திகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள இசைச் செய்திகளால் கலையுலகு மிகுந்த பயனைப் பெறும் என்பதை மறுப்பார் எவருமில்லை எனலாம்.

### *உசாத்துணை நூல்கள்*

1. சண்முகம்பிள்ளை, மு, சிற்றிலக்கிய வகைகள், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை – 1982
2. ஜெயராமன், ந.வீ, சிற்றிலக்கியச் செல்வம், மாணிக்க வாசகர் நூலகம், சிதம்பரம் – 1978.
3. சிவத்தம்பி, கா, இலக்கியமும் கருத்து நிலையும், தமிழ் புத்தக நிலையம், சென்னை – 1982.
4. செல்லத்துரை, பி.டி, தென்னக இசையியல், ஐந்தாம் பதிப்பு, சென்னை – 1984.
5. அருணாசலம், மு, தமிழ் இலக்கிய வரலாறு, தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம், சென்னை – 1990.

******************************

ISSN : 2581-9712



# செவ்வியல் இலக்கியங்களில் ஆன்மிகக் கூறுகளும் தற்கால வளர்ச்சியும்

முனைவர் *இரா. அசோக்குமார்*
உதவிப்பேராசிரியர்(STC),
அவ்வையார் அரசு மகளிர் கல்லூரி,
காரைக்கால்.

தமிழின் தொன்மையைக் கூறுமிடத்துத் தமிழர்களின் தொன்மையை அறிய முற்படல் வேண்டும். தமிழர்களின் தொன்மையை ஆராயுமிடத்து முடிந்த முடிவாக எதனையும் கூறமுடியாது. இருப்பினும் குறிப்பிடத்தக்க வகையில் தமிழர்களின் தொன்மைக்கு வள்ளுவரின் குறளும் அதன் பரிமேலழகரின் உரையும் துணைபுரிகின்றன. ஐயனாரிதனார் கூறுவதுபோல, 'கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தக்குடி' என்பது இக்கருத்துக்கு மேலும் துணைசெய்கின்றது.

அப்படிப்பட்ட தமிழும் தமிழோடு கூடிய பண்பாட்டையும் தங்கள் உயிர்மூச்சாகக் கருதிய தமிழர்களின் வீரம், புகழ், கொடை, களவு, கற்பு ஆகியவற்றைப் பிரதிபலித்துக்காட்டும் இலக்கியங்கள் தமிழில் எண்ணற்ற தோன்றியுள்ளன. இவை அனைத்தும் செவ்வியல் நூல்களே. இருப்பினும் பல ஆராய்ச்சி அறிஞர்களாலும் மொழியறிஞர்களாலும் 41 நூல்கள். தேர்ந்தெடுக்கப்பட்டுத் தொகுத்து வகைப்படுத்தி செவ்வியல் நூல்களாக இன்று தமிழகம் மட்டுமின்றி உலக நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

### *தமிழ்ச் செம்மொழி நூல்கள்*

தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் பதினெண்மேற்கணக்கு நூல்கள், நீதிநூல்கள் அல்லது அறஇலக்கியம் எனும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், காப்பியங்களில் சிலப்பதிகாரமும், மணிமேகலையும், முத்தொள்ளாயிரம், இறையனார் களவியல் ஆகிய 41 நூல்கள் தமிழ்ச் செம்மொழி நூல்கள் ஆகும். அவற்றுள்,

### *இலக்கண நூல் –1*

1. தொல்காப்பியம்

### *பதினெண்மேற்கணக்கு நூல்களில் (18)*

### *எட்டுத்தொகை நூல்கள் (8)*

2. நற்றிணை, 3. குறுந்தொகை, 4. ஐங்குறுநூறு, 5. பதிற்றுப்பத்து, 6. பரிபாடல், 7.அகநானூறு, 8. புறநானூறு, 9 கலித்தொகை.

### *பத்துப்பாட்டு நூல்கள் (10)*

10. திருமுருகாற்றுப்படை, 11. பொருநராற்றுப்படை, 12. சிறுபாணாற்றுப்படை, 13. பெரும்பாணாற்றுப்படை, 14. முல்லைப்பாட்டு, 15. மதுரைக்காஞ்சி, 16. நெடுநல்வாடை, 17. குறிஞ்சிப்பாட்டு, 18. பட்டினப்பாலை, 19. மலைபடுகடாம்.

### *பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (18)*

20.நாலடியார், 21. நான்மணிக்கடிகை, 22. இன்னாநாற்பது, 23. இனியவை நாற்பது, 24. கார்நாற்பது, 25. களவழிநாற்பது, 26. ஐந்திணை ஐம்பது, 27. ஐந்திணை எழுபது, 28. திணைமொழி ஐம்பது, 29. திணைமாலை நூற்றைம்பது, 30. பழமொழி,

31. சிறுபஞ்சமூலம், 32. திருக்குறள், 33. திரிகடுகம், 34. ஆசாரக்கோவை, 35. முதுமொழிக்காஞ்சி, 36. ஏலாதி, 37. கைந்நிலை.

*காப்பியங்கள் (2)*

38. சிலப்பதிகாரம், 39. மணிமேகலை

எண் அடிப்படையில் அமைந்த மூவேந்தர்கள் பற்றிய இலக்கியம் –1

40. முத்தொள்ளாயிரம்

*களவியல் இலக்கண நூல் –1*

41. இறையனார் களவியல்.

மேற்கூறிய 41 செவ்வியல் இலக்கியங்களிலும் சமயக்கூறுகள் விரவிக் கிடக்கின்றன. ஆன்மிகக் கூறுகள் என்ற நிலையில் செவ்வியல் இலக்கியங்களில் காணப்படும் சமயக் கூறுகளை மூவகைப்படுத்திக் கூறலாம். பெருந்தெய்வச் சமயக்கூறுகள், சிறுதெய்வ சமயக்கூறுகள், இயற்கை வழிபாடுகள். சிவன், திருமால், முருகன், அருகதேவன் போன்ற பெருந்தெய்வ சமயக்கூறுகளும், துர்க்கை, கொல்லிப்பாவை போன்ற சிறுதெய்வ சமயக்கூறுகளும், சூரியன், சந்திரன், மலை, ஆறு போன்ற இயற்கை வழிபாட்டுக் கூறுகளும் காணப்படுகின்றன.

### *செவ்வியல் கூறுகள் – வித்திட்டவர்களும் வரையறைகளும்*

ஒருமொழி செம்மொழி என்னும் உயரிய இடத்தைப் பெறவேண்டுமானால் அம்மொழி கொண்டிருக்கவேண்டிய கூறுகளை பரிதிமாற்கலைஞர் 1903இல் 'தமிழ்மொழி வரலாறு' என்னும் நூலில் கூறியுள்ளார். அவருக்கு 30 ஆண்டுகளுக்கு முன் கால்டுவெல் அவர்கள் எழுதிய 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் நூலில் இதற்கான வித்துகள் தோன்றின எனலாம். அதனைத் தொடர்ந்து தேவநேயப் பாவாணர், வா.செ.குழந்தைசாமி, மணவை முஸ்தபா ஆகிய தமிழ்நாட்டு அறிஞர்களும், யாழ்ப்பாணத்துத் தமிழறிஞர் கா.சிவத்தம்பி, மேனாட்டைச் சேர்ந்த பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் முதலானோர்களும் தமிழின் செவ்வியல் தகுதிகளுக்கான வரையறைகளைத் தந்துள்ளனர். அவற்றை நிரல்படுத்தி அகப்படுத்தி தமிழக அரசால்,

1. தொன்மை
2. தனித்தன்மை
3. பொதுமை
4. நடுநிலைமை
5. பலமொழிகளுக்கும் தாயாகும் தன்மை
6. பண்பாட்டு, கலை, பட்டறிவு வெளிப்பாடு
7. தனித்தியங்கும் தன்மை
8. இலக்கியவளம்
9. கலை இலக்கியத்தன்மை வெளிப்பாடு
10. உயர்சிந்தனை
11. மொழிக்கோட்பாடு

என்னும் 11 வரையறைகளைச் செம்மொழிக்கானவை எனச் செப்பம் செய்யப்பட்டுள்ளது.

### *1. தொன்மை*

உலகில் உள்ள பிற மொழிகளைக் காட்டிலும் காலத்தால் மூத்த தன்மையினைக் கொண்டிருத்தல். இலெமூரியா கண்டம் தோன்றிய காலந்தொட்டே தமிழ்மொழி இருந்துள்ளமை.

### *2. தனித்தன்மை*

மற்ற மொழிகளுக்கு இல்லாத தனிச்சிறப்பினைக் கொண்டிருத்தல். உலகில் வழங்கப்படும் பிற மொழிகளுக்கு இல்லாத தனித்தன்மையினைத் தமிழ் கொண்டிருக்கிறது. இயல், இசை, நாடகம்

ISSN : 2581-9712

என்னும் முத்தமிழ்ப் பிரிவுகளும் அவற்றிற்கான நூல் வளங்களையும் பெற்றிருத்தல். அகம், புறம் என்னும் வாழ்வியல் தெளிவுகளையும் அவற்றிற்கான நூல்களையும் தனித்தனியே கொண்டு சிறந்திருத்தல். அறநூல்களின் மூலம் வாழ்வியல் விழுமியங்களை உலகிற்கு எடுத்துரைத்து முன்னோடியாகத் திகழ்தல். ஐந்திணை வளம்பெற்ற நூல்களுடன் பொலிதல். பேரிலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் செப்புடன் திகழ்தல். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி இலக்கண வளம். தனிபெரும் சிறப்புமிக்க அகராதி, நிகண்டுகளைப் பெற்றிருத்தல்.

### 3. *பொதுமை*

அனைவருக்கும் பொதுவாக இருத்தல் பொதுமை எனப்படும். குறிப்பிட்ட ஒரு இனத்தவர்க்கோ, ஒரு மொழியினர்க்கோ, ஒரு நாட்டினர்க்கோ மட்டுமின்றி உலகில் உள்ள அனைவருக்கும் பொருந்தி அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சுவைக்கக்கூடிய பான்மையினைப் பெற்றிருத்தல்.

### 4. *நடுநிலைமை*

சொல்லப்படும் கருத்துகள், அற விழுமியங்கள் ஒரு சார்பின்றி உலகோர் அனைவருக்கும் பொருந்தும் நிலையைப் பெற்றிருத்தல்.

### 5. *பலமொழிகளுக்கும் தாயாம் தன்மை*

ஒரு மொழியில் உள்ள சொற்களின் வேர்ச்சொல், அடிச்சொற்களிலிருந்து பிற மொழிகள் தோன்றி வளர்வதற்கேற்ற செழுமை உடையதாக விளங்குதல்.

### 6. *பண்பாட்டு, கலை, பட்டறிவு வெளிப்பாடு*

பண்பட்ட நிலத்திலிருந்து வளமான பயிர்கள் விளையும். அதுபோல பண்பட்ட மொழியிலிருந்து உணர்விற்குச் செழுமையான கலைக்கூறுகளும், அறிவிற்குச் செப்பமான அனுபவப் பிழிவு நூல்களும் தோன்றும் வளமையைப் பெற்றிருத்தல்.

### 7. *தனித்தியங்கும் தன்மை*

வணிகத் தொடர்பு, போக்குவரத்து முதலான காரணங்களால் ஒவ்வொரு மொழியிலும் பிறமொழிச் சொற்கள் கலந்திருக்கும். இன்னபிற காரணங்களால் மொழியில் கலந்திருக்கும் பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் தன்மொழிக்கே உரிய சொற்களை மட்டும் கொண்டு தனித்து இயங்கவல்ல ஆற்றலை ஒரு மொழி பெற்றிருத்தலாகும்.

### 8. *இலக்கிய வளம்*

இன்றைய செய்தி நாளைய வரலாறு. இதைப்போலவே நேற்றைய வாழ்வியல் இன்றைய இலக்கியம். தொன்றுதொட்டு வரும் தொல்பழங்கால வாழ்வியல் கூறுகளின் பதிவுகளை உள்ளடக்கி கற்பனையும், இலக்கியச் சுவையும் கலந்து படைக்கப்படுவது இலக்கியங்கள். இத்தகு இலக்கிய குவியல்களைப் பெற்றிருப்பது இலக்கிய வளம் ஆகும்.

### 9. கலை, இலக்கியத் தன்மை வெளிப்பாடு

கலைகள், இலக்கியங்களின் தன்மை, இயல்புகள் என்பன எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைக் கூறுவது கலை, இலக்கியத் தன்மை வெளிப்பாடு எனப்படும்.

### 10. *உயர்சிந்தனை*

இலக்கியம் வரையப்பட்டுள்ள மொழிபேசும் மக்களை மட்டுமின்றி உலகின் அனைத்து மக்களையும் உயர்வாக சிந்திக்கச்செய்யும் ஆற்றல் பெற்று உலகோரை உயர்வானப் பாதையில் செலுத்திச் செம்மாத்திருத்தல்.

ISSN : 2581-9712

### 11. மொழிக்கோட்பாடு

இன்னது இவ்விலக்கண வரையறையில் எழும் என்னும் திட்டமான வரையறை நுட்பங்களைக் கோட்பாடுகளாக ஒருமொழி கொண்டிருத்தல் மொழிக்கோட்பாடு எனப்படும்.

தமிழ்மொழி இப்பதினொரு வரையறைகளையும் இயல்பாகப் பெற்று செவ்வியல் மொழியாக செழித்து விளங்குகிறது.

### தொல்காப்பியமும் ஆன்மிகக்கூறுகளும்

தொல்காப்பியத்தின் காலம் கி.மு. 711 என்று அறிஞர் பெருமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பின்பற்றப்பட்டு வருகிறது. இதன் ஆசிரியர் தொல்காப்பியர். எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று இலக்கணங்களைக் கூறினாலும், யாப்பு, அணி போன்ற இலக்கணங்ளையும் பொருளதிகாரத்தில் அமைத்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியத்தில் இயற்கைப் புணர்ச்சி என்றவிடத்துப் பத்துக் குணங்களிலும் தலைவனும் தலைவியும் இறையருளால் சந்தித்துக் கொள்வது. அல்லது முற்பிறவியின் பயனால் ஒத்த இருவரும் சந்திப்பது என்றவிடத்தும் சமயச் சிந்தனை முன்வைக்கப்படுகிறது. தொல்காப்பியத்தில் சமயக்கூறுகள் ஆங்காங்கே இடம்பெற்றிருப்பினும் நிலப்பாகுபாட்டை உணர்த்தும்போது நான்கு நிலத்திற்குமுரிய தெய்வங்கள்,

*“மாயோன் மேய காடுறை உலகமும்*
*சேயோன் மேய மைவரை உலகமும்*
*வேந்தன் மேய தீம்புனல் உலகமும்*
*வருணன் மேய பெருமணல் உலகமும்”*

என்று தொல்காப்பியத்தில் சுட்டிக்காட்டப்படுகின்றது. பின்னர் பாலைத் திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்கள் கூறப்படுகின்றன. காரணம் பாலைத்திணை என்பது, ‘முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பிழந்து நடுங்குதுயருறுத்துப் பாலை என்பதோர் படிவங் கொள்ளுவதால்’ ஆகும். அகத்திணைகள், புறத்திணைகள் பற்றிக் கூறும்போதும் சிறுதெய்வங்கள் பற்றிய குறிப்புகளையும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

சான்றாக, போருக்குச் செல்லும் வீரர்கள் கொற்றவையை வணங்கிச் செல்வதும் பின்னர் வெற்றி பெற்றுக் கொற்றவையை வணங்குவதையும் அறியமுடிகிறது. மேலும், ‘விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூல்’ என்றவிடத்தும் இறைவன் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன.

### சங்க இலக்கியம்

சங்க இலக்கியங்கள் எனக் குறிக்கப்பெறும் பதினெண்மேற்கணக்கு நூல்கள் 18 ஆகும். அவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இருபிரிவாகப் பகுக்கப்பட்டுள்ளன. இவற்றின் காலம் கி.மு 5ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரையிலான 700 ஆண்டுகாலம் ஆகும். இவ்விடைப்பட்ட காலத்தில் எத்தனையோ தமிழ் இலக்கியங்கள் தோன்றியிருந்தாலும் காலத்தால் அழிந்ததுபோக எஞ்சியிருப்பது இப்பதினெட்டு நூல்களே ஆகும்.

### எட்டுத்தொகை

அவற்றில் எட்டுத்தொகை நூல்களை,

*“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு*
*ஒத்தப் பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்*

ISSN : 2581-9712

*கற்றறிந்தார் ஏத்தும் கலியொடு அகம்புறமென*
*இத்திறத்த எட்டுத்தொகை"*
என்னும் பழம் பாடல் உணர்த்தும்.

இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்தும் அகம்பற்றிய நூல்களாகும். பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய இரண்டும் புறம்பற்றிய நூல்களாகும். பரிபாடல் அகமும்; புறமும் சார்ந்த நூல்.

*அகநூல்கள்*

*நற்றிணை*

400 பாடல்களைக் கொண்ட அகநூல். 175 புலவர்கள் பாடியுள்ளனர். இதில் இடம்பெறும் பாடல்களின் அடிவரையறை 9 – 12 அடிகள் ஆகும். குறிஞ்சித்திணை பற்றி 131 பாடல்கள், பாலைத்திணை –106 பாடல்கள், நெய்தல் திணை –101 பாடல்கள், மருதம் –32 பாடல்கள், முல்லை – 29 பாடல்கள் அமைந்துள்ளன. ஆசிரியர் பெயர் அறியப்படாத 51 பாடல்களும் அமைந்துள்ளன. பாரதம் பாடிய பெருந்தேவனால் கடவுள் வாழ்த்து ஒன்று பாடப்பட்டுள்ளது. அது திருமால் பற்றியதாகும்.

*குறுந்தொகை*

400 பாடல்களைக் கொண்டது. 205 புலவர்கள் பாடியுள்ளனர். இதில் இடம்பெறும் பாடல்களின் அடிவரையறை 4 – 8 அடிகள் ஆகும். குறிஞ்சித்திணை பற்றி 145 பாடல்கள், பாலைத்திணை –90 பாடல்கள், நெய்தல் திணை –71 பாடல்கள், மருதம் –50 பாடல்கள், முல்லை – 45 பாடல்கள் அமைந்துள்ளன. ஆசிரியர்பெயர் அறியப்படாத 10 பாடல்களும் அமைந்துள்ளன. உவமையால் பெயர்பெற்றோர்–18 பேர். பெண்பாற் புலவர்கள் 11 பேர் இடம்பெற்றுள்ளனர். பாரதம் பாடிய பெருந்தேவனாரால் கடவுள் வாழ்த்து இரண்டு பாடப்பட்டுள்ளன. அவை முருகன் பற்றியதாகும்.

49 ஆவது பாடல் பிறவி பற்றியும், 89 ஆவது பாடல் கொல்லிப்பாவை பற்றியும், 58 ஆவது பாடல் இறைவனால் அருளப்பட்ட கொங்குதேர் வாழ்க்கை என்ற பாடலையும் நோக்கும்போது சமயச் சிந்தனைகள் மறைந்து கிடப்பதை அறியலாம்.

*ஐங்குறுநூறு*

ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்கள் வீதம் 500 பாடல்களைக் கொண்டது. 5 புலவர்கள் பாடியுள்ளனர். இதில் இடம்பெறும் பாடல்களின் அடிவரையறை 3 – 6 அடிகள் ஆகும். இந்திரவிழா பற்றிய பாடல்களில் சமயக் கூறுகள் கூறப்பெறுகின்றன. இறைவனை வேண்டிப் பிள்ளைப் பெற்றச் செய்திகளும் கூறப்பெறுகின்றன.

*கலித்தொகை*

சிவன் பற்றிய கடவுள் வாழ்த்தோடு 150 பாடல்கள் அமைந்துள்ளன. 5 புலவர்கள் பாடியுள்ளனர். இதில் இடம்பெறும் பாடல்களின் அடிவரையறை 11 – 80 அடிகள் ஆகும். குறிஞ்சித்திணைப் பற்றி கபிலர் 29 பாடல்களும், பாலைத்திணைப் பற்றி பெருங்கடுக்கோ 35 பாடல்களும், நெய்தல் திணைப் பற்றி நல்லந்துவனார் 33 பாடல்களும், மருதத் திணைப்பற்றி மருதனிளநாகனார் 35 பாடல்களும், முல்லைத்திணைப் பற்றி நல்லுருத்திரனார் 17 பாடல்களும் பாடியுள்ளனர்.

*நற்றிணையில் ஆன்மிகக்கூறுகள்*

9ஆவது பாடலில் பாலைத்திணையில் எந்தச் செயலையும்

ISSN : 2581-9712

சிறப்பாகச் செய்ய முயல்கின்ற ஆர்வமிக்கவர்கள் அச்செயல் நன்கு முடிய தாம் வழிபடுகின்ற தெய்வத்தைக் கண்கூடாக கண்டாற்போல, தலைவன் பெருங்காலமாகத் தலைவியைப் பெற முயன்றதால் ஏற்பட்ட மனக்கவலையும் வருத்தமும் தீர்ந்தது என்று கூறும் அகப்பாடலில் தான் வணங்கும் தெய்வம் என்ற வகையில் கடவுள் பற்றி இடம்பெற்றுள்ளது.

*"அறிவிலார் முயலும் ஆர்வ மாக்கள்*
*வழிபடு தெய்வம் கண் கண்டா அங்கு"*

தெய்வங்கண்டு பெற்றதோர் வரம் என்பது இவ்வரியின் பொருளாகும்.

155ஆவது நெய்தல் திணைப்பாடலில் நீர்தெளிந்த அலையையுடைய பெரிய கடற் பரப்பின்கண் விரும்பி உறையும் கடல் தெய்வம்,

*"...தெண் திரைப்*
*பெருங்கடல் பரப்பின் அமர்ந்துறை அணங்கோ ?"*

என்ற வழியும் இறை செய்திகள் இடம்பெறுகின்றன.

*அகநானூறு*

*"பொறையன் கொல்லி ஒளிறு நீர்இடுக்கத்து*
*வியலகம் பொற்பக் கடவுள் எழுதிய பாவை"*

என்ற வரியில் கடவுள் பற்றிய சிந்தனை முன்வைக்கப் படுகின்றன.

**சங்க இலக்கியத்தில் முருகனும் சமயமும்**

சங்க இலக்கியங்களை நோக்கும்போது குறிஞ்சித்திணையில் களவுத் தெய்வமாகவும், மருதத்திணையில் வீரத்தெய்வமாகவும் உருப்பெற்ற முருகன் கொற்றவையுடன் இணைத்துப் பேசப்பெறுகின்றான்.

*"வெண்திரைப் பரப்பின் கடுஞ்சூர் கொன்ற*
*பைம்பூண் சேஎய் பயந்த மாமோட்டு*
*துணங்கை அம் செல்வி"* (பெரும்.457–459)

என முருகன் கொற்றவை மகனாகக் காட்டப்படுகிறான். மேலும், பரிபாடல் 2,5,8,9 ஆம் பாடல்களிலும், திருமுருகாற்றுப்படை 213 –255 வரிகள் வரையிலும் முருகனின் பிறப்புக் கதைக் கூறப்படுகின்றது.

*"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்"*
(புறம்.186:1–2)

என இறைவன், உயிர்களைக் காப்பவன், உலகைப் படைத்தவன் எனும் சிந்தனை மன்னர்களுக்கும் இப்பாடல்வழி விரித்துக் கூறப்படுகிறது. முருக வழிபாடும் திருமால் வழிபாடும் இதற்குப் பேரளவில் அவர்களுக்குத் துணை செய்திருக்கின்றன. நில எல்லைப் பெருக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மன்னர்கள் நிகழ்த்திய போர்களில் பகைவரை அழிப்பது நியாயமானது என்பதை நிலைநாட்டும் நோக்கில் முருகன் வீரத் தெய்வமாகவும், போரில் வெற்றிபெற கொற்றவை முதலான தெய்வங்களையும் வணங்கும் மரபும் ஏற்பட்டது என்பதையும் அறியலாம்.

வேள்வி செய்தல் போர் வெற்றிக்கு இன்றியமையாதது என்று கருதப்பட்டது என்பதை,

*"நான் மறை முனிவர்கற்றமாக*
*மன்ன ரேவல் செய்ய மன்னிய*
*வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே"*
(புறம்.26:13–15)

எனும் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுவதை அறியலாம். மேலும், திருமுருகாற்றுப்படையில்,

*"ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞான்*
*பலராக் காழகம் புலர உடீஇ*
*உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து*
*ஆறு எழுத்து அடங்கிய அருமறைக் கேள்வி*
*நாஇயல் மருங்கின் நவிலப் பாடி"* (183 –187)

ISSN : 2581-9712

என்று முருக வழிபாடும் தோற்றமும் கூறப்பெறுகிறது. இந்நூலில் அறுபடை வீடுகள் பற்றிய செய்திகள் கூறப்பெறுகிறது. இதில் வெவ்வேறு இடங்களைச் சார்ந்த மக்களின் சமயச் சிந்தனைகள் முருகனை மையமாகக் கொண்டு கூறப்பெறுவதையும் அறியமுடிகிறது.

***சங்க இலக்கியத்தில் அணங்கும் வெறியாடலும்***

அணங்கு எனும் சொல் சங்க இலக்கியத்தில் பரவலாக காணப்படுகின்றன. இச்சொல் வருத்தம், அச்சம், பேய், நோய், வடிவு, அழகு, தெய்வம், தெய்வத்தன்மை, வெறியாட்டு எனும் பல பொருட்களில் வந்துள்ளது. வெறியாட்டு எனும் பல பொருள்களில் வந்துள்ள இச்சொல் வெறியாட்டு எனும் ஒருபொருட் பலசொல்லாய் வந்திருந்தாலும் முருகனுடன் தொர்புடையதாக காட்டப்பட்டுள்ளது.

***"வேலன் வெறியர்களத்துச் சிறு பல தூஅய விரவுவீ உறைத்த ஈர்நறும் புறவு"*** (அகம் 114:1–3)

எனும் பாடலில் வரும் வெறியர் எனும் சொல்லுக்கு இணையாக,

**"காடுகெழு நெடுவேட் பாடுகொளைக் கேற்ப**
**அணங்கயர் வியன் களம்"** (அகம் 382:5–6)

என அணங்கயர் எனும் சொல் ஆளப்பட்டுள்ளது. அணங்கு கன்னிப் பெண்களைத் தீண்டி வருத்தும் ஆற்றலாய் தெய்வமாய் கருதப்பட்டுள்ளது. முருகனால் வரும் இந்த அணங்கு வேலன் எனும் பூசாரி தெய்வமேறி ஆடி இதற்கு முருகனே காரணமானவன் எனக் குறிசொல்ல, வெறியாடும் களத்திலே ஆடு முதலான பலிகொடுத்து முருகனை வணங்குதல் வழி, இந்நோய் நீங்கும் என்ற நம்பிக்கையும் சங்க கால மக்களிடம் இருந்துள்ளமையை அறியமுடிகிறது. இதுவே வெறியாட்டு எனப்பட்டது. இந்த வெறியாட்டு பற்றிய 40 பாடல்கள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன என்பதை வ.சுப. மாணிக்கனார் குறிப்பிடுகிறார்.

இந்த வெறியாட்டு, "பெண்ணின் தோற்ற வேறுபாடு கண்ட தாய் அதை வெறி" என மயங்கி எண்ணுவதாக ஐங்குறுநூற்றிலும் (பா. 242),

"முருகனைப் பேணி வழிபடல் மூலம் தலைவி இந்நோயினின்றும் நீங்குவாள்" என முதுவாய்ப் பெண்டிர் குறி கூறுவதாக அகநானூற்றிலும் (பா. 22:8–11),

வெறியாட்டுக் களம் அமைத்தலை மதுரைக்காஞ்சி (284), திருமுருகாற்றுப்படை (222), அகநானூறு (பா22), குறுந்தொகை (பா.53), "வேலன் வெறியாடுதல்" (அகம். பா. 292, ஐங்.பா.243), ஆட்டுக் குட்டியைப் பலியிடல் (அகம்.பா. 242, 292, குறுந்.பா.263, நற்.47) செந்நெல்லின் வெண்பொறி தூவுதல் (அகம்.பா. 272), நீருடன் செந்திணை தூவுதல் (அகம.பா.272), குருதி கலந்த தினை தூவுதல் (திருமுரு. 242), மலர்தூவி வழிபடல் (நற்.பா.322, அகம்.பா.263),

இசைக்கருவிகள் இசைத்தல் (மது.612, திருமுரு.197, குறுந்.பா.263),

பாடுதல் (அகம்.பா.22). இதற்குக் காரணம் 'வெறி' அல்லது 'அணங்கு' என வேலன் கூறுதல் (ஐங்.பா.243, பரி.பா.5, நற்.பா.322, குறுந்.பா.360).

வேலன் முருகனால் இந்த நோய் வந்தது எனக் கூறல் (அகம்.பா.388, ஐங்.பா.247, 249).

வேலன் கலங்குக்குறி கூறுதல் (நற்.பா.268,282,47, ஐங்.பா.245, 246, 248, 249, 250).

ISSN : 2581-9712

குரவை ஆடுதல் (மது.613–615, திருமுரு.137) ஆகிய சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றன.

### *இரட்டைக் காப்பியங்களில் ஆன்மிகக் கூறுகள்*

பன்னெடுங் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் ஐநூற்றிற்கும் மேற்பட்ட பெருங்கோயில்கள் இருந்ததை அறியமுடிகின்றது. சங்ககாலத்தில் சிவன், முருகன், பலராமன், திருமால் ஆகிய தெய்வங்களின் திருக்கோயில்கள் தனித்தனியே அமைந்திருந்தன என்பதை,

*"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்*
*அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்*
*வால்வளை மேனிவாலி யோன் கோயிலும்*
*நீலமேனி நெடியோன் கோயிலும்*
*மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்"*

எனும் சிலப்பதிகார அடிகள் உறுதி செய்கின்றன.

"இறைவன் திருக்கோயிலும், மன்னனின் மாளிகையும் ஆகமநூல் கற்ற சிற்பிகளாலும், அமைச்சர்களாலும் நாள் குறித்து, நாழிகைப் பார்த்து, நூல் முறைப்படி வகுக்கப்பட்டதைச் சிலப்பதிகாரமும் நெடுநல்வாடையும் தெளிவாகக் கூறுகின்றன. திருக்கோயில்கள் சங்ககாலம் எனப்படும் பழங்காலத்துக் கோயில்களே" என்ற கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

ஆலமரத்தடியில் இறைவனை வைத்து வழிப்பட்டதைச் சங்க இலக்கியச் சிறுபாணாற்றுப்படை, "ஆலமர்செல்வன்" என்று குறிப்பிடுகிறது. சங்ககாலத்தில் ஆலயங்களில் சிற்பங்கள் சுதையாலும், மரத்தாலும், கல்லாலும் செய்யப்பெற்றன என்பதை மணிமேகலை,

*"மண்ணிலும் கல்லிலும் மரத்திலும் சுவரிலும்*
*கண்ணிய தெய்வதம் காட்டுநர்வகுக்க"*

என்று கூறுகிறது. இவ்வாறு அமைக்கப்பட்ட ஆலயங்கள் காலத்தாலும், திருப்பணி செய்யும்போது ஏற்பட்ட அழிவாலும், மக்களின் கவனக்குறைவாலும், அழிந்து போயின என்பதை,

*"இட்டிகை நெடுஞ்சுவர்விட்டம் வீழ்ந்தென*
*மணிப்புறாத் துறந்த மரஞ்சேர்மாடத்து"*

என்ற அகநானூற்றுப் பாடல் விளக்குகிறது. மேலும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு நூல்களிலும் இந்திர வழிபாடு கூறப்படுகின்றது. இரண்டிலுமே மணிமேகலா தெய்வம் பற்றிக் கூறப்படுகின்றன. சிலப்பதிகாரம், கோவலனின் முன்னோர்கடலில் விழுந்து துன்புற்றபோது அத்துன்பம் துடைத்து உதவியது அவர்களின் குலதெய்வமான மணிமேகலை தெய்வம். எனவேதான் கோவலன் தனக்குப் பிறந்த குழந்தைக்கு மணிமேகலை என்று பெயர் சூட்டினான் என்பதை அறியமுடிகிறது. அதுபோலவே மணிமேகலையில் மணிமேகலையும் தோழி சுதமதியும் அரசகுமாரனுக்கு அஞ்சி பளிக்கறையில் ஒளிந்திருந்தபோது மணிமேகலையைப் பாதுகாக்க மணிபல்லவ தீவில் கொண்டுசேர்த்து அமுதசுரபி பெற வழிவகுத்தது மணிமேகலா தெய்வம் என்ற செய்தியும் அறியமுடிகிறது.

### *பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஆன்மிகக் கூறுகள்*

#### *திரிகடுகம்*

*".... வாய்பகையுள்*
*சொல்வென்றி வேண்டும் இலிங்கியும்"*

என்ற வரிகளில், 'தான் விரும்பி துணிகின்ற தவவேடத்தான்' என்ற கருத்திலிருந்து முக்குணங்களையும் வென்ற யோகி என்ற நிலையில் ஆன்மிகக் கூறுகள் இடம்பெறுகின்றன.

ISSN : 2581-9712

*“... நல்லவர்க்கு*
*வைத்த வறப்புறங் கொன்றான்”*
என்ற வரிகளில், ‘துறவறத்தார்க்கு அமைத்த அறச்சாலையை அழித்தவன்’ என்ற கூற்றிலும்.

*“தூய்மை யுடைமை துணிவாம் தொழிலகற்றும்*
*வாய்மை யுடைமை வனப்பாகும் – தீமை*
*மனத்தினும் வாயினும் சொல்லாமை மூன்றும்*
*தவத்தில் தருக்கினார்கோள்”*
என்ற பாடலில் தவமுடையாரின் செயல்களும் கூறப்படுகிறது.

‘ஊனுண்டு உயிர்களுக்கு அருளுடையேம் என்பானும்’ என்ற பாடல் வரியில், ஒரு உயிரைக் கொன்று அதைப் புசித்துவிட்டு, அந்த உயிருக்கு அருள் கொடுத்தேன் என்று சொல்பவன், தான் அறிந்தவற்றிலிருந்து மாறாமல் அதனையே செய்துகொண்டிருப்பான் என்ற கருத்து வழியும் ஆன்மிகச் செய்திகள் கூறப்பெறுகின்றன.

மேலும், திரிகடுகத்தில் கடவுள் வாழ்த்தில் முருகன், திருமால் ஆகிய இரண்டு கடவுளரையும் ஒருசேர குறிப்பிட்டாலும், பாடல்களில் சமயக் கருத்துகள் பொதுநிலையிலேயே காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

### நான்மணிக்கடிகை

நான்மணிக்கடிகையில் கடவுள் வாழ்த்து இரண்டு பாடல்களும் திருமாலைப் பற்றியதாகும்.

*“படியை மடியகத் திட்டான் அடியினால்*
*முக்காற் கடந்தான் முழுநிலம் – அக்காலத்து*
*அப்பனித் தாங்கிய குன்றெடுத்தான் சோவின்*
*அருமை யழித்த மகன்”*
என்ற பாடலில், திருமால் மூன்று அடியில் உலகத்தை அளந்த வரலாறும், கோவர்த்தன மலையைக் குடையாக்கிய வரலாறும், உலகத்தைத் தன் வயிற்றில் வைத்த வரலாறு, பாணாசுரனது நெருப்பு மதிலை அழித்த வரலாறு ஆகிய நான்கு வரலாறுகள் கூறப்படுகிறது. அவை,

*“முனிவர் தவத்தால் தருகுவர்நோய்”* (14)
என்ற வரியில், ‘தவமுடையவர்கள் தவத்தின் பயனால் துன்பம் தருவர்’ என்ற செய்தி கூறப்பெறுகிறது.

*“முனியாதார் முன்னிய செய்யுந் திரு”* (41)
என்ற வரியில், ‘எளியாரையும் சினவாத பெரியோர்கள் எண்ணியவற்றையே முடித்து வைப்பவள் திருமகள்’ என்ற குறிப்புக் காணப்படுகின்றது.

*“மழையும் தவமிலார்இல்வழி இல்லை”*
என்ற வரியில், மழை, தவம் செய்பவர் இல்லாதவிடத்துப் பெய்யாது என்ற குறிப்பு வருகின்றது.

### ஏலாதி

*“பிணிபிறப்பு மூப்பொடு சாக்காடு துன்பம்*
*துணிவின் இரப்பிவை தாழா – அணியின்*
*அரங்கின் மேலாடுநர்போலாகா னன்றாம்*
*நிரம்புமேல் வீட்டு நெறி” (23)*
என்ற பாடலில், பிணியும், பிறப்பும், மூப்பும், சாக்காடும், இழவினால் வரும் துன்பமும் அரங்கின்கண் வந்தாடும் கூத்தரைப்போல வீட்டுநெறி ஒருவற்கு வந்து நிரம்புமாம் என்ற செய்தி கூறப்படுகிறது.

40ஆவது பாடலில் விண்ணுலக நிலைக்கும் மேல் நிலையை அடைவான் என்ற ஆன்மிகச் செய்தி கூறப்படுகிறது. பாடல் 58இல் முற்பிறப்பில் நல்லொழுக்கத்தினின்று பிறர்க்குதவி செய்பவர்களே இப்பிறப்பில் அரசர்களாய் வாழ்கின்றனர் என்ற குறிப்பு இடம்பெறுகிறது. பாடல் 63இல் கடவுள்

ISSN : 2581-9712

நெறியில் ஒழுகுவார்க்கே தவமிருந்து வீடுபேறுண்டாகும் என்ற கருத்தும், வீடுபேற்றில் பகலிரவு முதலாயின இல்லை. அவர்கள் தேவர்களோடு ஒப்பக் கருதப்படுவர் என்ற கருத்து பாடல் 66, பாடல் 76இல் ஈகையால் இப்பிறப்பின் இன்பமும், தவத்தால் விண்ணுலக நுகர்ச்சியும், மெய்யுணர்வால் வீடுபேறும் உண்டாகும் என்ற கருத்தும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

### *பழமொழி*

இந்நூலில் கூறப்படும் கடவுள் வாழ்த்துப் பாடலில் அருகதேவனின் சிறப்புகள் கூறப்படுகின்றன. பாடல் 58இல் விதி என்று எண்ணி அது கடவுள் விட்டவழி என்று வாழ்வு முழுவதும் முன்னமே வகுக்கப்பட்டுவிட்டன என்ற மூடநம்பிக்கையை விட்டுவிடு என்ற கருத்தும், பாடல் 81இல் பசுக்கூட்டங்களைக் காத்து நிற்கும் திருமாலே ஆயினும் அவையில் ஒருவனை இகழ்ந்து பேசினால், தானும் அவனால் இகழ்ந்து பேசப்படுவான். எனவே நன்னெறியில் வாழ்பவர்கள் யாரையும் இகழ்ந்து பேசமாட்டார்கள் என்ற சமயச் சிந்தனையும், 141ஆவது பாடலில் பலராமன், துரியோதனன் வரலாறும் கூறப்படுகிறது.

மேலும், வைணவ சமயக் கடவுளான திருமாலைப் பற்றி, 149ஆவது பாடலில், சூதாடக் கூடாது என்பதை விளக்க மகாபாரதத்தின் பாண்டவர் கதையையும், 80ஆவது பாடல் அந்த நாளில் திருமாலை கொல்லும் பொருட்டுச் சிலர் வளைத்துக் கொண்டனர். அப்போது திருமால் தன்னுடைய திருமேனியின் பேரொளியைக் காட்டவும் அந்த வடிவத்தின் அழகைக் கண்டு அவர்கள் தன் நினைவை கைவிட்டார்கள். எனவே, உருவப்பொலிவு ஒருவனுக்கு வெற்றியைத் தேடித்தரும் என்பதும் கூறப்பெறுகிறது.

182ஆவது பாடல் திருமாலின் சிறப்புகளையும், துறவையும் பற்றியது. 185ஆவது பாடலில், ‘மாலையுள் மாலை மயக்குறுத்தால்’ என்று கூறி ‘சால்பினைச் சால்பருக்குமாறு’ என்ற பழமொழிவழி குறிப்புகள் இடம்பெறுகிறது. 191ஆவது பாடல் கருடன்மீது ஊர்ந்தும் உலகை அளந்தவனும் திருமால் என்று திருமால் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன.

### *திணைமொழி ஐம்பது*

49ஆவது பாடலில்,

*“... மாநீர்த் திரையுட்*
*பயில்வதோர் தெய்வங்கொல் கேளீர்”*

என்ற வரியில் தெய்வம் பரந்த நீர்ப்பரப்பில் உறைவதாகக் கூறப்பட்டுள்ளது.

### *திருக்குறளில் ஆன்மிகக் கூறுகள்*

திருக்குறளில் மூன்று பால்களும் 133 அதிகாரங்களும் அவ்வப் பெயர்களுக்கு ஏற்ப அமைந்திருந்தாலும் ஒப்பீட்டாய்வு முறையில் நோக்கும்பொழுது நான்காவது கூறாகிய வீடுபேறு பற்றியக் கருத்துகளை முன்னிறுத்தியே ஏனைய மூன்று கூறுகளும் (அறம், பொருள், இன்பம்) அமைந்துள்ளன. திருவள்ளுவர் இம்மூன்று கூற்றினையும் தெளிவரக் கற்று அனுபவத்தால் உணர்ந்தால் வீடுபேறு எனும் நான்காவது கூறு கிட்டும் என்பதால் வீடுபேறு பற்றியச் சிந்தையைத் தனியாக அமைக்காமல் விடுத்தார் என எண்ண இடமுண்டு.

கடவுள் வாழ்த்தில் 10 குறட்பாக்கள் மட்டுமே இறைச் சிந்தனைகளை முன்வைக்கின்றன என்றில்லாமல், கொல்லானை எல்லா உயிரும் தொழும், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ஆகிய இது போன்ற பல குறட்பாக்களில் ஆன்மிகச்

ISSN : 2581-9712

சிந்தனைகளை ஆங்காங்குச் காட்டிச் செல்கிறார். இவ்வாறு சிந்திக்கின்ற ஒவ்வொரு குறளுக்கும் அதிகாரத் தலைப்பு அடித்தளமாக அமைகிறது. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஆன்மிகச் சிந்தனைகள் அல்லது கருத்துகள் அடித்தளமாக அமைகின்றன.

திருக்குறளில் ஆன்மிகக் கூறுகள் என்று பார்க்கின்றபோது திருக்குறளில் இடம்பெறும் பெரும்பான்மை குறட்பாக்கள் சமயத்தோடு ஒன்றியவையாகவும் மாறியமைகின்றன. அந்தளவிற்குக் குறளைப் படைத்திருக்கின்றார் வள்ளுவர். சான்றாக,

*"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு"*
*"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பதறிவு"*

போன்ற குறட்பாக்கள் அதிகாரத் தலைப்பால் வேறு கருத்தைக் குறித்தாலும், ஆன்மிகக் கூறுகளை ஒப்பிட்டுக் காணும்போது ஒரு மனிதன் இறைநிலையில், தெய்வநிலையில் எந்தப் பொருளாக இருந்தாலும் அத்தெய்வத்துள் உண்மை நிலையை காண்பதுதான் அறிவு என்ற நிலையில் பார்க்கின்றபோது பெரும்பான்மை குறட்பாக்களில் சமயநிலை தோய்ந்து மறைந்துள்ளமையை அறியலாம். இல்லறத்தான் பற்றிய சிந்தனைகளிலும்,

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்"*
*"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கு*
*நல்லாற்றின் நின்ற துணை"*

என்பன போன்ற குறட்களிலும் இறைச் சிந்தனையைக் காணமுடிகிறது. மேலும்,

*"சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்*
*இம்மையும் இன்பம் தரும்" (98)*
*"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது*
*வேண்டாமை வேண்ட வரும்" (362)*
*"கற்றூஈண்டு மெய்ப்பொருள் கண்டார்தலைப்படுவார்*
*மற்றூஈண்டு வாரா நெறி"*
*"சுவைஒளி ஊறுஓசை நாற்றம் என்றைந்தின்*
*வகைதெரிவான் கட்டே உலகு"*

போன்ற குறட்பாக்களில் முக்தி நிலை பற்றியச் செய்திகள் கூறப்படுவதையும், இவ்வாறு பெரும்பான்மை குறட்பாக்களை ஒப்பிட்டு நோக்கும்போது சமயக் கூறுகள் பொதிந்துள்ளன என்பதையும் அறியலாம்.

### இறையனார்களவியலுரை

மதுரை சோமசுந்தர பெருமானே இறையனார் என்னும் புலவராகத் தோன்றி களவு, கற்பு எனும் இரண்டு இயல்களையும் சேர்த்து 60 சூத்திரங்கள் கொண்ட அகப்பொருள் பற்றிய நூலை மூன்று செப்பேடுகளில் எழுதி தாம் வீற்றிருந்த பீடத்தினடியில் வைத்துச் சென்றார். இந்நூலுக்கு 49 புலவர்கள் உரை எழுதினர். அவை உப்பூரிகிழார் மகனான உருத்திர சன்மர் என்னும் ஊமைப்பிள்ளையின் முன் அரங்கேற்றப்பட்டது. அவற்றுள் நக்கீரர் உரையே சிறந்ததென தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் கூறுவர். முச்சங்கம் பற்றிய குறிப்புகள் இவ்வுரையில் முழுமையாகக் காணமுடிகின்றது.

இறையனாரால் இயற்றப்பட்ட இந்நூல் களவு, ஒழுக்கம் பற்றிய செய்திகளை விரிவாகக் கூறுவதால் இறையனார் களவியலுரை எனப்பட்டது. இதுவே தமிழில் தோன்றிய முதல் உரைநடை நூலாகும். இவ்வுரை 10

ISSN : 2581-9712

தலைமுறை வரை ஏட்டில் எழுதப்படாது. செவிவழியாகவே கேட்கப்பட்டு வந்தது என்பர். இவ்வுரையின் காலம் கி.பி. 8ஆம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது.

*முத்தொள்ளாயிரமும் ஆன்மிகக் கூறுகளும்*

மூவேந்தர்களைப் பற்றியச் சிறப்புகளை எடுத்தியம்பும் நூல் முத்தொள்ளாயிரம் ஆகும். சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வீரம், புகழ், கொடை ஆகியவை தமிழர்களின் பண்பாட்டை உணர்த்துவதாக அமைகின்றது. இந்நூலில் ஆன்மிகக் கூறுகளும் ஆங்காங்கே மறைந்து கிடக்கின்றன. சிவன், திருமால், முருகன், இந்திரன் பிற நாட்டுப்புறத் தெய்வங்கள் பற்றியச் செய்திகள் வேந்தர்களின் சிறப்புகளைக் கூறுவதற்கு வலிமைச் சேர்க்கவும், பழமையானப் பண்பாட்டுக் கூறுகளில் சமயக்கூறுகளையும் இயைபுப்படுத்ததாகவும் இக்கருத்துகள் அமைகின்றன.

இந்நூலின் தலைப்பினைக் கொண்டு ஒவ்வொரு வேந்தர்களுக்கும் 900 பாடல்கள் வீதம் 2700 பாடல்கள் என்றும், 300 பாடல்கள் வீதம் 900 பாடல்கள் என்றும் இருவேறு கருத்துகள் கூறப்படுகின்றன. ஆயினும் இன்று நமக்குக் கிடைத்திருப்பன 110 பாடல்களே ஆகும். அப்பாடல்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கக்கூடும் என்பது அறிஞர்கள் கூற்றாகும். இருப்பினும் சிலர் இடைக்காலத்தில் தோன்றியது என்றும் கூறுவர். எனினும் கற்பனை, வளமும் கருத்துச் செறிவும் மிக்க பாடல்களின் தொகுப்பாக இது அமைகின்றது. இப்போது கிடைத்திருப்பதில் சேரர் பற்றி 21 பாடல்களும், சோழர்கள் பற்றி 21 பாடல்களும், பாண்டியர்கள் பற்றி 59 பாடல்களும் அமைந்துள்ளன. இவற்றில் ஆன்மிகக் கூறுகள் பல பாடல்களில் கூறப்படுகின்றன.

சான்றாக,

*“இந்திரன் என்னின் இரண்டேகண் ஏறூர்ந்த*
*அந்தரத்தான் என்னிற் பிறையில்லை அந்தரத்துக்*
*கோழியான் என்னின் முகன்ஒன்றே கோதையை*
*ஆழியான் என்றுணரப் பாற்று”*

என்ற பாடலில், தெருவில் பவனிவரும் சேரமன்னனைக் கண்ட பெண் ஒருத்தி இவன் மண்ணாளும் மன்னனோ அல்லது விண்ணாளும் இறைவனோ என்று ஐயப்படுகின்றாள். அப்போது, இவன் இந்திரனாக இருப்பானோ. அப்படியாயின் ஆயிரம் கண்கள் இருக்கவேண்டும். இவனுக்கு இரண்டு கண்கள் தான் இருக்கின்றன. இவன் சிவபெருமானாக இருப்பானோ. தலையில் பிறையில்லை. அதனால் சிவன் கிடையாது. அழகே வடிவான முருகனாக இருப்பானோ. முருகனுக்கு ஆறுமுகம் உண்டு. இவனுக்கு ஒருமுகம்தான் இருக்கிறது. அதனால் முருகன் கிடையாது. இவன் மண்ணுலக மைந்தன்தான் என்று குறிப்பிடுகின்றாள். இதில் ஆயிரம் கண் என்றவிடத்து இந்திரனுக்கு இட்ட சாபத்தின்வழியும், பிறை பற்றிக் குறிப்பிடும்போது சிவன் பற்றிய புராணமும், முருகன் என்றவிடத்து ஆறுமுகத்துக்கானப் பழங்கதையும் குறிப்பால் கூறப்படுகின்றன.

மேலும், பாண்டியனின் சிறப்புகளைக் கூறுமிடத்துத் தேர்வீரனாகிய அர்ச்சுனன், சிவந்த கண்களையுடைய திருமாலின் முடியில் தூவிய மலர்கள், வெள்ளைநிற எருதை வாகனமாகக் கொண்ட சிவபெருமானின் பாதங்களில்

ISSN : 2581-9712

காணப்பட்டன என்பதைக்கூறி, அதுபோல முடியுடை மன்னர்களாகிய பல சிற்றரசர்கள் தலையில் சூடிய பூக்கள் பாண்டிய மன்னனாகிய மாறனின் பாதங்களில் காணப்பட்டன என்பதை குறிப்பிடுகிறது. அதாவது திறை செலுத்த வந்த மன்னர்கள் மாறனின் பாதங்களில் தலை தாழ்த்தி வணங்கினமையால் அவர்கள் தலையில் அணிந்திருந்த மலர்கள் உதிர்ந்து மாறனின் காலடியில் காணப்பட்டன என்பதை குறிக்கிறது. இதில் திருமால், சிவன் ஆகிய தெய்வங்களைக் குறிப்பிடும் வகையில் ஆன்மிகச் செய்திகள் காணப்படுகின்றன. இதனை,

*"செங்கண் நெடியான்மேல் தேர்விசையன் ஏற்றியப்பூப்*
*பைங்கண்வள் ளேற்றான்தாள் கண்டற்றால் எங்கும்*
*முடிமன்னர்சூடியபூ மெய்ம்மலர்த்தார் மாறன்*
*அடிமிசையே காணப் படும்"*

என்ற பாடலால் அறியலாம்.

### *தற்கால வளர்ச்சி*

ஆன்மிகக் கூறுகள் சங்க இலக்கியங்களிலும், சங்க மருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்களிலும், இரட்டைக் காப்பியங்களிலும் ஆங்காங்கே பயின்று வருகின்றன. பதிற்றுப்பத்தில் இடம்பெறும் அந்தாதி நடையிலமைந்த ஐந்து பாடல்களும் பின்னர் தோன்றிய அந்தாதி என்ற சிற்றிலக்கிய வகைக்குத் தோற்றுவாயாக அமைந்தது எனலாம். இருப்பினும் சைவசமயக் கூறுகளை கி.பி. 5ஆம் நூற்றாண்டிலேயே தம் பாடல்களிலும் வாழ்க்கையிலும் பின்பற்றிய காரைக்கால் அம்மையார் அருளிய அருட்பாடல்களில் அற்புதத் திருவந்தாதி அந்தாதி இலக்கியங்களுக்கு முன்னோடி என்பார் கூற்று நினையத்தக்கது. ஆகையால் பக்தி இலக்கியக் காலத்தைக் குறிப்பிட்டு மூத்த அடியாராக விளங்கும் காரைக்கால் அம்மையார் திருமூலர் ஆகியோர் இலக்கியங்கள் சைவசமயச் சார்புடையது என்பதால் காலத்தால் முன்தோன்றினாலும் பொதுமையான இலக்கியக் கொள்கைகளையும் நெறிகளையும் கொண்ட இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்கள் என்று முன்வைத்த அறிஞர் பெருமக்கள் செவ்வியல் கூறுகள் நிறைந்த பக்தி இலக்கியங்களாகிய காரைக்கால் அம்மையார் பிரபந்தங்களையும் திருமூலரின் திருமந்திரத்தையும் சைவசமயச் சார்புடைத்தாதலின் நீக்கியிருக்கலாம்.

இக்கருத்து இங்குப் பதியப்பட காரணம், செவ்வியல் இலக்கியங்களில் ஆன்மிகக் கூறுகள் விரவிக் கிடப்பினும் அச்சமயக்கூறுகள் மற்றும் அவ்விலக்கிய வகையில் தாக்கத்தால் பின்னர் பல்வேறு இலக்கியங்கள் சிற்றிலக்கியங்களாகத் தோன்றத் தொடங்கின. இவ்வாறு பல்வேறு வகைப்பட்ட சிற்றிலக்கியங்கள் தோன்றினாலும் பெரும்பான்மை ஆன்மிகம் சார்ந்த இலக்கியங்களாகவே காணப்படுகின்றன. இதற்குச் சங்க இலக்கியத்தில் அமைந்த ஆன்மிகக் கூறுகளும், செய்யுள் அமைப்புகளும் காரணமாக அமைகின்றன. மேலும், 96 வகை சிற்றிலக்கியங்களில் கலம்பக இலக்கியத்தில் நந்திக் கலம்பகம் முற்பட்டதாயினும் பின்னர் ஆன்மிகக் கூறுகளை மையமாகக் கொண்ட சைவ, வைணவ இலக்கியங்களும் அதற்குப் பின்னர் கிருத்துவ, இஸ்லாமிய இலக்கியங்களும் தோன்றலாயின.

இதுபோலவே பிள்ளைத்தமிழ், தூது நூல்கள், அந்தாதி நூல்கள், பரணி நூல்கள், பள்ளு நூல்கள், உலா நூல்கள் போன்ற அனைத்து வகை சிற்றிலக்கிய

ISSN : 2581-9712

வகைகளிலும் ஆன்மிகக் கூறுகளே அதிகம் பேசப்பட்டுள்ளன. இவ்வாறு ஆன்மிகக் கருத்துகளை போதிக்கும் இலக்கியங்களின் பெயர்களும் அமைக்கப்பட்டுள்ளன என்பதை உணரலாம். பிற்காலத்தில் தோன்றிய அதாவது, இக்கால இலக்கியங்களிலும் ஆன்மிகக் கூறுகள் எளிமையாகக் கூறப்படுகின்றன. கவிதை, கட்டுரை, உரைநடை, சிறுகதை, நாவல் போன்ற தற்கால இலக்கியங்களிலும் ஆன்மிகக் கூறுகள் நிறைந்து காணப்படுகின்றன. ஆகையால் தற்காலத்தில் இலக்கியங்களில் காணப்படும் ஆன்மிகக் கூறுகளுக்கு மூலமாக அமைவது செவ்வியல் இலக்கியங்களும் அவ்வக்காலத்திலேயே தோன்றிய காரைக்கால் அம்மையார், திருமூலர் போன்றவர்களின் ஆன்மிக இலக்கியங்களும் காரணமாக அமைகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

*******************************

ISSN : 2581-9712



# தமிழ் அகப்பொருள் மரபு

**முனைவர் செ.சங்கீதா**
உதவிப் பேராசிரியர், செந்தமிழ் கல்லூரி.

*முன்னுரை*

அகப்பொருளாவது ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம்முள் துய்க்கும் இன்பத்தைப் பற்றி கூறுவதாகும். அது புறத்தார்க்குக் கூற இயலாததாய் அகத்தாலயே உணர்ந்து அனுபவிக்கக் கூடியது ஆதலின் அகம் எனப்பட்டது. அகப்பொருள் நில அடிப்படையில் ஐந்து வகையாகப் பகுக்கப்படும். அவற்றிற்குத் திணைகள் என்று பெயர் (திணை – ஒழுக்கம்). அத்தகைய திணைகளாவன குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல் திணை, பாலைத்திணை என்பனவாம். இவற்றுள் கைக்கிளை, பெருந்திணை என்பவற்றையும் சேர்த்து திணைகள் ஏழு என்று கூறுவது உண்டு. இதனை,

*"கைக்கிளை முதலா பெருந்திணை இறுவாய்*
*முற்படக் கிளந்த எழுதிணை என்ப"*

என்றுரைப்பார் தொல்காப்பியர். கைக்கிளை என்பது ஒரு தலைக் காமம் என்றும். பெருந்திணை என்பது பொருந்தாக்காமம் என்றும் நம்பி அகப்பொருள் நூற்பாக்கள் சுட்டிக்காட்டும்.

*முதல், கரு, உரி பற்றிய செய்திகள்*

ஒவ்வொரு திணைக்கும் உரிய நிலம், பொழுது பற்றிக் கூறுவதை முதற்பொருளாகவும், அந்நிலங்களுக்கு உரிய தெய்வம், உணவு, மக்கள், விலங்கு, மரம், பறவை, பறை, பண், யாழ், ஊர், நீர், பூ, தொழில் என்பனவைக் கூறுவது கருப்பொருளாகும். ஒத்த அன்பினால் திளைத்த தலைமக்கள் இருவரும் தம்முள் கூடலும், பிரிதலும், கூடிப்பிரிந்து இருத்தலும், கூடுமிடத்து ஊடலும், பிரிந்த இடத்து இரங்கலும் ஆகிய அக ஒழுக்கத்தை உரிப்பொருளாகவும் கொள்வது மரபு. இதனையே தொல்காப்பியர் பின்வருமாறு கூறுவார்.

*"முதல்எனப் படுவது நிலம்பொழுது திரண்டின்*
*இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"3*

என்றும்,

*"தெய்வம் உணவே மாமரம் புட்பறை*
*செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ*
*அவ்வகை பிறவும் கருவென மொழிப"4*

என்றும்,

*"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்*
*ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை*
*தேருங்காலைத் திணைக்குரிப் பொருளே"5*

என்றும் சுட்டப் பெற்றுள்ளது.

மேலும் ஒவ்வொரு திணைக்கும் உரிய முதல், கரு, உரி என விரிவாகப் பின்னிணைப்பு பட்டியலில் காணலாம்.

### அகத்திணையின் சிறப்பு

தமிழ்மொழியில் உள்ள பிற இலக்கிய மரபுகளை விட அகத்திணை மரபே சிறப்பானது. ஏனெனில் அகம் பற்றிய செய்திகள் யாவும் நமது அன்றாட வாழ்க்கையில் காணும் நிகழ்வுகளும், உள்ளுணர்வுகளும் பற்றியதாக இருப்பதால் அனைவரையும் சென்றடையக் கூடிய இலக்கிய உத்தியாகக் கருதப்படுகிறது. தொல்காப்பியம் முதற்கொண்டு அனைத்து அக இலக்கண நூல்களும் கூறும் அக இலக்கண மரபானது வாழ்க்கைக்கான இலக்கணமாக அல்லாமல் இலக்கியத்திற்கான இலக்கணமாகவே காட்டப்படுகின்றது என்பது தெளிவு. அகத்திணையில் சிறப்பினையும் இன்றியமையாமையையும் புலப்படுத்தவே தொல்காப்பியர் பொருள் இலக்கணம் கண்டார் எனலாம். எனவே தான் அவர் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற நான்கு இயல்களாக வகுத்து அகத்திணை நெறியினைத் தெளிவுபடுத்தியுள்ளார். மேலும் அவரே புறத்திணை பற்றிக் கூறும்போது ஒரே இயலில் முடித்து இதன் சிறப்பினைப் புலப்படுத்துகிறார் என்றும் கொள்ளலாம்.

“ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழரின் சிறப்பை அறிவுறுத்த விரும்பிய சங்கப்புலவராகிய கபிலர் பெருமான் அவனுக்கேற்ற குறிஞ்சிப்பாட்டு என்ற அகத்திணைப் பாவினை யாத்தனரேயன்றிப் புறப்பாடொன்றை யாத்தனர் அல்லர்”6 என்று எடுத்துக் காட்டுவார் ந.சுப்புரெட்டியார்.

தமிழ் என்ற சொல்லே அகத்திணையைக் குறிப்பதாகச் சில குறிப்புகளும் உண்டு. கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டின் துறைக்குறிப்பில் “எந்நூதலிற்றோ வெனின் தமிழ் நூதலிற்று”7 என்ற இறையனார் களவியலுரை ஆசிரியரின் குறிப்பும், “ஒண்தீரு தமிழின் துறை வாய் நுழைந்தனையோ” என்ற திருக்கோவையார் பாடலடியும் தமிழ் என்பதற்கு அகத்திணை என்று ஆகுபெயராய் வருவதையும் காணலாம்.

“ஒரு மொழியின் பெயர் அம்மொழியின்கண் தோன்றியுள்ள பல்வகை இலக்கியங்களுள் ஒருவகை இலக்கியத்திற்கு மட்டும் சிறப்பாய் ஆளப்பொறுமாயின் அவ்விலக்கிய வகை அம்மொழியிலன்றிப் பிற எம்மொழியிலும் காணப்பெறுவதில்லை என்பது திண்ணம், எனவே தமிழ்மொழியின் சிறப்பும் தமிழ் இலக்கிய வகைகளுள் அகத்திணையின் முதற்சிறப்பும் விளங்கும்”9 என்று ந.சுப்புரொட்டியார் கூறுவது மிகவும் பொருத்தமுடையது.

### இலக்கண நூல்களில் அகம் பற்றிய செய்திகள்

பொருள் இலக்கணம் பற்றிக் கூறும் சுழல்களுள் அகப்பொருள் பற்றிக் கூறும் நூல்களே மிகுதி. அவை இறையனார் அகப்பொருள் தமிழ்நெறி விளக்கம், நம்பி அகப்பொருள், களவியல், காரிகை, மாறன் அகப்பொருள் என்ற ஐந்து நூல்களாம். இவை நீங்களான தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்ற நூல்கள் ஐவகை இலக்கணங்களைக் கூறுவனவாக இருந்து அவற்றுள்ளும் தனிப்பட்ட ஒரு பகுதி அல்லது ஒரு இயலில் மட்டும் அகப்பொருள் பற்றிக் கூறக் காண்கிறோம். இனி அகப்பொருள் மட்டும் பேசுகின்ற இலக்கண நூல்களைப் பற்றிப் பார்க்கும் முன் தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் நூலும் இலக்கண நூல்களுக்கெல்லாம் முன்னோடியுமான

தொல்காப்பியத்தைப் பற்றி முதலில் கீழ்க்கண்டவாறு காணலாம்.

### *தொல்காப்பியம்*

ஐவகை இலக்கணம் பற்றி விளக்கினாலும் அகத்திணை பற்றித் தான் அதிகமான கருத்துகளைத் தருகின்றது. முன்பே கூறியது போல் இதனுள் உள்ள இயல்களில் பெரும்பாலும் அகத்திணைக்கே ஒதுக்கப்பட்டுள்ளது போல் தோன்றுகிறது. காரணம், அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற நான்கு இயல்களிலும் பொருளதிகாரம் அகத்திணை பற்றிப் பேசுவதோடு மெய்ப்பாட்டியல், உவமையியல் ஆகியவற்றில் அக, புறப் பொருள்களுக்குப் பொதுவான இலக்கணம் கூறப்பட்டிருந்தாலும் அவற்றினுள்ளும் அகப்பொருள் பற்றிய செய்திகளே சிறப்பாக இடம்பெறக் காணலாம். மேலும் செய்யுளியலிலும் பொருள் இலக்கணம் தொடர்பாக உள்ள திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், மெய்ப்பாடு, முன்னம், எச்சம், பயன், பொருள், துறை ஆகிய பன்னிரண்டும் சிறப்பாக அகப்பொருள் பற்றியே விளக்குகின்றன. இனி அகப்பொருள் பற்றி மட்டும் பேசப்படும் இலக்கண நூல்களைப் பற்றி பின்வருமாறு காணலாம்.

### *இறையனார் களவியல்*

அகப்பொருள் இலக்கண நூலாக இன்று கிடைக்கப் பெறுவனவற்றுள் தொன்மையானது. இதில் 60 நூற்பாக்கள் பயின்று வந்துள்ளன. இதனுள் களவு, கற்பு ஆகிய இருபிரிவுகளாக அகப்பொருள் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. ஏனைய அகப்பொருள் நூல்கள் போல் அகப்பொருள் இலக்கணத்தின் பொது இலக்கணம் கூறப்படவில்லை. தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோள்காட்டியே முதல், கரு, உரிப்பொருள்கள் இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன.

### *தமிழ் நெறி விளக்கம்*

இந்நூல் 25 நூற்பாக்களையே கொண்டுள்ளது. இந்த 25 நூற்பாக்குள்ளும் அகப்பொருள் இலக்கணம் முழுமையும் கூறுவதாய் உள்ளது. இயல் பகுப்பு ஏதுமின்றிக் களவு என்பது சுருக்கமாக விளக்கப்பட்டிருக்கின்றது. அதுவும் முதல், கரு, உரிப்பொருள்கள் என்ற செய்திகள் மட்டும் கூறப்பட்டுள்ளன. கைக்கிளை, பெருந்திணை பற்றிய செய்திகளோ, பிற அகப்பொருள் செய்திகளோ ஏதுமின்றி இந்நூல் இலங்குகின்றது.

### *நம்பி அகப்பொருள்*

நாற்கவிராச நம்பியால் இயற்றப்பட்ட இந்நூல் இன்று கிடைக்கின்ற அகப்பொருள் பற்றி விளக்கம் மிக விரிவான நூல். இந்நூல்,

1. அகத்திணையியல்
2. களவியல்
3. வரைவியல்
4. கற்பியல்
5. ஒழிபியல்

என ஐந்து இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 52 நூற்பாக்கள் இதனுள் உள்ளன. இதற்கு ஐந்நூலாசிரியரே உரையும் இயற்றியுள்ளார். இந்த அகப்பொருள் நூலுக்கு இலக்கியமாகத் தஞ்சைவாணன் கோவை என்ற நூல் இயற்றப்பட்டது என்பர். இறையனார் களவியலில் உள்ளது போலத் திணை, துறை முதலியவற்றை விளக்கும் பகுதி இந்நூலிலும் உள்ளது. மேலும் களவியலைக் கால வரிசைப்படி அமைத்துக் கோவை

எனும் பிரபந்தத்துக்கு இலக்கணம் கூறுவது போல் அமைந்துள்ளது.

*களவியல் காரிகை*

இந்நூலாசிரியர் பற்றிய விவரம் ஏதும் தெரியவில்லை. “காரிகை யாப்பினால் அமைந்துள்ளது. இந்நூலின் பெயரைக் கூட அறிய முடியாதபடி சிதைந்திருந்தது என்றும், இந்த ஏடுகளை இயன்றவரை சரி செய்து பதிப்பித்துள்ளார் வையாபுரிப்பிள்ளை என்றும் கூறப்படுகின்றது”10. இதில் களவு, கற்பு என்ற இரண்டு கைகோள் பற்றிய செய்திகள் உள்ளன. அவற்றிற்குக் களவொழுக்கம், கற்பொழுக்கம் என்று பெயரிடப்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்ற அளவில் இயற்கைப் புணர்ச்சி, பகற்குறி, வரைதல் வேட்கை, உடன்போக்கு, வலித்தல் மற்றும் பாங்கன் தோழியால் நிகழும் கூட்டம் பற்றிய செய்திகள் இதனுள் இடம் பெற்றுள்ளன.

*மாறன் அகப்பொருள்*

அகப்பொருளினை அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என ஐந்து பகுதிகளாகப் பகுத்துக் கூறுகிறது. நம்பி அகப்பொருளின் வைப்பு முறையை ஒத்துக் காணப்படுகிறது. மேலும் கைக்கிளையையும் பெருந்திணையையும் அகத்திணையாகவே கொள்கிறது.

*முடிவுரை*

அகப்பொருள் பற்றிய கருத்துகளையே ஒவ்வோர் இலக்கண நூலும் கூறும் போதும், சிற்சில மாற்றங்கள் இடம் பெறுகின்றன. சிலவற்றுள் அனைத்துக் கருத்துகளும் வைப்புமுறை மாறி அமைகின்றன எனத் தெரிகிறது. இது அந்தந்தக் காலகட்டத்தின் சூழலையும் ஆசிரியர்களின் பிரதிபலிப்பையுமே காட்டுகின்றன எனக்கொள்ளலாம்.

*அடிக்குறிப்புகள்*

1. புலியூர்க்கேசிகன்(உ.ஆ), தொல். பொருள். அகம். நூற்.1.
2. நாராயண வேலுப்பிள்ளை (உ.ஆ), நம்பி. நூற்.35.
3. புலியூர்க்கேசிகன்(உ.ஆ), மு. நூ., நூற்.4.
4. மேலது., நூற்.20.
5. மேலது., நூற்.16.
6. செ.ஜீவன் லாரன்ஸ், கு.பகவதி. (ப.ஆ), தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், ப.260.
7. இறை.கள.முதல்.நூற்பா., உரை., ப.14.
8. திருக்கோவையார், பாங்கர் கூட்டம், ப.3.
9. செ.ஜீவன் லாரன்ஸ், கு.பகவதி.(ப.ஆ), மு.நூ,ப.260.
10. இரா.சீனிவாசன், தமிழ் இலக்கண மரபுகள், ப.135.

*******************************

ISSN : 2581-9712



# தொகையிலக்கியத்தில் பெண்ணின் தமர் – மணவினைக்குமுன்னும் பின்னும்

ச. கண்மணி கணேசன் (ப.நி.),
முன்னாள் முதல்வர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்,
ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரி, சிவகாசி.

*முன்னுரை*

பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் 'பெண்ணின் சுற்றம்' எனக் கருதக்கூடிய உறவு அவளது திருமணத்திற்கு முன்னும் பின்னும் எவ்வாறு அமைந்தது என ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். பெண்ணியக் கோணத்தில் அமையும் பகுப்பாய்வு முறைக்கு, எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் 'தமர்' என்னும் உறவுமுறைச் சொல் இடம்பெறும் பாடப்பகுதிகள் முதனிலைத் தரவுகளாக அமையப் பிற பாடற்சான்றுகள் இரண்டாம்நிலை தரவுகள் ஆகின்றன.

*மணமாகுமுன் பெண்ணின் தமர்*

பெண் மணம் செய்யுமுன் உடன்பிறப்புகள், கிளைஞர், முதியோர் ஆகிய சுற்றத்துடன் பெற்றோரிடம் வளர்ந்தாள். திருமணத்தின் போது பெற்றோர் மகளைக் கைபிடித்துக் கொடுத்தனர். கூட்டுக் குடும்பத்தார் அனைவரும் சேர்ந்து மணத்தை உறுதி செய்தனர். மங்கல நிகழ்வுகளில் கிளையல்லா உறவினர், ஊர்ப்பெண்டிர் அனைவரும் பெண்ணின் தமராக இருந்தனர்.

*தமர் – பெற்றோர்*

நடக்கவிருக்கும் திருமணம் பற்றிய எதிர்பார்ப்புடன் பேசும் தலைவன், காதலியின் பெற்றோரை 'நுமர்' என்று சுட்டி, மகளின் கையைப் பிடித்துத் தன்னிடம் தருவதை,

***"நேரிறை முன்கை பற்றி நுமர்தர"*** (குறி.231)

இல்லறம் தொடங்கலாம் என்று கூறியதைக் காண்கிறோம்.

முதலிரவு பற்றி சிந்திக்கும் தலைவன், தலைவியின் பெற்றோர் அவளது கையைத் தன் கையில் கொடுத்ததை,

**"தமர் நமக்கு ஈந்த தலைநாள் இரவின்"** (அகம்.136)

எனத் தன் நெஞ்சிற்குச் சொல்வதும் காண்க.

**தமர் – உடன்பிறப்புகள்**

பெற்றோரும் உடன்பிறப்புகளும் 'பிறந்த தமர்' என, பரி.19இல் விதந்து குறிப்பிடப்படுகின்றனர்.

*தமர் – கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள்*

***"தாயுடை நெடுநகர் தமர் பாராட்ட"*** (அகம்.310)

அமைந்த வளர்ப்பு அவளிடத்தில் மடமையை மிகுவித்துள்ளது எனத் தலைவனிடம் தலைவியின் போக்கிற்கு விளக்கம் அளிக்கிறாள் தோழி. அவளை வளர்த்தவர் குடும்பத்தார் அனைவரும் ஆவர் எனச் சொல்வது கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையைப் புலனாக்குகிறது. எனவே, திருமணத்திற்கு முந்தைய பெண்ணின் தமர்

ISSN : 2581-9712

கூட்டுக்குடும்பத்துக் கிளைஞர், முதியோரையும் குறிக்கிறது.

*“ஆர்வுற்று எமர் கொடை நேர்ந்தார்”* (கலி.104)

என்று சுற்றத்தார் மகட்கொடைக்கு ஒப்புக்கொண்டதைச் சொல்லும் போது, ஒரு பெண்ணுக்கு மணவுறுதி செய்வதில் பெற்றோர்க்கு மட்டுமின்றிக் கூட்டுக்குடும்பத்தில் வாழ்ந்த பங்காளிகள் அனைவர்க்கும் சிறப்பிடம் இருந்தமை தெளிவாகிறது.

ஒரு பெண்ணை மணக்க விரும்பி ஆடவன் மடலேறத் துணிந்தால், பெண்ணின் சுற்றத்தார் பதறி அவனுக்கே அவளை மணம் செய்து கொடுத்தனர். போர்வல்ல பாண்டியனுக்கு அவனது பகைவர் எவ்வாறு திறை செலுத்துவார்களோ அதுபோல விரைந்தனர்.

*“பொருந்தாதார் போர்வல் வழுதிக்கு அருந்திறை*
*போலக் கொடுத்தார் தமர்”* (கலி.141)

என்று அச்சத்தையும் அவசரத்தையும் உவமை மூலம் காட்டும் இப்பாடற்பகுதி உணர்த்தும் தமர் கூட்டுக் குடும்பக் கிளைஞர் ஆவர்.

ஆயர் குலப்பெண் மோர் விற்றுக்கொண்டு வருகிறாள். அவளது தலையில் தமர் கட்டிச் சூட்டிய கண்ணி அழகூட்டுவதை அவள் மேல் மையல் கொண்ட தலைவன் காண்கிறான்.

*“தமர் தந்து ஒருபுறம் தைஇய”* (கலி.109)

அக்கண்ணியைச் சுமக்க மாட்டாதவள் போல மோர்க் குடத்தைச் சுமந்து ஒயிலாக வருவதைக் கண்டு பெண்கள் மருண்டனர். அவை,

*“எழுநின் கிளையொடும் போகென்று”* (மேற்.)

விரைந்து அனுப்பிவிட்டனர். ஆய்ச்சி தன் கிளையோடு சேர்ந்து சென்றால் தமது கணவர் அவளைப் பின்தொடர மாட்டார் என்பது குறிப்புப்பொருள். இங்கே ‘தமர்’ அவளது கிளையுடன் கூடிய குடும்பத்தைச் சுட்டுவது காண்க.

தோழி, தந்தை மட்டுமின்றி அவனது பங்காளிகளாகிய கிளைக்கும் அவலநிலை ஏற்படாதபடி தலைவன் மணம்புரிய ஒத்துக்கொண்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்தி ஆறுதல் அடைகிறாள்.

*“கிளை உடை மாந்தர்க்குப் புணையுமாம் இவ்வென”* (குறு.247)

இளிவரலினின்று மீளத் தலைவன் ஒருப்பட்டுப் பெண்கேட்கச் சம்மதித்ததால் நன்மை விளைந்ததை உரைக்கிறாள். இதனால் பெண்ணின் தமர் அவளது தந்தையின் கிளைகளாகிய பங்காளிகளையும் குறிக்கும் என்பது உறுதி.

### *தமர் – கிளையல்லா உறவினர்*

திருமண ஏற்பாடு நடந்து கொண்டு இருக்கும் போது மகள் உடன்போக, செவிலி தவிக்கிறாள். கூந்தலை ஒப்பனை செய்யச் சொன்ன தன்னைப் புலந்த மகளின் உட்கிடக்கை புரியாத அவலத்தைக் காரியம் கைமீறிய பிறகு எண்ணி வருந்துகிறாள்.

*“தமர் மணன் அயரவும் ஒல்லாள்”* (அகம்.369)

எனத் திருமண ஏற்பாடு நடந்தவுடன், அவள் மனம் ஒருப்படாமல் விரும்பியவனோடு சென்றுவிட்டமை குறித்து நோகிறாள். சுற்றத்தார் செல்வ மனையைப் புதுப்பித்து மணவிழா நடந்தேற ஆயத்தம் செய்தனர் என்பதால், திருமணத்திற்கு முதலிலேயே வந்துசேரும் சொந்தபந்தம் அனைவரும் ஒருசேரத் தலைவியின் தமர் ஆகின்றனர்.

ISSN : 2581-9712

**தமர் – மங்கலப் பெண்டிர்**

மங்கல நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் தகுதிபெற்றோர், பிள்ளைப்பேற்றால் வயிற்றில் சுருக்கக் குறிகளைப்(stretch marks) பெற்ற சுமங்கலிப் பெண்கள் மட்டுமே ஆவர். அவருள் தாய், கிளைஞருள்ளும் கிளையல்லாத சொந்தத்திலும் உள்ள பெண்டிர், உற்றாரான ஊர்ப்பெண்டிர் அனைவரும் அடங்குவர். திருமண நிகழ்வின் போது அவர்கள் ஒருங்கு சேர்ந்து வாழ்த்தியமை,

*"பேரில் கிழத்தி ஆகெனத் தமர்தர"* (அகம்.86)

என்ற தலைவன் பேச்சில் இடம்பெறக் காண்கிறோம். 'மக்களைப் பெற்ற மகராசிகள்' என்ற இக்கால வழக்கை ஒட்டி, மகப்பெற்ற வாழ்வரசிகள் அனைவரும் தலைவியின் சுற்றம் ஆகின்றனர்.

**உடன்போக்கின் போது பெண்ணின் தமர்**

தாய்வீட்டார், கிளை, கிளையல்லா உறவினர், ஊரார், இளையர் அனைவரும் களவுமணம் புரிந்தவளின் சுற்றமாவர்.

காதலியை உடனழைத்துக் கொண்டு காட்டுவழி செல்பவன் அவளை ஓய்வெடுக்கச் சொல்லும் போது,

*"அமர் வரின் அஞ்சேன் பெயர்குவென்*
*நுமர்வரின் மறைகுவென் மாஅயோளே"* (நற்.362)

என்று தன் அச்சத்தைக் கூறினான். தலைவியைத் தேடிவரும் அவளது சுற்றத்தாரை எண்ணி நடுங்குவது வெளிப்படை. தான் விரும்பி அழைத்துச் செல்லும் பெண்ணின் தமராகும் பெருங்கூட்டம் அவனுக்கு அறைகூவலாக அமைந்தது. இக்கருத்து இன்னொரு பாடல் மூலமும் உறுதி ஆகிறது.

பிரிவுணர்த்தித் தலைவன் செல்ல நினைத்த காடு தலைவி கண்முன்னர்த் தோன்றி மயக்கத்தைத் தருகிறது. அவள் மறுக்கிறாள். ஏனெனில் அவள் தலைவனோடு அதே காட்டுவழியில் வந்து தான் இல்லறத்தைத் தொடங்கினாள். அப்போது ஆறலைப்போரைத் தனியாக எதிர்கொண்டான். அவனது வீரம் அப்போது வெளிப்பட்டது. ஆனால் அவளது தமர் வந்த போது ஒளிந்து கொண்டான்.

*"அமரிடை உறுதர நீக்கி நீர்*
*எமர் இடை உறுதர ஒளித்த காடே"* (நற்.48)

என்ற மறுப்பில், தலைவியின் தமர் ஒரு பெருங்கூட்டம் என்பது புரிகிறது.

**மணமான பெண்ணின் தமர்**

தாய்வீட்டாரும் புகுந்தவீட்டாரும் மணமான பெண்ணின் சுற்றம் ஆயினர். புறத்தொழுக்கத்தை நீட்டிக்கும் தலைவனை இல்லத்திற்கு மீட்டுவர எண்ணும் தோழியிடம் தலைவி "அது தேவையற்றது; என் துன்பம் எமர்க்குத் தெரியக்கூடாது; அது போதும்" என்கிறாள்.

*"நோய்மலி வருத்தம் காணன்மார் எமரே"* (நற்.64)

எனும் போது 'எமர்' என்று அவள் சுட்டுவது தாய் வீட்டாரையும் புகுந்த வீட்டாரையும் சேர்த்தே குறிக்கிறது.

மணமுடித்த பின்னரும் தாய்வீட்டாரோடு பெண்ணுக்கு இருந்த பந்தம் அவர்களை ஒரே சுற்றம் ஆக்கியது. தலைவனின் ஊர் பற்றிய வருணனைத் தாங்கி நிற்கும் உள்ளுறையும் இதை உணர்த்துகிறது. பறவைக் கூட்டம் மரக்கொம்பில் இருந்து கொண்டு, விளையாடும் மகளிர் தம்மை அலைத்தமை பற்றி அவர்களது சுற்றத்திற்குக் கூறுவன போல் பலமுறை ஒலியெழுப்பிய ஊரை உடையவன் தலைவன். விளையாட்டு ஆயம் தலைவியின் திருமணத்திற்கு முந்தைய

ISSN : 2581-9712

நெருங்கிய சுற்றம் ஆகும். அந்த விளையாட்டு ஆயம் பற்றிய புகார் தலைவியின் பெற்றோரிடமே பேசப்படும். அதனால் தலைவியின் தாய் வீட்டாரே இங்குக் குறிக்கப்பெறும் தமர் ஆவர். தலைவனின் புறத்தொழுக்கம் பற்றிய பாடலில்,

*“தமர்க்கு உரைப்பனபோல் பல் குரல் பயிற்றும்” (கலி.75)*

பறவைகளின் ஆரவாரம்; அன்றாடம் ஒரு பெண்ணைத் தேடும் தலைவனின் பரத்தமை பற்றிய அலர்; தலைவியின் பிறந்த வீட்டார் காதுகளைச் சேர்வதைத் தவிர்க்க இயலாது என்பதாம். தலைவியின் தந்தையும் தமையரும் தலைவன் புறத்தொழுக்கத்தை அறிந்தால் அது அவனுக்குச் சிக்கலாகும் என்ற போக்கில் அமையும் பிற பாடல்களும் உள (நற்.127).

மகள் குடும்பம் வறுமை உற்றால் தந்தை தாங்க முனைவதும்,

*“கொண்ட தலைவன் குடிவறன் உற்றெனக் கொடுத்த தந்தை கொழுஞ்சோறு” (நற்.110)*

பற்றிய செய்தியில் உள்ளது.

**முடிவுரை**

திருமணத்திற்கு முன் உடன்பிறப்புகள், கிளைஞர், குடும்பத்து முதியோர் ஆகிய சுற்றத்துடன் பெண் பெற்றோரிடம் வளர்ந்தாள். திருமணத்தின் போது பெற்றோர் மகளைக் கைபிடித்துக் கொடுத்தனர். கூட்டுக்குடும்பத்தார் அனைவரும் சேர்ந்து மணத்தை உறுதி செய்தனர். மங்கல நிகழ்வுகளில் தாய் வீட்டுப் பெண்களோடு கிளையல்லா உறவுப்பெண்டிர், ஊர்ப்பெண்டிர் அனைவரும் பெண்ணின் தமராக இருந்தனர். தாய்வீட்டினர், பிற உறவினர், ஊரார், இளையர் அனைவரும் களவுமணம் புரிந்தவளின் சுற்றமாயினர். தாய் வீட்டாரும் புகுந்த வீட்டாரும் மணமான பெண்ணின் சுற்றம் ஆயினர். ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ்ச் சமூகத்தில் பெண்ணின் சுற்றம் மாற்றம் பெறவில்லை.

**துணைநூற்பட்டியல்**

1. அகநானூறு களிற்றியானை நிரை, (2009). சென்னை: கழக வெளியீடு.

2. அகநானூறு நித்திலக்கோவை, (2008). சென்னை: கழக வெளியீடு.

3. அகநானூறு மணிமிடைபவளம், (2007). சென்னை: கழக வெளியீடு.

4. கலித்தொகை, (2007). சென்னை: கழக வெளியீடு.

5. குறுந்தொகை, (2007). சென்னை: கழக வெளியீடு.

6. நற்றிணை, (2007). சென்னை: கழக வெளியீடு.

7. பத்துப்பாட்டு தொகுதி II, (2008). சென்னை: கழக வெளியீடு.

8. பரிபாடல், (2007). சென்னை: கழக வெளியீடு.

********************************************

ISSN : 2581-9712



# நிலம் சார்ந்த தொழிலும் வேளாண் அறிவியலும்

**முனைவர் ம. மணிமேகலை**
தமிழ்ப் பேராசிரியர், சமூக அறிவியல் துறை,
அன்பில்தர்மலிங்கம்வேளாண்மைக்கல்லூரிமற்றும்ஆராய்ச்சிநிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

நில வளம், நீர் வளம் இவற்றை அடிப்படையாகக் கொண்டே மக்களின் வாழ்க்கைச் சூழல் முறையாக நெறிப்படுத்தப்பட்டது என்பதை சங்க காலமே உறுதி செய்கின்றது. மண், நீர் இவை இரண்டுமே உயிர் வாழ்க்கையின் அடிப்படை சான்றாக விளங்கின.

*"உணவெனப்படுவது நிலத்தொடு நீரே*
*நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு*
*உடம்பும் உயிரும் படைத்திசினோரே"*
*(புறம்:18:21–23)*

எனும் புறநானூற்றுப் பாடல், இத்தகைய 'உண்டி கொடுத்தோனே உயிர் கொடுத்தவனாவான்' என விளக்கம் தருகின்றது. இத்தகைய உயிர் சான்றாய் விளங்கும் மண்ணையும் நீரையும் அடிப்படையாகக் கொண்டே தொல்காப்பியர் நிலப்பரப்புகளை நான்காகப் பாகுபடுத்தினார். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனும் இந்த நால்வகை நிலத்தினுடைய மண் வாகு, நீர்ப்பாசன வசதிகள் ஆகியவற்றைக் கொண்டே அந்நிலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைச் சூழலும், உணவுப் பழக்க வழக்கங்களும் தொழில்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைக்கப்பட்டிருந்தன எனில் மிகையில்லை. நிலம் நீர் இவற்றைக் கொண்டே தொழில் தீர்மானிக்கப்பட்டது. இவற்றைக் கொண்டே மக்களின் உணவுப்பழக்கங்கள், உடைகள், உறைவிடங்கள் தீர்மானிக்கப்பட்டன. சான்றாக, அந்த நிலத்தில் மிக இயல்பாய்க் கிடைக்கக் கூடிய மரங்களாலும், இலைகளாலும் ஓலைகளாலும் அமைக்கப்பட்ட வீடுகளே வசிப்பிடங்களாயின. இவை நிலத்திற்கு நிலம் மாறுபட்டது. மக்களின் தொழிலை அடிப்படையாகக் கொண்டே அவர்களின் வாழ்க்கைச் சூழலும் அன்றாடத் தேவைகளும் நிர்மாணிக்கப்பட்டன. ஆதலால், நிலத்திற்கு நிலம் மக்களின் உணவுப் பழக்கங்களும் தேவைகளும் மாறுபாடு கொண்டு இயங்கின. இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையே இதற்குக் காரணமாகும். இவை குறித்தே இக்கட்டுரை மிக விரிவாகக் கருத்துகளை முன் வைக்கின்றது.

## தொழிலும் சமூக அமைப்பும்

நிலவளம் நீர் வளம் சார்ந்தே ஒவ்வொரு நிலத்திலும் தொழில்கள் மேற்கொள்ளப்பட்டன. தொழிலைச் சார்ந்தே மக்களின் இனக்குழுவும், சமூக அமைப்புகளும் தோற்றம் பெற்றன. முல்லை நிலத்தில் ஆநிரை வளர்த்தல், பால் தயிர் மோர் வெண்ணெய் விற்றலும், குறிஞ்சி நிலத்தில் தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல், வேட்டையாடுதலும், மருத நிலத்தில் வேளாண்மை செய்தலும், நெய்தல் நிலத்தில்

ISSN : 2581-9712

மீன் பிடித்தலும் முதன்மைத் தொழில்களாக விளங்கின. இத்தொழில்களை அடிப்படையாகக் கொண்டே மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளும் வகுக்கப்பட்டிருந்தன. மருத நிலம் தவிர்த்து மற்ற நிலப்பரப்புகளில் முறையே ஆநிரை வளர்த்தல், தேனெடுத்தல், மீன்பிடித்தல் போன்றவை தொழிலாக இருப்பினும் நான்கு நிலங்களிலுமே வேளாண்மைத் தொழில் மிகச் சிறப்பாக நடைபெற்றிருந்தது என்பது பதிவு செய்ய வேண்டியது தேவையாகும். ஏனெனில் இன்றைய காலக்கட்டத்தில் எத்தனையோ விதமான தொழில்நுட்ப அணுகுமுறைகளும் வளர்ச்சி நிலைகளும் மாற்றமும், ஏற்றமும் கொண்டிருந்தாலும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பான நம் மூதாதையரின் வேளாண்மைத் தொழில்நுட்பங்களே இன்றைய நம்முடைய வேளாண் வளர்ச்சிகளுக்கு அடிப்படை சான்றாக விளங்குகின்றன என்பதில் மாற்றமில்லை. மண்ணின் தன்மை, நீர்ப்பாசன வசதிகளை அடிப்படையாகக் கொண்டு நன்செய்ப் பயிர்களும், புன்செய்ப் பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டன. இன்றைய வேளாண் விஞ்ஞானிகள் அறிவுறுத்துவது போன்று மண்ணுக்கேற்றப் பயிரினங்களை, பருவகாலங்களை முதன்மையாகக் கொண்டு பயிர் செய்து பயனடைந்தனர். மண்ணும் நீருமே மக்களின் உயிர் சான்று என்னும் புறநானூறு கூற்று இதன் மூலம் நிருபிக்கப்படுகின்றது.

### நிலங்களுக்கேற்றப் பயிரினங்கள்

நீர்ப்பாசன வசதிகள் இல்லாத வறண்ட நிலப்பரப்பு புன்செய்ப்பயிர் விளைவதற்கு மட்டுமே ஏற்றதாக உள்ளது. என்றோ பெய்த மழைநீரை சேமித்து வைக்கும் செயற்கையான முறையில் உருவாக்கப்பட்ட நீர்நிலைகள் மற்றும் மழை பெய்யும் காலத்தில் தேக்கிவைக்கப்பட்ட தற்காலிக நீர்த்தேக்கங்களிலிருந்து பெறப்படுகின்ற மழைநீர், இவையும் தவிர்த்து குறிஞ்சி நிலப்பரப்புகளில் காணப்படும் அருவி மற்றும் சுனைநீர் ஆகியவற்றைக் கொண்டு புன்செய்ப் பயிர்கள் பயிர் செய்யப்படுகின்றன. பருவம்தோறும் தவறாமல் மழைபெய்யும் பகுதிகள் மற்றும் மழைக்காலங்களின்போது சேமித்து வைக்கப்படுகின்ற நீர்நிலைகள், நீர்த்தேக்கங்களிலிருந்து பெறப்படுகின்ற நீராதாரங்களை அடிப்படையாகக் கொண்டு நன்செய்ப் பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. வன்புலம், புன்புலப் பகுதிகளில் புன்செய்ப் பயிர்களும், மென்புலத்தில் நன்செய்ப்பயிர்களும் விளைவிக்கப்படுகின்றன.

### முல்லை நிலமும் தொழில் வளமும்

காடும் காடு சார்ந்த முல்லை நிலத்தில் ஆநிரை வளர்த்தல், மேய்த்தலே முதன்மைத் தொழிலாயிற்று. குறிஞ்சி நிலத்தில் காணப்படுவது போன்ற செறிந்த மரங்களடர்ந்த காட்டுப்பகுதியாக இல்லாமல் புல்வெளிகளும் "இளங்காடு" என்று குறிப்பிடத்தக்க வகையிலான மரங்களும் கொண்ட நிலப்பரப்பாகும். ஆதலால் கால்நடை வளர்ப்பே முல்லை நிலத்தில் பேணப்பட்டு வந்தது. ஆயன் எனும் ஆண்மகன் கால்நடைகளை மேய்த்தலும் காட்டு விலங்குகள் போன்றவற்றினின்றும் அண்டை நாட்டுப் பகைவர்களிடமிருந்தும் கால்நடைகளைக் காப்பதும் அவர்தம் தொழிலாயிற்று. ஆய்ச்சியர் எனும் பெண்மகள் வைகறையில் எழுந்து பால் கறந்து, தயிரைக் கடைந்து, வெண்ணெய் எடுத்துப் பின்பு மோர்ப் பானையைத் தலையில் சுமந்து சென்று அருகிலுள்ள மற்றைய குறிஞ்சி, மருதம், நெய்தல்

நிலங்களுக்குச் சென்று விற்றலே தொழிலாயிற்று.

### குறிஞ்சி நிலமும் தொழில் வளமும்

கானவர், வேட்டுவர், குறவர் என்றழைக்கப்படும் குறிஞ்சி நில மக்களின் முதன்மைத் தொழில் வேட்டையாடுதல், கிழங்கு அகழ்தல், தேன் எடுத்தல், தினை பயிரிடுதல் ஆகியவையாகும். கானவர், மூங்கிலால் செய்யப்பெற்ற கணுக்களில் கால்வைத்து ஏறிச்செல்லும்படியாக அமைக்கப்பட்டுள்ள கண்ணேணியினை மலையடியில் சார்த்திவைத்து மலையுச்சியினின்றும் தேனிறாலைப் (தேனடை) பெறுவர் என மலைபடுகடாம் (315–317) உரைக்கின்றது. கானவர், பொருள்களை எடுத்துச் செல்ல, காவடி சுமந்து வருவர். செய்யப்பட்ட காவடியின் காவு மரத்தின் இரு முனைகளிலும் உள்ள உளிகளில் கடகங்களைக் கட்டி வைத்திருப்பர். அவற்றில் பன்றி மற்றும் பல்வகை இறைச்சிகளையும், மலைத்தேனீயும், கிழங்குகளையும் முடிந்து வைத்திருப்பர்.

### வேளாண்மைத் தொழிலும் புன்செய்ப் பயிர்களும்

முல்லைநிலம், செம்மண் வாகுடைய (Red soil) நிலப்பரப்பாகும். இம்மண்ணில் புன்செய்ப் பயிர்களே நல்ல விளைச்சலைத் தருமாகையால் வரகும் தினையும் அதிகளவில் பயிர் செய்யப்பட்டன. வேளாண் மக்களது வீட்டு முற்றத்தில் வரகினை நிறைத்துக் கொண்ட குதிர்கள் பெண்யானையைப் போன்று நின்று கொண்டிருக்கும்.

குன்றைச் சூழ்ந்த சிறுசிறு கற்களும் மண்ணும் கலந்த செம்புறை மண் (Caterite soil) என்னும் மண் வாகினைக் கொண்ட மலைப்பகுதியே குறிஞ்சி நிலம் ஆகும். ‘‘குன்றுதலை மணந்த புன்பல வைப்பும்’’ என பதிற்றுப்பத்தானது, சான்று பகர்கின்றது. மலைசார்ந்த கொல்லைப்புறப் பகுதியை புனம் என்று அகநானூறு உள்ளிட்ட பல இலக்கியங்கள் கூறுகின்றன. மரங்கள் அழிக்கப்பட்டுப் புதிய விளைநிலங்கள் உருவாக்கப்படுகின்ற புதிய பகுதி ‘இதை’ என வழங்கப்பெறுவதாக அகநானூறும் மதுரைக்காஞ்சியும் விளக்கம் தருகின்றன. நீர்ப்பாசன வசதியில்லாத நிலையில் அருவியினின்று ஓடிவரக் கூடிய நீரினையே பாசனத்திற்காகப் பயன்படுத்தினர். அகில், சந்தன மரங்களை வெட்டிய நிலத்தில் உழுது, நீர் பாய்ச்சிப் பதப்படுத்தி விளைநிலம் தயாரிப்பர்.

*“நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய*
*குறுங்கதிர்த் தோரை நெடுங்கால் ஐயவி*
*ஐவன வெண்ணெ லொடு அரில் கொள்பு நீடி*
*இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்*
*பல்வேறு தாரமொடு கல்லகத்து ஈண்டி”*
*(மதுரைக்காஞ்சி 286–25)*

இத்தகைய திருத்திய மேட்டு நிலத்தில் விதைத்த சிறிய கதிர்களைக் கொண்ட தோரை நெல், வெண் சிறு கடுகு, ஐவன நெல், வெண்ணெல், இஞ்சி, மஞ்சள், மிளகு ஆகியவற்றைப் பயிரிடுவர். கிளிகடி கருவிகளாகிய தழல், தட்டை, குளிர், கவண் ஆகிய கருவிகளைக் கொண்டு கிளி முதலிய பறவைகளை விரட்டுவர். கணவருக்குத் துணையாக மகளிரும் வேளாண் தொழிலில் உதவி செய்தனர். இளம் பெண்கள் தினைப்புனக் காவலில் ஈடுபட்டனர் (குறிஞ்.43). தினைப்புனத்தைப் பன்றிகள் அழிக்குமாதலால் பன்றி வரும் வழிகளில் கற்பொறிகளைப் பொருத்தி அதனை விரட்டுவர். தினையை அழிக்கவரும் யானைகளைப் பலவாறாக அச்சுறுத்தி, சப்தமிட்டு, குழிகள்

தோண்டியும் விரட்டியடிப்பர் என குறிஞ்சிப்பாட்டு சான்று தருகின்றது.

முல்லை நிலத்தையும், குறிஞ்சி நிலத்தையும் சங்க இலக்கியங்கள் வன்புலமென்றும், மழைபெய்யா வறண்ட நிலப்பரப்புகளைக் கொண்ட பகுதி புன்புலமென்றும் அழைக்கப்படுகின்றன. புன்புலப்பகுதிகளில் புன்செய்ப் பயிர்கள் மட்டுமே விளைவிக்கப்படுகின்றன. வன்புலத்தில் வனப்பகுதிகளில் நெல் விளைவதில்லை வரகும் தினையுமே விளைகின்றன என்பதனை,

*"புல்லெனடை முதல் சேர்ந்திருந்த*
*புன்புலச் சீறூர் நெல் விளையாதே*
*வரகும் தினையும் உள்ளவை யெல்லாம்"*
*(புற.328:1–3)*

முல்லை நிலத்தின் மண் தன்மைக்கேற்றவாறாக புன்செய்ப் பயிர்களே விளைவிக்கப்படுகின்றன. நெற்பயிர் தகுந்த மகசூலை தராததினால் நெல் விளைவிப்பதனைத் தவிர்த்தனர். வேடர்கள் மரங்களை எரித்ததினால் கரிந்த புனத்தை உழவர்கள் நன்கு உழுது பண்படுத்திய அகன்ற இடமாகிய கொல்லையில், ஐவன நெல்லுடன் விதைத்த தினைப்பயிரானது அதீத வெப்பத்தினால் வாடி, கதிரை ஈனாமல் நிற்கின்றது.

*"கரிபுனம் மயக்கிய அகன்கண் கொல்லை*
*ஐவனம் வித்தி மையுறக் கவினி*
*ஈனல் செல்லா ஏனற்கு இழுமென"*
*(புற.159:16–18)*

எனப் புறநானூறு கூறுகின்றது. இதன்மூலம், புன்புலத்தில் ஐவன நெல், வரகு, தினை ஆகிய புன்செய்ப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன என அறியப்படுகின்றது.

**மருதம் நிலமும் தொழில் வளமும்**

வயலும் வயல் சார்ந்த வற்றாத நீர்வளப்பகுதியே மருதமாகும். உழவுத்தொழிலே முதன்மைத் தொழிலாகும். இத்தொழிலைக் கொண்டே மக்கள் வாழ்வியல் நெறி பின்னப்பட்டிருந்தன. மருதநில மக்களின் முதன்மையான உணவு செந்நெல்லும் வெண்ணெல்லும் ஆகும். மருத நிலப்பகுதியை 'வயல்' என்றும் 'கழனி' என்றும் 'பழனம்' என்றும் சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன. வண்டல் மண் (Alluvial soil), மருத நிலத்தில் ஆற்றுப்படுகைகளில் மிகுதியாக அமைந்திருக்கும். "காடு கொன்று நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கி" எனும் பட்டினப்பாலை அடிகளுக்கேற்ப மரங்களை அழித்துத் திருத்திப் பலமுறை உழுது, விளைநிலங்கள் உருவாக்கப்படுகின்றன. குளம் வெட்டி வயல்களுக்கு நீர்ப்பாய்ச்ச, குடிக்க, குளிக்க எனத் தம் தேவைகளுக்காகவும் நீர்வளம் பெருக்கினர். வயல்களை உழுதல், விதைத்தல், நாறு வளர்த்தல், நடுதல், களையெடுத்தல், எருயிடுதல், நீர் பாய்ச்சுதல், அறுவடை செய்தல், போரடித்தல், களஞ்சியம் நிறைத்தல் என வேளாண்மையையே தங்கள் உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கினர்.

ஆழ உழுதல் குறித்து பெரும்பாணாற்றுப்படை மிக அழகாக எடுத்துரைக்கின்றது. உழவர்கள், நன்கு உழக்கூடிய எருதுகளை நுகத்தில் பூட்டி, கலப்பையிலுள்ள கொழு முழுவதும் நன்றாக மண்ணில் அழுந்தும்படியாகச் செய்து, பலசால் உழுது போடுவர். இதனை,

*"நடைநவில் பெரும்பகடு புதவில் பூட்டி*
*பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்*
*உடுப்புமுக முழுக்கொழு மூழ்க ஊன்றி"*
*(பெரும்.பா: 198–200)*

உழவர்கள், நன்கு நடை பயின்ற பெரிய எருதுகளை, நுகத்திற் பூட்டி, பெண் யானையின் வாயையொத்த வளைந்த வாயையுடைய கலப்பையை, உடும்பு முகம் போன்ற முழுகொழு சேற்றில் நன்கு மூழ்கும்படியாக அழுத்தி உழுதனர். இவ்வடிகளிலிருந்து உழவுத்தொழிலில் கால்நடைகள் பெரும்பங்கு பெற்றிருந்தன என்பது அறிய முடிகின்றது. பெருமழை பெய்தவுடன் விடியற்காலையில் ஏரைப்பூட்டி வயலுக்குச் சென்று மண்ணின் ஈரம் உலரும் முன்பாக ஆழமாகவும், அகலமாகவும் மேல்மண் கீழாக, கீழ்மண் மேலாகப் புரளும்படியாகப் பலமுறை உழுது போடுவர். இவ்வாறாக உழவு செய்யப்பட்ட செம்மண் நிலமானது, புண்ணைக் கிழித்தது போன்ற தோற்றத்துடன் திகழ்ந்ததாகப் புறநானூறு இயம்புகிறது. விளைநிலம், பழனம், கழனி, வயல், செறு, செய் என அழைக்கப்படுகின்றது.

## நெய்தல் நிலமும் தொழில்வளமும்

மணற்பாங்கான மண்(Sandy soil), நெய்தல் நிலத்திற்குரியது. மணல் மேடுகள் நிறைந்ததும் மணல் கலந்து மண்வாகுடைய நிலப்பகுதியாகவும் காணப்படுகின்றது. மழை பெய்கின்ற காலங்களில் நெல் விளைவித்தலையும் மழை பெய்யாக் காலங்களில் உப்பு விளைவித்தலையும் நெய்தல் நில மக்கள் தொழிலாகக் கொண்டிருந்தனர். நெய்தல் நிலப்பகுதிகளில் இளமணல் காணப்படும். அலை மோதுகின்ற கடற்கரைப்பகுதி அடைகரை என்பதனை நற்றிணை வழி அறியலாம். உப்பினை விளைவிக்கும் உப்புநீர் 'கழி' என்று அழைக்கப்படும் என்பதை, 'இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு', எனும் மதுரைக் காஞ்சி அடியிலிருந்து அறியலாம்.

## வேளாண்மைத் தொழிலும் நன்செய்ப் பயிர்களும்

வயலும் வயல் சார்ந்த பகுதியாகிய மருதமும், கடலும் கடல் சார்ந்த பகுதியாகிய நெய்தலும் மென்புலம் என்று அழைக்கப்படுகின்றன. நிலவளமும் நீர்வளமும் நிறைவாகப் பெற்றுள்ள மென்புலப் பரப்பில் நன்செய்ப் பயிர்களே விளைகின்றன. நெல், கரும்பு,மஞ்சள், இஞ்சி, வாழை விளைவதனையும் பட்டினப்பாலை விளக்குகின்றது. விளைவு அற்றுப்போகாத வியக்கவைக்கும் கழனி என்றதிலிருந்து மருத நிலத்தின் வளமையை நாமறியலாம்.

*"விளைவு அறா வியன் கழனி*
*-------------------------*
*கூகாள் தெங்கின் குலை வாழைக்*
*காய்க் கமுகின் கமழ் மஞ்சள்*
*இனமாவின் இணர்ப் பெண்ணை*
*முதற்சேம்பின் முளை இஞ்சி" (பட்.பா:16–19)*

## கரும்பு மகசூலும் அறுவடையும்

கரும்பின் தேவை கருதியும் பயன்பாடு கருதியும் கரும்புப்பயிர் அதிகளவில் பயிர் செய்யப்பட்டதோடு கரும்பு சாகுபடிக்கென்று தனிப்பட்ட காலம் கிடையாது; கரும்பின் அதிக விளைச்சலைக் கரும்பரியும் அறுவாள் முனை மழுங்கிய நிலையிலிருந்து உணரலாம். "காலமன்றியும் கரும்பறுத்து ஒழியாது அரிகால் அவித்துப் பலவிழவில்", எனும் பதிற்றுப்பத்து (30:14–16) அடியிலிருந்து பெறப்படுகிறது. முப்பொழுதும், எப்பொழுதும் கரும்புப்பயிர் சாகுபடி நடந்துகொண்டே இருந்தது என்பதை 'காலமன்றியும்' எனும் சீர் உணர்த்துகின்றது.

தரிசுநிலங்களை நன்கு உழுதபின்னர் பயறு, கொள், உளுந்து போன்ற பயறு இனங்களைப்

பயிரிடுவதினால், அவற்றின் வேர் முடிச்சுகள் நைட்ரஜன் சத்தைச் சேமித்து அதிக அளவு தழைச்சத்தினைப் பெறுவதினால் மண்ணின் வளம் மேம்படுகிறது என அறிவியலார் கூறுவர். 'பைம்பயறு உதிர்த்த கோதின்' எனும் புறநானூற்றின் அடியிலிருந்து உளுந்தும் பயறும் பயிரிடப்பட்ட செய்தி அறியப்படுகிறது. இயற்கை உரங்களின் பயன்பாடே சுற்றுச் சூழலுக்குக் கேடு விளைவிக்காது எனும் அறிவியல் சார்ந்த சிந்தனை வியப்பினை அளிக்கின்றது.

## முடிபு

மண்ணின் தன்மை, நீர்வளம், காலச்சூழல் ஆகியவையே மக்களின் வாழ்வியலையும் தொழிலையும் பண்பாட்டினையும் தீர்மானிப்பவையாக அமைந்தன. இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைப் பேணினர். சூழலுக்குத் தகுந்த தொழிலை மேற்கொண்டாலும் நான்கு நிலத்திலுமே வேளாண்மை சிறப்புற நடைப்பெற்றதென அறியலாம்.

## மேற்பார்வை நூல்கள்

1. பத்துப்பாட்டு ஆராய்ச்சி, டாக்டர் இராசமாணிக்கனார்.
2. தமிழரின் நீர் மேலாண்மை, முனைவர் மணிமாறன்.
3. சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், பெ.மாதையன்.
4. இலக்கியத்தில் வேளாண்மை, டாக்டர். இல.செ.கந்தசாமி.
5. பண்டைப் பாசனப் பொறியியல், கொடுமுடி டாக்டர் ச. சண்முகன்.

*******************************

ISSN : 2581-9712



# புலம் பெயர்ந்த தமிழர்களின் இறைநெறி சார்ந்த வாழ்வியல்

**அ. அழகுராஜா**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை—21.

## முன்னுரை

உலக நாடுகளில் ஏறத்தாழ 140க்கும் மேலான நாடுகளில் தமிழ்மொழி பேசுகின்ற புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். புலம் பெயர்ந்த தமிழர்களின் வாழ்வியல் சூழல், இயற்கைச் சீற்றங்கள், கல்வி சார்ந்த இடப்பெயர்வு இவற்றின் காரணங்களாக 15ஆம் நூற்றாண்டு முதல் பிற மண்ணிற்குத் தோட்டக் கூலிகளாகச் சென்ற தமிழர்கள் அங்கேயே தங்கித் தங்களது வழித்தோன்றலினைப் பெருக்கி வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்களது ஆதி பூமியாகிய தமிழ் நிலப் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், வழிபாட்டு முறையையும் பின்பற்றித் தாங்கள் இருக்கும் இடங்களில் இறைவழிபாடு செய்தலோடு மட்டுமின்றிப் பிற சமயத்தாரையும், பிற கலாச்சாரப் பழக்கவழக்கமுடையவர்களையும் பின்பற்றுவதற்குக் காரணமாக விளங்கி வருகின்றனர்.

மனிதன் தங்கள் குடும்பத்திற்காகவும், சமுதாயத்திற்காகவும் பொருளாதாரத்திற்கான தீர்வினை ஈடுசெய்ய முற்பட்டதன் விளைவாகத் தாங்கள் பிறந்து வளர்ந்த ஊரை விட்டும், நாட்டை விட்டும் விலகிப் பல மைல்களுக்கு அப்பால் பொருளாதாரம் மட்டுமின்றி ஆழிப்பேரலை, நிலச்சரிவு போன்றவற்றின் காரணமாகவும், சில அரசியல் சூழ்ச்சியின் காரணமாகவும் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து பல்வேறு நாடுகளுக்கு இரும்பு தொழிற்சாலை, கரும்பு ஆலைகள் போன்ற தொழில் சார்ந்த இடங்களுக்குப் பணியாட்களாகச் சென்று அந்நாட்டிலேயே தங்கித் தங்களின் வாழ்க்கையினைத் தொடர்ந்து வருகின்றனர்.

15ஆம் நூற்றாண்டில் டச்சுக்காரர்களின் ஆட்சியிலும், 18ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு நாட்டின் அதிகாரத்திலும் மொரீஷியஸ் தீவு இருக்கையில் தமிழ்நாட்டில் மட்டுமின்றி உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் மக்கள் கப்பலின் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும் 19ஆம் நூற்றாண்டில் புலம் பெயர்ந்து வாழ்ந்து வந்த தமிழர்கள் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களே அவ்வாறு சென்றவர்கள் தமது மண்ணின் கலாச்சாரம் மற்றும் பண்பாடு சார்ந்த நிலையில் தாங்கள் இருக்கும் இடத்திலேயே தங்களின் தாய்வழிச் சமூகம் மற்றும் பண்பாட்டினை மறவாத வண்ணம் கோவில்கள் அமைத்து வழிபட்டும் வருகின்றனர். புலம் பெயர்ந்து சென்ற தமிழ் மக்களின் வாழ்வியல் பண்பாட்டின் வாயிலாக இறைநெறியினை வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

ISSN : 2581-9712

### புலம் பெயர்ந்த மக்களின் வாழ்வியல்

"நாடு இருந்தும் நாடற்றவர்களாய் நானிலமெங்கும் அலைகிறார்கள். திரைகடல் ஓடித் திரவியம் தேடவல்ல தமிழர், திரைகடலிலும் உடலையும் உயிரையும் இணைத்து வைக்கத் துடியாய்த் துடிக்கிறார்கள்"1 என காண முடிகிறது.

பல காரணங்களால் புலம் பெயர்ந்து சென்ற மக்கள் அகதிகளாகவே வாழ்கின்றனர். அந்நாட்டின் குடியுரிமை பெற்றிருந்தாலும் அவர்களின் மனதில் சிறிது கலக்கமும் வருத்தமும் இருந்து கொண்டுதான் இருக்கின்றது. (அயல் மண்) புலம் பெயர்ந்து சென்ற மக்கள் தங்களின் தாய் நாட்டிற்குத் திரும்பி வராமல் அங்கேயே தங்கி வழித்தோன்றலினரோடும், பிற கலாச்சாரத்தோடும் கலந்து நிரந்தரமாக வாழ்ந்தும் வருகின்றனர். அவ்வாறு வாழும் நிலையை அறிய முடிகின்றது. இவ்வுலகை ஆட்சி செய்பவன் கடவுள் எனும் நம்பிக்கை மக்களிடம் காணப்படுகின்றது. சங்கக் காலம் தொட்டே தமிழர்கள் எங்குச் சென்றாலும் தமிழ்க் கடவுளான முருகப் பெருமானை வழிபடுதலோடு மட்டுமின்றி அக்கடவுள் சார்ந்த விழாக்கள் எடுத்துக் கொண்டாடியும் வருகின்றனர். இத்திருவிழாக்கள் தமிழர்களின் வாழ்வில் இரண்டறக்கலந்த ஒன்றாகும்.

### தமிழ்நாட்டில் முருக வழிபாடு

தமிழ் நாட்டில் உள்ள இந்து சமயக் கடவுள்களில் முருகனுக்குச் சிறப்பான இடமும் உண்டு சிவபெருமான் நெற்றிக்கண் திறக்க அதிலிருந்து வந்த நெருப்பின் மூலம் பிறந்ததாக ஓர் கதையும் உண்டு எனலாம். தமிழ் மக்கள் மட்டுமின்றிக் கேரளா, ஆந்திரா போன்ற பிற மாநிலத்தவரும் தமிழ் கடவுளான முருகனை வழிபட்டு வருகின்றனர். வழிபடுதலோடு மட்டுமின்றி நேர்த்தி கடன் செலுத்தியும் வருகின்றனர்.

*"ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே*
*ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே*
*கூறுமடி யார்கள்வினைத் தீர்க்குமுக மொன்றே*
*குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே*
*மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே*
*வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே*
*ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்*
*ஆதியரு ணாச்சல மமர்ந்த பெருமானே" 2*

முருகப் பெருமானின் ஆறு முகங்களையும் எடுத்துரைப்பதாக இப்பாடல் வரிகள் அமைந்துள்ளது. தமிழ் நாட்டில் ஆறு குன்றுகளையும் வீடாகக் கொண்டமையால் அறுபடை வீடுடையான் என வழங்கலாயிற்று.

### அறுபடை வீடு

- முதல் வீடாக மதுரையில் மாவட்டத்தில் உள்ள திருப்பரங்குன்றத்தில் சூரபத்மனைப் போரில் வென்ற பின் இந்திரன் மகள் தெய்வானையே திருமணம் செய்த தலம் அமைந்துள்ளது.
- அசுரன் முருகன் போரிட்டு வென்று வெற்றி வாகைச் சூடிய திருத்தலமான தூத்துக்குடி மாவட்டம் திருச்சீரலைவாய் என்று அழைக்கப்பட்ட திருச்செந்தூர் முருகனின் இரண்டாவது வீடாகும்.
- மாங்கனிக்காக அண்ணன் விநாயகரோடு போட்டியிட்டுத் தோற்ற பின்பு தண்டாயுதபாணியாக நின்ற இடம் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள திருவாவினன்குடி என்று

அழைக்கப்பட்ட இன்றைய பழனி மூன்றாவது வீடாகும்.

- அப்பன் சிவனுக்கே பாடம் சொல்லித்தந்த இடம் தஞ்சாவூர் மாவட்டம் திருவேரகம் என்று அழைத்து வந்த சுவாமிமலை நான்காவது வீடாகும்.
- சூரனை வதம் செய்த பின்பு சினம் தணிந்து, குறவர் மகள் வள்ளியை மணந்த தலமான திருவள்ளுவர் மாவட்டம் குன்றுதோராடல் என்ற திருத்தணி முருகப் பெருமானின் ஐந்தாவது வீடாகும்.
- வள்ளி தெய்வானையோடு ஔவைக்கு அருள்தரும் இடமாக அறுபடை வீடுகளில் ஆறாவது வீடாக மதுரை மாவட்டம் அழகர் கோவிலுக்கு அருகாமையில் பழமுதிர்ச்சோலையில் அமைந்துள்ளது.

சங்க இலக்கியம் கூறும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணைகளில் ஒன்றான குறிஞ்சி நிலத்தின் கடவுளாகத் திகழ்பவர் முருகப் பெருமான்.

*"மலையும் மலை சார்ந்த பகுதி"* 3

மலையையும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் வழிபாட்டு கடவுளாக முருகப் பெருமான் திகழ்கின்றான். தங்களைக் காக்கும் கடவுளாக மலையை ஒட்டியுள்ள மக்கள் முருகனை வழிபட்டு வருகின்றனர்.

*"சேயோன் மேய மைவரை உலகம்"* 4

முருகப் பெருமானின் அறுபடை (ஆறுபடை) வீடுகளும் குன்றுகளின் மீது அமைந்துள்ளமையால் குன்றுகளில் வாழ்பவன் முருகன் என்று கூறுவர்.

தமிழ் நாட்டில் முருகனைக் கைகூப்பி வணங்குதல் மட்டுமின்றி, அவரது அரோகரா எனும் நாமத்தையும் கூறிக்கொண்டே செல்வர்கள் கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் மாலைப் போட்டுக் கொண்டு விரதமிருந்து முப்பொழுதும் முருகனையே எண்ணி விடியற்காலை எழுந்து நீராடி முருகனை வழிபட்டு வருதல் மட்டுமின்றி முருகனைக் காணச்செல்லும் போது தங்களது வீட்டிலிருந்து பாதயாத்திரையாகவும் மக்கள் சென்று வழிபட்டு வருகின்றனர். தைப்பூசம் அன்று முருகனைத் தரிசிக்கப் பல்லாயிரக்கணக்கானோர் முருகனின் இறையறையை வந்தடைவார்கள்.

**காவடி**

பால், தேன், இளநீர் நிரப்பிய குடங்களைத் தோள்களின் இரு புறங்களிலும் தொங்கும் படியாக நீளமாகத் தடியின் முனைகளில் கட்டி சுமந்து சென்று காவடி எடுக்கும் வழக்கம் நிலவுகிறது. பூக்கள் வெட்டிவேர், பட்டுத்துணி, மயிலிறகு போன்றவற்றினால் காவடிகளுக்கு அழகு சேர்க்கப்படுகிறது. அக்காலம் தொட்டே முருகப் பெருமானின் மீது மக்கள் கொண்டிருந்த பக்திச் சிறப்பினை அறியமுடிகிறது.

**காவடியின் வகைகள்**

பால்காவடி, பன்னீர்க்காவடி, மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பறவைக்காவடி, தூக்குக் காவடி எனப்படும். தமிழ்நாட்டில் முருகன் மீது தீராப் பக்தி கொண்ட பக்தர்கள் தங்களின் உடம்பின் பின்பகுதியான முதுகில் இரண்டு, நான்கு இடங்களில் வளைந்த இரும்பு கம்பியினைக் கோர்த்துச் சிறிய தேர் ஒன்றில் முருகனின் உருவச் சிலையினையும், நாக்கில்

ISSN : 2581-9712

வேலினையும் அலகு குத்திக் கொண்டு தங்களின் நேர்த்திக் கடனைச் செலுத்தியும் வருகின்றனர். தமிழ் நாட்டில் மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் தமிழ் மக்கள் முருகனை வழிபடுகின்றனர்.

## மொரிஷியஸில் முருகவழிபாடு

தமிழ் மக்கள் பல நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். பல சூழ்நிலைகளின் காரணமாகப் புலம் பெயர்ந்து சென்ற மக்கள்,

*"யாதும் ஊரே யாவரும் கேளிர்" 5*

எனும் கணியன் பூங்குன்றனாரின் கூற்றிற்கு இணங்க உலகம் முழுதும் தமிழ் மக்கள் தமிழ் நாட்டைப் போன்றே பிற நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். மொரிஷியஸ் நாட்டில் வேலை ஆட்களாக அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்கள் தமிழ்க் கடவுளான முருகனை வழிபட்டு வருகின்றனர். அவற்றில், "சிவன், திருமால், முருகன், பிள்ளையார், அம்மன் போன்ற பெருமரபுத் தெய்வங்கள் அத்தீவில் பெருமளவு வணங்கப்படுகிறது. இத்தெய்வங்களுள் முருக வழிபாடே முதன்மை பெற்றுள்ளது. தமிழ்க்கடவுள் முருகன் எனும் நம்பிக்கைதான் இந்த முதன்மைக்கு மூலகாரணம்"6 என்கின்றனர். மொரிஷியஸ் நாட்டில் கொண்டாடப்படும் திருவிழாக்களில் மிகவும் முக்கியமான ஒன்றாக முருகனின் திருவிழா அமைந்துள்ளது.

## மொரிஷியஸ் முருகனின் திருவிழாக்கள்

தைப்பூசம், சித்தரா பௌர்ணமி, பங்குனி உத்திரம் இத்திருவிழாக்களின் போது மொரிஷியஸில் உள்ள தமிழர்கள் அனைவரும் முருகனைத் தரிசிக்கப் பல இடங்களிலிருந்தும் வருகின்றனர்.

## மொரிஷியஸில் காவடி

பலதரப்பட்ட மக்கள் வாழக்கூடிய நாடான மொரிஷியஸில் பெரும் மக்கள் தொகையாகத் தமிழர்கள் உள்ளனர். "தைப்பூசத் திருவிழாவிலும், சித்திரைப் பருவத் திருவிழாவிலும் காவடி எடுக்கும் வழக்கத்தை மொரிசியசு தமிழர்கள் பின்பற்றி வருகின்றனர்"7. தமிழ்நாட்டினைப் போன்றே மொரிஷியஸிலும் தைப்பூசத் திருவிழா மிகவும் பிரமாண்டமாக நடைபெறுகின்றது.

"மொரிஷியஸில் வட திசையில் கிராண்ட்பே என்னும் ஊரில் வட பழனி முருகன் கோயில் ஒன்று உள்ளது. மாதந்தோறும் கிருத்திகை நட்சத்திர நாளன்று சிறப்பான வழிபாடுகளும் இசைக் கச்சேரியும் நடைபெறுகின்றன. ஆடிக்கிருத்திகை அன்று பெருந்திரளான தமிழ் மக்கள், நாட்டின் எல்லா இடங்களிலிருந்தும் காவடி விழாவில் கலந்த கொள்கின்றனர்"8. தமிழ் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்த மக்கள் பல்வேறு காலச்சூழலில் வாழ்ந்தாலும்கூடத் தாங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர்.

## முடிவுரை

மனிதனாகப் பிறந்த அனைவரும் சூழ்நிலையின் காரணமாக ஏதேனும் ஓர் சிக்கலுக்குள் உட்படுத்தப்பட்டுத் தன் குடும்பத்திற்காகவும், தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்காகவும் தாய் நாட்டினை விட்டு அறிமுகம் இல்லா மனிதர்களிடம் சென்று கேட்டறிந்திடாத மொழியினையும் சந்திக்க நேரிடும் போது தங்களின் பொருளாதாரத்திற்காகப் புலம் பெயர்ந்து உழைத்துக் கொண்டுதான் இருக்கின்றனர். தமிழ் மக்கள் சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற பல நாடுகளில் வாழ்ந்து வந்தாலும் மொரிஷியஸில்

ISSN : 2581-9712

தங்களின் வாழ்வியல் பண்பாட்டினில் ஒன்றான இறைவழிபாட்டினை மிகுதியாகக் கடைபிடிக்கின்றனர் என்பதனை இதன்வழி அறியமுடிகிறது.

## அடிக்குறிப்பு

1. சாமி அப்பாத்துறை. புலம் பெயர்ந்த தமிழன்– ப.எண்–1.
2. சுவாமி மதுரானந்தர் (தொ.ஆ) – இந்து சமயம் தொடக்க நிலை – ப.எண்–2.
3. தொல்காப்பியம் – பொருளதிகாரம். நூற்பா – 981.
4. மேலது. நூற்பா – 981.
5. புறநானூறு – பாடல் – 192.
6. மொரிசியசில் தமிழ்ப் பண்பாடு – ப.எண் – 64.
7. மேலது, ப.எண் – 74
8. மேலது, ப.எண் – 64

## துணைநூற்ப் பட்டியல்

1.சாமி அப்பாத்துறை – புலம் பெயர்ந்த தமிழன், ஈழநாடு வெளியீடு, கனடா.
12 horse shoe crescent, Scarborough, on Canada, M1B4S5.
2. சுவாமி மதுரானந்தர் (தொ.ஆ) – இந்து சமயம் தொடக்க நிலை.
3. தமிழண்ணல் (உ.ஆ) – தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம், 48, தான முதலி தெரு, மதுரை– 625001.
4. முனைவர். ச.உதயசூரியன் – மொரிசியசில் தமிழ்ப் பண்பாடு, அயல் நாட்டுத்தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் –10.

******************

ISSN : 2581-9712



# பெரிய புராணத்தில் இறை நெறிக் கொள்கை

சங்கராமணி மாணிக்கம்
தமிழ்த்துறைத் தலைவர்,
மகாத்மா காந்தி நிறுவனம், மொரீசியசு.

## முன்னுரை

கடவுளை வழிபடும் வழக்கம் பண்டைக் காலத் தமிழர்களிடம் இருந்துள்ளது. பல்வேறு நிலங்களில் வாழ்ந்து வந்த மக்கள் ஒவ்வொரு நம்பிக்கைக்கும் ஒவ்வொரு தெய்வத்தை வழிபட்டுள்ளனர். இதற்குத் தொல்காப்பியம்,

*“மாயோன் மேயக் காடுறை உலகமும்*
*சேயோன் மேய மைவரை உலகமும்*
*வேந்தன் மேயத் தீம்புனல் உலகமும்*
*வருணன் மேயப் பெருமணல் உலகமும்”*
*(தொல்காப்பியம், பொருள், 951)*

என்று பண்டைக் காலத் தமிழர்கள் வணங்கிய தெய்வங்களைப் பற்றி கூறுகிறது.

பிற்காலத்தில் வேளாண்மை செய்து வந்த மக்கள், மழை பெய்தால் பயிர் விளையும், பயிர் விளைந்தால் வயிற்றுக்கு உணவு என்று உணர்ந்து மாரியம்மனை வழிபட்டனர். புயல், வெள்ளம் கண்டு பயந்து தங்கள் ஊர் இயற்கை சீற்றங்களால் அழிந்து விடாமல் பாதுகாக்க ஊரில் ஒவ்வொரு பகுதியிலும் காவலாய் ஒரு தெய்வத்தை வைத்து வணங்கி வந்துள்ளனர். பரிபாடல், கலித்தொகை முதலிய சங்க இலக்கிய நூல்கள் சங்கக் காலத் தமிழர்கள் முருகன், திருமால், சிவபெருமான், கொற்றவை முதலிய தெய்வங்களின்மீது வைத்துள்ள நம்பிக்கையை உணர்த்துகின்றன.

பண்டைக் காலம் முதல் இக்காலம் வரை தமிழர்கள் இறை நம்பிக்கை கொண்டவர்களாக விளங்குகின்றனர் என்று தமிழ் இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. ஆனாலும் தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இயக்கக் காலத்தில்தான் அதிகமான பக்தி இலக்கியங்கள் தோன்றியுள்ளன. பன்னிரு திருமுறையும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் பக்தி இயக்கக் காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்கள் எனப் போற்றப்படுகின்றன.

## மனிதப் பிறவியும் பிறவித் துன்பமும்

‘அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது’ என்று தமிழ்ச் சான்றோர் சொல்லிச் சென்றுள்ளனர். எல்லா உயிரினங்களிலும் மனிதப்பிறவி உயர்ந்த பிறவியாகக் கருதப்படுகிறது. மனிதப் பிறவிக்குத்தான் மேம்பட்ட ஆறாவது அறிவு விளங்குவதாகத் தொல்காப்பியமும் வகை செய்து கூறியுள்ளது. ஆனால் மனிதனாகப் பிறந்தாலும் பிணி, மூப்பு, சாவு வந்துவிடும்.

“வாழ்வில் இன்ப நிலைகளை மெய்ம்மையியலாளர் இரண்டாகப் பகுத்துரைப்பர். அவை சிற்றின்பம் மற்றும் பேரின்பம். உடலைக் கொண்டு புலனுணர்வுகளின் வழியே பெறுகின்ற நிலையில்லாத இன்பம் சிற்றின்பம் ஆகும். பேரின்பமயமான இறைவனோடு உள்ளத்தால் ஒன்றி உணர்வால்

நிலைபெற்று, உயிர் பெறக் கூடிய இன்பமே ஆகும்'' (முருகேசன்.க, 2012, ப. 5). சிற்றின்ப நாட்டம் பெருகினால் உயிரின் வினைகள் பெருகிப் பிறவித்துயர் மிகும். ஆனால் பேரின்ப நாட்டம் பெருகினால் பிறவித்தீங்குகள் நீங்கி முக்தி பெறலாம். இந்தப் பேருண்மையை நன்கு உணர்ந்த சிவன் அடியார்கள் தம்மைப் பேரின்பப் பெருநெறியில் நிலைநிறுத்திக் கொண்டுள்ளனர். ஆகவே பிறவி வேண்டாம் என்று சைவச் சமய நூல்கள் அனைத்தும் சாற்றும்.

பிறவிப் பிணியிலிருந்து தம்மை விடுவிட்டு ஈசனிடம் முக்தியை வேண்டிக் கொண்ட மாணிக்கவாசகர் உயிர்கள் புல், பூ, புழு, மரம், மிருகம், பறவை, பாம்பு, கல், மனிதர், பேய், அசுரர், முனிவர், தேவர் என்று இத்தனை வகைப் பிறப்புகளை எடுத்து உழல்கின்றன என்று விளக்கியுள்ளார். எல்லாப் பிறவிகளிலும் அவர் பிறந்து மெலிவடைந்தார். எனவே இனித் துன்பம் தரும் பிறவி வேண்டாம், பிறவியிலிருந்து முக்தி வேண்டும். இதனை இவர் திருவாசகத்தில் கீழ்வருமாறு பாடியுள்ளார்.

***"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்***
***பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்***
***கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்***
***வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்***
***செல்லாஅ நின்றஇத் தாவரச் சங்கமத்துள்***
***எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்***
***எம்பெருமான்"*** *(சிவபுராணம், 30)* என்று அறியமுடிகிறது.

## தமிழ் இலக்கியத்தில் தொண்டு நெறியும் வீடுபேறும்

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்தலினால் இம்மைக்கு மட்டுமல்ல மறுமைக்கும் பெருமை கிட்டும் என்பதை உலகிற்குப் பறைசாற்றியவை சைவத் திருமுறைகள். சைவத் திருமுறைகளின் வழியாகச் சிவன் அடியார்களின் பக்தித் திறம்தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

பன்னிரு திருமுறைகளில் பெரிய புராணம் ஒன்றாகும். இந்நூல் சேக்கிழாரால் இயற்றப்பட்டது. இந்நூலில் சேக்கிழார் அறுபத்து மூன்று சிவனடியார்களாகிய நாயன்மார்களின் வரலாற்றினையும், இறை நம்பிக்கையையும், இறைக் கொள்கையையும், இறைத் தொண்டினையும் நமக்கு உணர்த்துகின்றார். பெரிய புராணத்தில் உள்ள நாயன்மார்கள் அனைவரும் உலகியல் இன்பங்களைத் துறந்து இறைவன் அருட்காட்சியைக் காண்பது ஒன்றே வாழ்வின் குறியாய்க் கொண்டு இறுதியில் இறைவனின் திருமேனிப் பொலிவைக் கண்டு வீடுபேறு அடைந்துள்ளனர் என்று பெரிய புராணத்தில் காண முடிகிறது.

வாழ்க்கையில் ஒருவர் ஊதியம் கருதிச் செய்யும் செயல் தொழில் எனப்படும். ஒருவன் பிறருக்குத் தக்கவாறு நடந்து ஊதியம் கருதியும் கருதாமலும் செய்யும் செயல் கடமை எனப்படும். ஒருவன் தனக்கென எந்த ஒரு எதிர்பார்ப்பும் இன்றி யாரும் ஏவாமல் அன்பை அடித்தளமாகக் கொண்டு முன்வந்து பிறருக்குச் செய்யும் உதவித் தொண்டு ஆகும் என்று திரு சாமி. தியாகராசன் தம்முடைய 'பெரியபுராணச் சிந்தனை' என்னும் நூலில் தொண்டு என்னும் சொல்லுக்கு விளக்கம் தருகின்றார்.

பெரிய புராணத்தில் திருத்தொண்டராகிய நாயன்மார்கள் இறைவனுக்கும் இறையடியார்களுக்கும் செய்துள்ள மேலான தொண்டு நெறியை இப்பிறவியில் தாம் பெற்ற பேறு என உணர்ந்துள்ளனர். இவ்வாறு வாழ்வில்

ISSN : 2581-9712

நிலையில்லாத பொருள்மீது நாட்டம் கொள்ளாமல் சிவபெருமானுக்கும் அவர் அடியார்களுக்கும் செய்யும் அயரா அன்பு தொண்டுதான் சிறந்த வாழ்க்கை நெறி என்று வகுத்துக் கொண்டுள்ளனர்.

***“யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்***
***அதனின் அதனின் இலன்”*** *(குறள், 341)*

என்ற குறளின்படி தங்களின் பொருள்களை இழந்த நிலையிலும் அவர்கள் துன்பம் அடையாமல் தம் தொண்டினையே தங்கள் வாழ்வின் குறிக்கோள் எனப் போற்றியுள்ளனர்.

பழந்தமிழ் இலக்கியங்களில் கொடை போற்றப்பட்டுள்ளது. இருப்போர் இல்லாதாருக்குப் பொருள், உணவு முதலியவற்றை அளித்து உதவுவது கொடை ஆகும். தமிழ் நாட்டில் அரசன் ஊர் மக்களுக்கு உணவு வழங்குவதைச் சங்க இலக்கியத்தில் காண முடிகிறது.

இன்று இருப்பது போல அக்காலத்தில் தெருக்கள்தோறும் உணவுக்கடைகள் இருக்கவில்லை. நெடுந்தொலைவு செல்வோர் பசித்துத் துன்புறாதபடி செல்வ வளம் படைத்தோர் ஆங்காங்கே உணவுச் சாலைகள் அமைத்து உணவு அளித்துள்ளனர். சங்க இலக்கிய நூலான பட்டினப்பாலையில் உணவுச் சாலையை அன்னாசாலை என்று அழைத்திருப்பதைக் காண முடிகிறது.

வீடுபேற்றுக்கு வழிகோலும் அறங்களுள் சிறந்த அறம் ஈகை ஆகும். அதனால் ஈகைக்குத் திருவள்ளுவர் ஓர் அதிகாரமே இயற்றியுள்ளார். கைமாறு கருதாது வறுமையானவர்க்கு ஒரு பொருளைத் தந்து உதவுவதே ஈகை; பிறருக்குத் தருவது எல்லாம் எதிர்ப்பயனை எதிர்பார்த்துத் தருவது ஆகும் என்று ஈகைக்குத் திருவள்ளுவர் தருகின்ற விளக்கமாகும்.

***“வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்***
***குறியெதிர்ப்பை நீர துடைத்து”*** *(குறள், 221)*

மனித உடம்போ, உயிரோ, அவன் தேடிக் குவித்த செல்வங்களோ ஒரு போதும் நிலையாக இருக்கப் போவதில்லை. புல்லின் நுனியில் இருக்கின்ற பனித்துளி ஆவியாகி மறைவதுபோல் மனித வாழ்க்கை. உடம்பு நிலையில்லாமையை உடையது என்று நினைத்து, உடலோடு கூடியிருக்கின்ற பொழுதே ஒவ்வொருவரும் அறத் தொழிலைச் செய்தல் வேண்டும். இதனை நாலடியார்,

***“புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி***
***இன்னினியே செய்க அறவினை – இன்னினியே***
***நின்றான் இருந்தான் கிடந்தான் கேளலறச்***
***சென்றான் எனப்படுத லால்”*** *(நாலடியார், 29)*

என்று கூறுகிறது.

## பெரிய புராணத்தில் ஈகையும் வீடுபேறும்

பெரிய புராணத்தில் இறை நெறியில் சென்று சிவபெருமானுக்குத் தொண்டு செய்து முக்தி பெற்ற நாயன்மார்களுள் மூர்க்க நாயனார், முனையடுவார், சிறுத்தொண்டர், இளையாங்குடிமாற நாயனார், காரைக்கால் அம்மையார், நரசிங்கர், கலிக்கம்பர் முதலியோர் சிவனடியாருக்குத் திருவமுது அளித்தலைப் பெரிய தொண்டாகக் கொண்டுள்ளவர்கள்.

இளையான் குடிமாற நாயனார் அளவற்ற வறுமையிலும் அடியார் வேடம் எடுத்து வந்த சிவபெருமானுக்குத் திருவமுது ஊட்டியவர். சிறுத்தொண்ட நாயனாரும் அவர் மனைவியாரும் தங்கள் ஒப்பற்ற மகனை மன நடுக்கம் மனக் கலக்கம் இல்லாமல் அடியார் பொருட்டு அரிந்து கறி சமைத்து அமுது

ISSN : 2581-9712

ஊட்டியவர்கள். இடங்கழியார் எனும் மன்னர் சிவனடியாருக்குத் திருவமுது செய்ய, தமது நெற்பண்டாரத்தைக் கொள்ளை கொள்ள விடுத்தவர். அப்பூதியடிகள் மனைவியாரும் தங்கள் புதல்வன் இறந்தபோதிலும் துன்பம் கொள்ளாது ஆளுடைய அரசர்க்கு அமுது செய்விக்கும் பெருந் தொண்டை ஆற்றியுள்ளனர்.

நரசிங்க முனையரையர் தூர்த்த வேடம் கொண்டு வந்த அடியார்க்கு மிகுந்த பொன் கொடுத்தவர். திருநீலகண்ட நாயனார் அடியார்களுக்கு மட்கலம் திருவோடு முதலியன செய்து கொடுத்தார். அமர்நீதி நாயனாரும் நேச நாயனாரும் சிவனடியாருக்கு உடை, கோவணம் முதலியன அளித்து உதவினார்கள். மானக் காஞ்சாறர் தம்முடைய மகளின் கூந்தலை அவள் திருமணம் புரியப் போகும் திருநாளில் ஓர் அடியவர் பொருட்டு அரிந்து கொடுத்தவர்.

இயற்பகையார் சிவனடியார்கள் விரும்பிய யாவும் இல்லை என்னாது வழங்கி வந்தவர். தன்னிடம் இருந்த பொருள் யாவும் சிவன் அடியவர்க்கு உடைமை ஆகும் என்ற தூய சிந்தனையுடன் வாழ்ந்து வந்தவர். வேதியர் கோலத்தில் அவர் இல்லத்தை அடைந்த சிவபெருமானை நோக்கி,

***"யாதும் ஒன்றும் என் பக்கல்உண் டாகில்***
***அன்னது எம்பிரான் அடியவர் உடைமை"***
*(பெரிய புராணம், 410)*

என்று இயற்பகை நாயனார் கூறுவதைக் காணமுடிகிறது. வேதியர் இயற்பகையாரிடம் தன் அன்பு மனைவியைக் கேட்டபோதிலும் மனதில் கலக்கம் இல்லாமல் முன்னினும் மகிழ்ச்சி அடைந்து,

***"இது எனக்கு முன்பு உள்ளதே வேண்டி***
***எம்பிரான் செய்த பேறு எனக்கு"*** *(மேலது, 411)*

என்று சொல்லி, அடியார் விரும்பிய யாவும் கொடுப்பதை மேற்கொண்டு தம்முடைய அன்பு மனைவியையும் கொடுத்தார். இவ்வாறு எல்லாப் பாசப் பந்தங்களையும் பற்றுகளையும் அறுத்துச் சிவபெருமானைப் பற்றிக் கொண்ட இயற்பகையாருக்கும் அவர் மனைவிக்கும் சிவலோக வாழ்வு என்னும் பேறு பெற்றுள்ளனர்.

கண்ணப்ப நாயனார் மகாதேவரைக் கண்டவுடன் அவரைக் கட்டித் தழுவினார். ஆனந்தக் கூத்தாடினார். உள்ளத்தில் பொங்கி எழுந்த பேரன்பு காரணமாக இறைவனுக்குப் படைக்கப் பதம் செய்த நல்ல ஊனையும், சூடுவதற்கு மலர்களையும், திருமஞ்சனத்திற்கு நீரையும் கொண்டு சென்று குடுமித் தேவரைப் பூசித்து நைவேத்தியம் படைத்தார்.

சிவபெருமானின் வலக்கண்ணில் குருதி பெருகுவதைக் கண்டு கண்ணனார் பதறி அடித்தார். இதனைச் சேக்கிழார்,

***"நீடிய சோகத்தோடு***
***நிறைமலர்ப் பாதம் பற்றி***
***மாடுறக் கட்டிக் கொண்டு***
***கதறினார் கண்ணீர் வார"*** *(மேலது, 822)*

என்று பாடியுள்ளார். திண்ணனார் ஆகிய கண்ணப்பர் தமது வலக்கண்ணை அம்பு கொண்டு பெயர்த்துச் சிவபெருமானின் வலக்கண்ணில் அப்பினார். அடுத்து ஈசனின் இடக்கண்ணில் குருதி பெருகிற்று எனக் கண்டு தமது இடது காலை நாதரின் திருக்கண்ணில் ஊன்றி இடக்கண்ணைத் தோண்டவும் துணிந்தார். ஆனால் அவர் கையை ஈசன் தன் கையால் பிடித்துக் கொண்டு,

***"என் வலத்தில் மாறிலாய் நிற்க"*** *(மேலது, 834)*

என்று சொல்லி மாற்றமில்லாத அன்பு உடையவனாகிய கண்ணப்பருக்குத்

திருவருள் புரிந்துள்ளார் என்று பெரிய புராணத்தில் சேக்கிழார் பாடியுள்ளார்.

## முடிவுரை

திருத்தொண்டர்கள் உலகியலில் நாட்டம் கொள்ளாது இறைவனுக்கும், இறை அடியார்களுக்கும் செய்யும் மேலான தொண்டு தான் சிறந்த வாழ்க்கை நெறி எனப் போற்றியுள்ளனர். பெரிய புராணத்தில் நாயன்மார்கள் பலர் நல்ல செல்வ நிலையில் இருந்து சிவப்பணிக்காகவே தம் செல்வங்களை இழந்துள்ளனர். செல்வம் அனைத்தையும் இழந்த நிலையிலும் சிவத்தொண்டைக் கைவிடாமல் செய்துள்ளனர். சிவத் தொண்டுக்கு அவர்கள் தங்கள் உயிரையும் ஈத்துள்ளனர். உலக வாழ்வில் பற்று கொள்ளாமல் இறைவனையே பற்றிக் கொண்டு வாழ்ந்து வந்துள்ள இவர்கள் இறுதியில் வீடுபேறு அடைந்துள்ளனர் என்று பெரிய புராணம் புகட்டும் பாடம் ஆகும்.

பெரிய புராணத்தில் பிறவிப் பிணியிலிருந்து விடுபட்டு முக்தி அடைவதற்கான வழிகளில் பற்றில்லா வாழ்வு என்பது ஒன்றாகும். எல்லாப் பற்றுகளையும் விட்டு இறைவனை மட்டும் பற்றிக் கொண்டு வாழ்ந்தால் இது ஆன்மாவை உயர்த்தி அதனை மீண்டும் பிறவாமையாகிய ஆன்ம விடுதலைக்கு இட்டுச் செல்லும் என்று பெரிய புராணத்தின் வழியாக அறிய முடிகிறது.

## துணை நூல் பட்டியல்


1. ஆறுமுகநாவலரவர்கள்., (1999). பெரிய புராணம் வசனம். முல்லை நிலையம். சென்னை – 17)

2. இராமசுப்பிரமணியம்.வ.த., (உ.ஆ)(2002). பெரிய புராணம், மூலமும் உரையும். திருமகள் நிலையம், சென்னை –17.

3. சுப்பிரமணியபிள்ளை.கா., (2010). சேக்கிழார் சுவாமிகள் சரித்திரமும் பெரிய புராண ஆராய்ச்சியும். பூம்புகார் பதிப்பகம், சென்னை – 600 108.

4. ஞானஜோதி.ச., (2002). திருமந்திரம் புகட்டும் நல்வாழ்வு. மூவேந்தர் அச்சகம், சென்னை –14.

5. தமிழண்ணல்.,(உ.ஆ)(2003). தொல்காப்பியம் பொருளதிகாரம். மணிவாசகர் பதிப்பகம். சென்னை – 600 108.

6. புலியூர்க் கேசிகன்., (உ.ஆ)(2005). திருக்குறள் புதிய உரை. பூம்புகார் பதிப்பகம். சென்னை – 600 108.

7. பூவண்ணன்., (2000). தமிழ் இலக்கிய வரலாறு. கழக வெளியீடு. சென்னை –18

8. மதுரை முதலியார்., (உ.ஆ) (1988). நாலடியார், தெளிவுரையுடன். முல்லை நிலையம். சென்னை –17.

9. முருகேசன்.க., (2012). திருமுறைகளில் அகப்பொருள் மரபுகளும் தொண்டு நெறிகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை –113.

10. வரதராஜன்.ஜி., (ஊ.ஆ)(1995). திருவாசகம் – விரிவுரை, பழனியப்பா பிரதர்ஷ், சென்னை – 14.


**********************************************

ISSN : 2581-9712



# பெரியபுராணத்தில் திருமணம்

**அ. மணிகண்டபூபதி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
காந்திகிராம கிராமியநிகர்நிலைப் பல்கலைக் கழகம்,
காந்திகிராமம்.

## முன்னுரை

குடும்பம் என்ற அமைப்பு உருவாவதற்கு மூலக் காரணமாக அமைவது திருமணம். பண்டைய காலம்தொட்டு திருமண முறைகள் பின்பற்றப்பட்டு வருகிறது. இத்திருமண முறை காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்பப் பல மாறுதல்களை அடைந்துள்ளதை இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. பண்டைய காலத்தில் திருமண முறை என்பது மங்கலநாண் அணிதலோ தீவலம் வருதலோ காணப்படவில்லை. அவை இருமனமொத்த மனங்களாகவே காணப்பட்டன. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் களவு கற்பு என்று இருமணங்களையும் குறிப்பிடுகிறது. களவில் மணந்த தலைவன் இவளை மணக்கவில்லை எனப் பொய்கூறுதலும் வேறு திருமணத்திற்கு உடன்படுவதுமான குற்றங்கள் ஏற்பட்ட பொழுது பெரியோர் கூடுதலும், நாலுபேர் முன்பாக நடக்கும் மனமாக மாறியது. இதனைத் தொல்காப்பியர்,

***“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்***
***ஐயர் யாத்தனர் கரணம் என்ப”1***

என்கிறார். பண்டைய காலத்தில் திருமணம் முறையாவது இரு வகையாக நிகழ்ந்துள்ளது ஒன்று பெண்ணின் பெற்றோர் தனது பெண்ணைப் பெறத் தகுதியான ஒருவருக்குத் தர நிகழும் மனம், பெற்றோர் சம்மதிக்காத பொழுது நடைபெறும் உடன்போக்கு மனம் என அமையும்.

இடைக்காலத்தில் தோன்றிய பெரியபுராணத்தில் பல மணமுறைகள் பேசப்படுகின்றன. கற்பு மணம், கலப்பு மணம், பலதார மணம் எனப் பல மணமுறைகள் பேசப்படுகின்றன. பெரியபுராணத்தில் ஞானசம்பந்தர் – நம்பாண்டார் மகள் மணம், புனிதவதி – பரமதத்தன் மணம், கலிக்காமர் – மானக்கஞ்சாறர் மகள் மணம், சுந்தரர் – பரவையார் சங்கிலியார் மணம் எனப் பல மணமுறைகள் கூறப்படுகிறது. இவற்றில் சுந்தரர், ஞானசம்பந்தரா் திருமணம் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

## திருமணம் – பொருள்

“திருமணம் என்பது–விவாகம் மணம் – என்பது கலியாணம், கூட்டம், மகிழ்ச்சி, வாசனை, கூடுதல், வாசம், நன்னிலை, சேர்க்கை என்கிறது”2. மதுரை தமிழ் பேரகராதி “திருமணம் என்பது கணவன்– மனைவியாக வாழும் சமூக ஏற்பாடு”3 என்று கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி கூறுகிறது. “மணம் – என்பது கூடுதல், திருமணம், நறுமணம்”4 என்கிறது நர்மதாவின் தமிழ் அகராதி. பொதுவாகத் திருமணம் என்பது மன்றல், வரைவு, மணம், கடி, கடிமணம், வதுவை, நன்மணம்,

ISSN : 2581-9712

கல்யாணம்(வடசொல்), விவாகம் (வடசொல்) எனப் பல சொற்களில் அமைந்துள்ளது.

**சுந்தரர் திருமணம்**

கைலாயத்தில் கமலினி அநிந்திதையை கண்டு மோகித்து இறைவனின் சாபத்திற்கு ஆளான சுந்தரர் ஆதி சைவக் குலத்தில் பிறந்து குறுநில மன்னரான நரசிங்க முனையரையரால் வளர்க்கப்படுகிறார். நரசிங்க முனையர் வேளாளர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை அ.ச.ஞானசம்பந்தர் குறிப்பிடும்போது,

*“தங்கள்*
*அரசு இளம்குமரருக்கு ஏற்ப*
*அன்பினால் மகனைக் கொண்டார்”*5

என்று பாடுவதால் நம்பி ஆரூரர் வாழ்க்கை தொடங்கும் பொழுதே ஒரு புரட்சியோடே தொடங்குகிறது என்பதை அறிய முடிகிறது என்கிறார். இத்திருமணத்தையே இறைவன் தடுப்பதாகவும் அதன் பின்னரே கணிகையர் குலத்தில் பிறந்த பரவையாரையும் வேளாளர் குலத்தில் பிறந்த சங்கிலியாரையும் மணக்கிறார்.

மேலும், அ.ச.ஞானசம்பந்தர் சுந்தரர் பற்றிக் குறிப்பிடும்போது, “எட்டாம் நூற்றாண்டில் சுந்தரர் செய்த புரட்சியைத் தமிழகத்திற்கு அறிவிக்க விரும்பிய சேக்கிழார் மாதவி தோன்றிய இக்குலம் எக்காரணத்தாலும் ஒதுக்கப்பட வேண்டிய ஒன்று அன்று என்பதை உணர்த்துவதே நிலைநிறுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டார். காதற் பரத்தையான ஒருவருக்கே உரியவளாக வாழ்ந்தவள் மாதவி. 2ஆம் நூற்றாண்டில் தமிழ் இனத்தின் நிலைமை வேறு எட்டாம் நூற்றாண்டில் இனத்தின் இருக்க நிலை வேறு. ஆயினும், தமிழ் பண்பாடு மிக உயர்ந்துவிட்ட நிலையில் சிவவேதியர் குலத்தில் தோன்றிய ஒருவர் இறைவன் திருவருளால் அதன் துணைகொண்டு பரத்தையர் குலத்தில் தோன்றிய ஒரு பெண்ணை மணம் முடிக்கிறார். திருவாரூரில் வாழ்ந்த அந்தணர்கள் அனைவரும் இந்தக் கலப்புத் திருமணத்தை ஏற்றுக் கொண்டு மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு தாமே முன்னின்று இத்திருமணத்தை நடத்தி வைக்கின்றனர். கலப்பு மணம் என்பது 20ஆம் நூற்றாண்டில் புரட்சியாளர்கள் தமிழகத்திற்குத் தந்த அருட்கொடை என்று பெரிதாகப் போற்றுபவர்கள் தங்களின் முன்னோர்களின் வரலாற்றை அறியாதவர்கள் ஆவர். தேவாரம் பாடிய சுந்தரர் இம்மண்ணில் 8ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றி வாழ்ந்த வரலாற்று நாயகர் என்பதையும் இது கற்பனைக் கதை அன்று என்பதையும் மறந்து விட்டதால்தான் நாம் இன்று இந்த இழிநிலையில் உள்ளோம்”6 என்கிறார்.

இத்திருமணத்தைச் சிவனடியார்களின் முன்னின்று நடத்துகிறார்கள். இங்குப் பலதார மணம் பெருமளவில் கண்டிக்கப்படவில்லை. சங்கிலியார் ஊடலோடு திருவாரூரைத் தாண்டாது இருக்க வேண்டும் என்ற சங்கிலியாரின் சபதத்தோடும் இருகண் இழந்து பெறுவதோடு இவை முடிவடைகிறது.

திருவாரூரில் உத்திரக் கணிகையர் குலத்தில் தோன்றியவர் பரவையார். ஞாயிறு என்னும் ஊரில் தோன்றியவர் சங்கிலியார் இவர்கள் இருவரும் உமையின் சேடிப்பெண்களாக முற்பிறவியில் இருந்ததாகக் காட்டப்படுபவர்கள் சுந்தரர் காதலித்ததனால் பின்னர்ப் பூலோகத்தில் பிறவி எடுத்துக் கணிகையர் குலத்தில் ஒருவரும் வேளாளர் குலத்தில்

ISSN : 2581-9712

ஒருவருமாகப் பிறக்கிறார்கள். குலமரபு, சாதிமரபு பார்த்துச் சங்கிலியாரை பெண் கேட்ட ஒருவர் திருமணத்திற்கு முன்பே இறந்து விடச் சிவனடியாரைத் தவிரப் பிற ஆடவரை மணப்பதில்லை என்ற குறிக்கோளுடன் ஒற்றியூர் சென்று கன்னிமாடம் அமைத்துத் தொண்டு செய்து வருகிறார் சங்கிலியார். கன்னிமாடம் அவரது தந்தையால் அமைத்துத் தரப்படுகிறது. சிவனடியார் ஒருவரையே மணப்பேன் என்று உறுதி பூண்டு ஒருபுறமிருக்கச் சங்கிலியாரை பெண் பார்க்க வந்தவர் இறந்துவிட அவர் தன் வீட்டிலிருந்தபடியே தான் சிவனடியாரை மணப்பேன் என உறுதி கூறாது மற்றொரு ஊரில் கன்னிமாடம் அமைத்துத் தொண்டு செய்வானேன்? எனில் ஒருவரின் எதிர்பாராத இறப்பு இவரைப் பெண் பார்த்த நேரத்தில் தான் இவ்வாறு நடந்ததெனப் பிறர் தூற்றுதலும் உண்டாயிருக்கலாம் அதனாலையே இவர் ஒற்றியூர் சென்றார் எனவும் புரிந்து கொள்ள வாய்ப்பளிக்கிறது.

இனம், குலம், பிறப்பு எனும் சுழியில் தடுமாறி இருந்த சமூகக் கட்டமைப்பை மாற்றிப் பரவையாரை மணந்ததைச் சுந்தரரை ஒத்த திருக்கூட்டத்தினராகிய அடியார்களும், இறைவனுமே முன்னின்று திருமணத்தை முடிப்பதாகப் பாடியிருப்பதன் மூலம் ஒரு சமூகம் சார்ந்த புரட்சிக்கு வித்திட்டவராகவும் இந்நிகழ்வின் வழி எடுத்துக்காட்டுகிறார் சேக்கிழார். இதனை த.தியாகராசன் தனது ஆய்வில் குறிப்பிடும்போது, "ஓவன் ராபர்ட்' எனும் ஆங்கிலக் கற்பனைவாத சோசலிஸ்ட் சமூகச் சீர்திருத்தப் பாதையில் மூன்று பெரும் தடை மதில்கள் தடுத்து நிற்பதைக் கண்டார். 1. தனியார் சொத்துடைமை, 2. சமயம், 3. தற்காலத் திருமண வடிவம் (பி.எங்கெல்ஸ்,1947:77). இவற்றின் மீது தாக்குதல் தொடுத்த காரணத்திற்காகச் சட்டத்திற்குப் புறம்பானவராய் விலக்கப்படுதல், தீண்டத்தகாதவராய் அங்கீகாரச் சமூகம் ஒதுக்குதல், தமது சமூகத் தகுதியையே இழத்தல் ஆகிய கொடுமைகளை அவர் சந்திப்பதை அறிகிறோம். சுந்தரர் வாழ்ந்த காலத்திலும் இத்தகைய மூன்று தடைகள் இருந்தன. பிரமதேயக் கட்டமைப்பின் சொத்துடைமை, சமயங்கள் போதித்திருந்த இனம், குல, மனுதரும சாத்திரங்கள் இவற்றை ஒட்டிய திருமண வடிவங்கள் இம்மூன்றின் பிடியிலிருந்தும் உதறிய திருமண வடிவங்கள் தாம் சுந்தரர் பரவை சங்கிலியாரை மணந்த திருமணங்கள்"7 என்கிறார்.

கலப்பு மணங்களுக்கு வித்திட்டுப் புரட்சியை மேற்கொண்டதாகச் சுந்தரர் பெருமையாகப் பேசப்பட்டாலும் சுந்தரருக்கு மணம் பேசப்பட்டு இடையில் நின்று விட்டச் சடங்கவியாரின் மகள் வேறு திருமணம் செய்து கொள்ளாது நம்பியாரூரரை நினைத்தே பெருமிதம் அடைந்தார் என்று முடித்திருப்பது தன் மனம் கொண்ட சுந்தரரைத் தவிர வேறு ஆடவரை மணக்க விருப்பமில்லாத நிலையா? அப்பெண்ணிற்கு அளிக்கப்பட்ட சுதந்திரமா? அல்லது மணவரை வரை சென்ற பெண்ணை மணக்க முன்வராத அக்காலச் சமூகச் சூழலா? என்பது சிந்திக்கத்தக்கது.

சைவச் சமயத்தில் இனம் வேறுபாடு இல்லை அனைவரும் சமம் என்ற நோக்கிலே சுந்தரருக்காக இறைவனே தூது சென்றதாகக் காட்டப்படுகிறாரா? பிராமணர்களே இனம் வேறுபாடுகளை முன்னின்று கட்டமைப்பவர்களாகக் காட்டப்பட்டு வரும் சூழலில் சுந்தரர்

ISSN : 2581-9712

பிராமணர் ஆயினும் சமூக மாற்றத்திற்காக அவரே முன்னின்று நடத்துபவராகப் புரட்சி செய்பவராகக் காட்டப்படுகிறாரா? இத்திருமணத்திற்கு இறைவன் உதவுவதன் மூலம் இறைவனின் நோக்கமே அனைவரும் இறைவன் முன் சமம் என உயர்வு காட்டுவதற்காகவா?

மனிதர்களுக்குத்தான் இச்சாதி பேதங்கள் எல்லாம் இது இறைவனுக்கு இல்லை என்பதைக் காட்டுவற்காக இறைவன் தூது செல்கிறாரா? மணிமேகலையில் மாதவியின் மூலமும் மணிமேகலையின் மூலமும் கி.பி இரண்டாம் நூற்றாண்டிலேயே இக்குலத்திற்கான இழிநிலையிலிருந்து மீட்டு மாதவியையும் மணிமேகலையையும் முதன்மை பாத்திரங்களாகவும் அறத்தின் பாத்திரங்களாகவும் சுட்டிக்காட்டிவிட்ட நிலையிலும் கிபி எட்டாம் நூற்றாண்டிலேயும் பரவையாரைக் இக்குலத்தவராகக் காட்டப்படுவதன் நோக்கமென்ன? இக்குலத்திற்கான இழிபெயர்கள் தொடர்ந்து கொண்டுதான் இருந்ததா? பெரியபுராணத்தில் நாயகனாகப் புகழப்படும் சுந்தரருக்கு நாயகியாக்கிக் காட்டுவது குலத்தால் உயர்வு தாழ்வு பாராட்டப்பட்டதை மாற்றி அக்குலச் சமூக முன்னேற்றத்திற்கு உதவிடும் சேக்கிழாரின் நோக்கா?. வைதிக வேதியரான சுந்தரரது திருமணம் என்பது தெய்வீக அருளால் நடைபெறுவதாகக் காட்டப்படுவது அடியார் கூட்டத்தார் முன்னின்று நடத்துவதாகக் காட்டப்படுவது இறைவனே தூது செல்வதாகக் காட்டப்படுவது எனப் பல இடங்களில் இலகுவாகக் காட்டப்படுவது அன்றைய சமூகச் சாதிய இறுக்கங்களிலிருந்தும் எதிர்ப்புகளிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்வதற்கான முயற்சியா? எனப் பல நிலைகளில் ஆய்வு நோக்கில் காணவும் வாய்ப்பளிக்கிறது.

**திருஞானசம்பந்தர் திருமணம்**

பல பகுதிகளுக்குச் சென்று பல பதிகங்களைப் பாடிய ஞானசம்பந்தர் திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டுத் திருமணம் நடைபெறுகிறது. ஊமையாளிடம் ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர் பிராமணக் குலத்தைச் சேர்ந்தவர். திருமண வயதை அடையும் போது இவருக்கும் நம்பியாண்டார் மகளுக்கும் திருமணம் நடைபெறுகிறது. இவரது திருமணம் ஒரே குலத்திற்குள்ளான திருமணமாகும். இவர்களது வைதீக முறைப்படி திருமணம் நடக்கிறது. இங்கு நடைபெறும் திருமணத்தில் தேவர்கள் பூமாரி பொழிகிறார்கள். பிராமணர்கள் மந்திரம் ஓத அடியார்கள் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதச் சிவபெருமானும் உமாதேவியும் இடப வாகனத்தில் வாழ்த்தத் திருமாங்கல்யத்தைக் கட்டினார். வேதவிதிப்படி வார்க்கப்பட்ட அக்கினியை வலம் வந்தார் இவ்வாறு திருமணம் நடைபெறுகிறது. சிவபெருமானே நீயும் உனது மனைவியும் உனது திருமண நிகழ்வில் கலந்துகொள்ள வந்தவர்களும் இச்சோதியில் கலந்து நம்மை வந்தடையுங்கள் என அருளிச் செய்து சோதி வடிவமாக நின்றார். திருமண நிகழ்வில் கலந்து கொள்ள வந்த ஒவ்வொருவராய் சோதியில் புகுகின்றனர். இறுதியில் ஞானசம்பந்தரும் அவர் மனைவியும் உட்செல்ல சோதி மறைகிறது.

இத்திருமணத்தைத் திருநீலநக்க நாயனார் திருமணச் சடங்குகளையும் முன்னின்று நடத்தி வைக்கிறார். இவரது திருமணம் வைதீக முறைப்படி நடந்தேறியதோடு அங்கிருந்த திருமணத்தில் கலந்து கொண்ட அனைவரும் வீடுபேறு அடைவது என்பதைப்

ISSN : 2581-9712

பாடுவதன் மூலம் வைதீக முறைக்கு ஏற்றம் தருவதாகக் கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது.

**மணம் மறுத்தல்**

சிவநேசர் ஞானசம்பந்தருக்கு மணம் முடிக்க வேண்டிப் பூம்பாவையை வளர்க்கிறார். பூம்பாவை அரவம் தீண்டி இறக்க அப்பெண்ணின் எலும்பை ஒரு குடத்தில் போட்டு வைத்தார். ஞானசம்பந்தருக்கு இச்செய்தியைத் தெரிவிக்கப்பட்டதும் குடத்தினின்று அப்பெண்ணை உயிர் பெற்று எழச் செய்தார். அப்பெண்ணை மணமுடிக்கச் சிவநேசர் வேண்டிய பொழுது ஞானசம்பந்தர் திருமணம் செய்ய மறுத்து அப்பெண்ணிற்கு உயிர் கொடுத்தலால் அப்பெண்ணிற்குத் தந்தை 'யான்' என்கிறார். அதேபோலச் சுந்தரர் வரலாற்றிலும் கோட்புலியார் தன் பிள்ளைகளான சிங்கடி, வனப்பகையை மணமுடிக்கச் சுந்தரரை வேண்ட அவர்களைத் தன் பிள்ளைகள் என்று கூறுவதோடு பதிகங்களிலும் சிங்கடி தந்தை வனப்பகை தந்தை என்று பாடுவதன் மூலம் பதினாறு வயதிற்கு உள்ளான ஞானசம்பந்தரும் பதினெட்டு வயதிற்கு உள்ளான சுந்தரரும் தன் இளம் வயதிலேயே இப்பெண்களைத் தன் பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டது அவர்கள் இளம் வயதிலேயே மனப்பக்குவம் அடைந்துவிட்டதைக் காட்டுவனவாய் உள்ளனவா? அல்லது வைதீகச் சார்புடையவராகப் பல இடங்களில் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் ஞானசம்பந்தர் வேறு குலத்துப் பெண் என்பதால் மறுத்தாரா? என்பது சிந்திக்கத்தக்கது.

**திருமண முறைகள்**

பெரியபுராணத்தில் வேளாளர், ஆதி சைவர், வணிகர், வைதீக வேதியர் ஆகியோரது திருமண முறைகள் இடம் பெறுகின்றன. இத்திருமண முறைகள் ஒன்றுக்கொன்று வேறுபாடு உடையதாக உள்ளது. அரசர் அந்தணர் வணிகர் வேளாளர் என்று உயர்வு தாழ்வு மேல்கீழ் என்பவை கற்பிக்கப்பட்ட பின்னரும் இவர்களின் திருமண முறைகள் என்பது ஓரளவு வைதீகத்திற்கு உட்பட்டதாக அமையப் பெற்றவையாகக் காணமுடிகிறது.

பொதுவாகப் பெரியபுராணத்தில் திருமணம் என்பது ஒரு இனத்துக்குள்ளேயே நடக்கும் மணங்களாக இருக்கின்றன. இது அக்காலச் சாதியச் சமூகக் கட்டமைப்பு குறைந்துவிடாது காப்பதற்குத் திருமணமே துணைபுரிந்ததை அறிய முடிகிறது. பொதுவாகத் திருமணங்கள் குலம் கோத்திரம் தெரிந்து ஒரு இனத்துக்குள்ளேயே நடந்துள்ளதை அறியமுடிகிறது. திருமணத்தில் ஒவ்வொரு சாதியாரும் குலம் கோத்திரம் அறிந்து மணம் பேசுவதைச் சுந்தரர் சடங்கவியார் திருமண நிகழ்வில் காணமுடிகிறது. இதனை,

*"குல முதல் அறிவர் மிக்கோர் கோத்திர முறையும் தேர்ந்தோர்*
*நலமிகு முதியோர் சொல்லச் சடங்கவி நன்மை ஏற்று*
*மலர்தரு முகத்தனாகி மணபுரிசெயலின் வாய்மை*
*பலவுடன் பேசி ஒத்த பணியினால் அன்பு நேர்ந்தாள்" (பெரியபுராணம் – 154)*

என்ற பாடலின் மூலம் அறிய முடிகிறது.

சுந்தரர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளை மணக்கும் ஆதிசைவர் இல்லத் திருமணம் ஏறத்தாழ இருபது பாடல்களில்

ISSN : 2581-9712

விவரிக்கப்படுகிறது. ஞானசம்பந்தர் நம்பாண்டார் மகளைத் திருமணம் செய்வது கிட்டத்தட்ட எழுபது பாடல்களில் பாடப்படுகிறது.

திருமணச் சடங்கு முறைகள் பொதுவாக ஞானசம்பந்தர் புராணத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. ஆதிசைவர், வேளாளர், வணிகர் ஆகியோர் திருமணங்களில் வயதில் அறிவில் முதுமை உடையவர்களைக் கொண்டு மணம் பேசுதல் நிகழ்ந்துள்ளது. மணமகள் இல்லத்திற்குச் சென்று சம்மதம் பெற்று அத்திருமண நிகழ்வு நடைபெற உறுதுணையாக இருந்துள்ளனர் எனில் சமூகம் முதியோர்களுக்கு அளித்த முன்னுரிமையும் முதியோர்கள் முன்னின்று ஆற்றும் கடமைகளையும் பெரியபுராணம் வழி அறியமுடிகிறது.

பெரியபுராணம் சமூகவியல் திறனாய்வு என்ற ஆய்வில் சீதாலெட்சுமி கூறும்போது, "வைதீக வேதியர்கள் திருமணம் பேசும் முறை மாறுபாடு உடையதாக உள்ளது. இவர்கள் ஆகமங்களை விட வேதத்திற்கு முதன்மை தந்தவர்கள். இது சம்பந்தரது மரபு. சம்பந்தரது தந்தை தனது சுற்றத்தாருடன் தானும் மணமகளது இல்லத்திற்குச் சென்று மகனுக்கு மணம் பேசியதை அறியமுடிகிறது. வைதிக வேதியரது குலம் தவிர ஏனையோர் குலத்தில் மணமகனின் தந்தை மகட்பேச செல்வதாக இல்லை" என மூதறிவோர் வாயிலாகவே இவை நிகழ்த்தப்பட்டன.

*"வருவாரும் பெருஞ்சுற்றம் மகிழ்சிறப்ப மகட்பேசத்*
*தருவார் தன்பணை நல்லூர் சார்கின்றார் தாதையார்"*

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன என்கிறார் வே. சீதாலெட்சுமி.

**மணவோலை**

மணவோலை திருமண நாளைக் குறிப்பது இதில் மணமகன் மணமகளின் வீட்டார் ஒப்புதல் அவர்களைப் பற்றி விவரங்கள், மணம் நிகழும் இடம் ஆகிய விவரங்கள் உறவுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. மணமகள் இல்லத்தில் இருந்து ஆடவர் பெண்டிர் வாத்தியம் முழங்க மணமகள் இல்லத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறது. இதனை மணமகள் இல்லத்தில் இருந்து ஆடவரும் பெண்டிரும் வரவேற்று ஏற்றுக்கொள்கின்றனர்.

**நீள்முளை சார்த்துதல்**

திருமணத்தில் நீள்முளை சார்த்துதல் மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. இருவீட்டாரும் திருமணத்திற்குச் சம்மதித்த பின்பு முதலில் செய்யப்படுவது இது. திருமணத்திற்கு முன் ஏழாம் நாளில் இருந்து இருவீட்டார் மனைகளிலும் செய்யப்படுவது விதை விதைத்து அதற்கு நீர் வார்த்து வளர்ப்பர் இதனை,

*"மகிழ்ச்சியால் மணம்மீக்கூறி மங்கல வினைகள் எல்லாம்*
*புகழ்ச்சியால் பொலிந்து தோன்ற போற்றிய தொழிலாளர் ஆகி*
*இகழ்ச்சி ஒன்றானும் இன்றி ஏற்றுப் பூமாலை பந்தர்*
*நிகழ்ச்சியில் மைந்தர் ஈண்டி நீர்முளைச் சாத்தினார்கள்" (பெரியபுராணம் ப. 153).*

சுந்தரர் புராணத்திலும்,

*"திருமணஞ் செய்கலி யாணத் திருவாரூர் திகழ் சிறப்ப*
*மருவிய ஓரையும் கணித மங்கல நூலவர் வகுப்பப்*
*பெருகு மண நாளோலை பெருஞ் சிறப்புடன் போக்கி*
*அருள்புரிந்த நன்னாளில் அணி முளை பாலிகை விதைத்தார்" (பெரியபுராணம், ப.*

ISSN : 2581-9712

*985)* என ஞானசம்பந்தர் புராணத்தின் வழி அறியமுடிகிறது.

**திருக்காப்பு அணிவித்தல்**

திருமணத்திற்கு முந்தைய நாளில் மறையவர்களும் ஆடவரும் பெண்டிரும் கூடி மணமக்களுக்குத் தீங்கு நிகழா வண்ணம் வாழ்த்தித் திருகாப்பு அணிவிக்கின்றனர்.

**மாப்பிள்ளை அழைப்பு**

திருமணம் மணமகள் இல்லத்தில் நிகழ்வதால் சுந்தரர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் புரவியில் அமர்ந்து உறவினர் புடை சூழ இன்னிசை வாத்தியம் முழங்க மணமகள் இல்லத்திற்கு அழைத்துச் செல்வதைச் சுந்தரர் புராணம் வழி காண முடிகிறது. சம்பந்தர் இறைவன் வழங்கிய நித்தியச் சிவிகையில் உறவினர் சூழ வந்தமை புலனாகிறது. திருமணத்தில் தாரை, எக்காளம், தாளம், துளைக்கருவி, யாழ் முதலிய இசை கருவிகள் இசைக்கப் பெற்றதும் முதியவர்கள் வேதம் ஓதியும் வந்தமையை அறிய முடிகிறது.

**மணவறை**

பெண்ணின் பெற்றோர் உற்றார் உறவினர்கள் யாவரும் மணமகன் வாசலில் மணமகனைத் தூய தீபங்களுடன் வரவேற்றனர். வீட்டின் ஒரு பகுதியில் மணவறை சிறப்பாக அமைக்கப் பட்டிருந்தது.

**தாரைவார்த்தல்**

தாரைவார்த்தல் என்பது மணமகளை அலங்கரித்துப் பெற்றோர்களும் உடன் பிறந்தவர்களும் அழைத்து வந்து அமர வைத்து நீர் வார்த்துக் கொடுப்பதைத் தாரை வார்த்தல் என்பர். இதனைக் கன்னிகாதானம் என்றும் கூறப்படுகிறது. இதனை ஞானசம்பந்தர் புராணம் சிறப்பாகப் பதிவு செய்கிறது. மேலும் வேத விதிப்படி வளர்க்கப்பட்ட அக்கினியை வலம் வருதல் போன்ற பல்வேறு சடங்குகளும் ஞானசம்பந்தர் புராணத்தில் கூறப்படுகிறது. இதனை,

***"பெருங்கோளி ஞானம் உண்ட பிள்ளையார் மலர்க்கை தண்ணி***
***மருவுமங் கலநீர் வாசக் கரக முன்னேந்தி வார்ப்பார்***
***தருமுறை கோத்திரத்தின் தங்குலஞ் செப்பி என்றன்***
***அருநிதிப் பாவை யாரைப் பிள்ளையார் களித்தேன் என்றார்"*** (பெரியபுராணம் – ப.1029) என்ற பாடல் வழி அறியமுடிகிறது.

**முடிவாக**

பெரியபுராணத்தில் "பிள்ளை பாதி புராணம் பாதி" என்னும் கூற்றிற்கு ஏற்ப அதிகமான பாடல்களில் பாடப்பட்ட ஞானசம்பந்தரும், முதல் இடை கடை எனப் புராணத்தில் நாயகனாக விளங்கும் சுந்தரரும் ஆகிய இருவரது திருமணம் என்பது எதிர்மறையான புரிதல்களை உடையதாக உள்ளது. ஞானசம்பந்தரின் திருமணம் வைதீக முறைப்படி பெற்றோர் முன்னிலையில் நடைபெறுகிறது. சுந்தரர் திருமணம் அடியார்களால் செய்து வைக்கப்பட்ட கலப்புத் திருமணமாக அமைகிறது. பல தலங்களுக்குச் சென்று சமணச் சமய எதிர்ப்பைக் காட்டித் தன் சமயத்தை வளர்த்த ஞானசம்பந்தர் வாழ்க்கை திருமணத்தோடு ஐக்கியமாவதோடு நிறைவு பெறுவதாக முடிகிறது. சுந்தரர் திருமணமானது அடியார்களால் நடத்தி வைக்கப்பட்ட திருமணமாகவும் கலப்பு மற்றும் பலதாரத் திருமணமாகவும் அமைகிறது. இவர் பதிகம்

ISSN : 2581-9712

பாடுவதும் சோதனைக்கு ஆட்படுவதும் திருமணத்திற்குப் பின்பும் தொடர்கிறது.

**அடிக்குறிப்புகள்**

1. தமிழண்ணல்(உ.ஆ), தொல்காப்பியம், ப. 1116.
2. சந்தியா நடராஜன், மதுரை தமிழ் பேரகராதி, ப. 1167.
3. எஸ்.இராமகிருஷ்ணன், கிரியாவின் தமிழ் அகராததி–ப. 726.
4. மாருதிதாசன், நர்மதாவின் தமிழ் அகராதி – ப. 719.
5. அ. ச.ஞானசம்பந்தன், சேக்கிழார் தந்தச் செல்வம் – ப. 106.
6. மேலது – ப. 130.
7. தியாகராஜன், பெரியபுராணம் சமூகப் பின்னணியும் மனித உறவும் – ப. 170.
8. சீதாலெட்சுமி, பெரியபுராணம் திறனாய்வு– ப. 50.

****************************************

ISSN : 2581-9712



# பேரறிஞர் அண்ணாவின் சிறுகதைகளில் சமுதாய விழிப்புணர்வு

**முனைவர் அரங்க.மணிமாறன்**
முதுகலை தமிழாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி,
பரமனந்தல், செங்கம்.

தனிமனித உணர்வுகளைப் பாடுபொருளாகக் கொண்டு விளங்கியவை சங்கப்பாடல்கள். மனித மனங்களில் படிந்துகிடந்த தீயொழுக்க அழுக்குகளைப் போக்கி நல்லொழுக்கக் கருத்துகளைப் பொருண்மையாகக் கொண்டவை நீதிநூல்கள். ஒப்பற்ற தலைவனின் வீரதீரங்களை வெளிப்படுத்தியவை காப்பியங்கள். தொன்மக் கருத்துகளைப் புராணத் தொல்வரலாறுகள் வெளிப்படுத்தின. புலவர்களின் மதிநுட்பங்களைச் சிற்றிலக்கியங்கள் வெளிக்காட்டின. பாரதியார் போன்ற புலவர்கள் விடுதலை இசைப்பாட்டுகளை இசைத்தனர். பிற்காலப் புலவர்களும் படைப்பாளிகளும் சமுதாயவியலுக்கு முக்கியத்துவம் அளித்தனர்.

## பேரறிஞர் அண்ணாதுரை

"எல்லாத்துறையும் அண்ணாத்துரையே" எனும்படி அரசியல், பொருளாதாரம், மேடைப்பேச்சு, இலக்கியம் என அனைத்துத் துறைகளிலும் தனது ஆளுமையால் கோலோச்சியவர் பேரறிஞர் அண்ணா. "அண்ணாவின் கதைகளைக்கொண்டு அக்கால நாடக உலகம், மேடைப்பேச்சு, வணிகர்களின் நடைமுறைகள், தம் இறுதிநாளில் இருந்த ஜமீன் பரம்பரை நடவடிக்கைகள் செல்வந்தர்களின் வழக்கங்கள் உள்ளிட்டவற்றை அறியலாம்"1 என்கிறார் பேரா பெருமாள் முருகன்.

தனது சிந்தனை, பேச்சு, எழுத்து, செயல்பாடுகள் அனைத்திலும் போலி மதவாத எதிர்ப்பு, பகுத்தறிவுச் சிந்தனை விதைப்பு, சமுதாயத்திலும் அரசியலிலும் உள்ள சீர்கேடுகளை வெளிக்காட்டுதல், புராணப் புளுகுகளைத் தோலுரித்தல் ஆகியவற்றின் மூலம் மக்கள் அனைவரும் பேதங்களின்றி வாழ்ந்து அனைத்து உரிமைகளையும் பெற்று வாழவேண்டும் என்ற அவருடைய பொதுவுடமைச் சிந்தனை வெளிப்படுத்துவதைப்பற்றி மருத்துவர் மா. தியாகராஜன், "இவரின் சிறுகதைகளில் அரசியல், சமுதாயம், ஆணாதிக்கம், பெண்ணடிமை, சாதிக்கொடுமைகள், ஏழ்மையின் நிலை, அதைப் போக்குவது எங்ஙனம் என்ற தீர்வைக் கொண்டதாகவே உள்ளது"2 என்று தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். அத்தகைய பொருண்மைகள், சமுதாய விழிப்புணர்வுக் கருத்துகளாக வெளிப்படுவதே இக்கட்டுரை அமைகிறது.

## பத்திரிக்கை அறம்

இந்திய ஜனநாயகத்தின் நான்காவது தூணாக (FOUTH ESTATE) விளங்குவது இதழியல் துறையாகும். இதழியல் சமூக நிகழ்வுகளை மக்களுக்கு அறிவிக்கிறது, பொது அறிவை ஊட்டுகிறது,

ISSN : 2581-9712

வழிநடத்துகிறது. செய்திகளை வழங்கும்போது நடுநிலையோடும் உண்மையானதுமான செய்திகளை வெளியிடவேண்டும். தனிநபரின் வாழ்வுக்கும் புகழுக்கும் இழுக்கு ஏற்படாதவண்ணம் செயல்பட வேண்டும்.

*"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல்*
*அமைந்தொருபால்*
*கோடாமை சான்றோர் கணி"3*

எனும் திருவள்ளுவரின் சான்றோர் இலக்கணம் இதழியல் துறைக்கும் பொருந்தும். ஆனால் இன்றைய இதழியலாளர்கள் போட்டி நிறைந்த உலகியலில் தங்கள் இதழ்களை மக்கள் அதிகம் படிக்கவேண்டும், விற்பனையாகவேண்டும் என்ற வியாபாரப் போட்டியினால் பயனற்ற – உண்மையற்ற – தனிநபரின் பாதிப்புகளைக் கவனத்தில் கொள்ளாத செய்திகளைக் கற்பனை, வருணனை, நம்பகத்தன்மையற்ற செய்திகளையும் வழங்கித் தன் விற்பனை நோக்கம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செய்திகளை வெளியிடுகின்றனர். இதழ்களின் விற்பனையைக் கொண்டே அதன் தரமும் வளர்ச்சியும் புகழும் அளவிடப்படுகிறது.

தந்தை பெரியாரிடம் சென்று ஒருவர் தாம் பத்திரிக்கை ஒன்றைத் தொடங்கவிருப்பதாகக் கூறி வாழ்த்து பெற வந்தபோது "சோத்துக்கு என்ன செய்யப் போற?" எனக் கூறினாராம். படிப்பதற்கு நையாண்டியாக இருந்தாலும் இதழியல் உலகின் குறுக்குவெட்டுத் தோற்றத்தை நன்கு அறிந்த பழுத்த அனுபவத்தின் வெளிப்பாடாக இக்கூற்று அமைவதை அறியலாம்.

நல்ல நோக்கோடு செயல்படும் இதழ்கள் சில, கவர்ச்சிகர இதழ்களின் நடுவே காணாமல் போகின்றன. இவற்றை நன்கு அனுபவமாக உணர்ந்த அண்ணா தமது "கொக்கரக்கோ" சிறுகதையில் சுந்தரம் தன் நண்பரிடம் தான் 'கொக்கரக்கோ' என்ற பெயரில் இதழ் நடத்துவதாகவும் அதில் "வீரர் வெல்லிங்டன்!", "மனிதனுக்கு ஒரு தலைப் போதுமா?", "ஹிட்லர் பட்லரானால்" உள்ளிட்ட தலையங்கங்கள் எழுதி இதழை வளர்த்த கதைகளைக் கூறுகிறார்.

"கேள் சங்கரா! சுற்றி வளைத்துப் பார்த்தேன் திடீரென்று ஒரு யுக்தி கிளம்பிற்று. எடுத்தேன் பேனாவை ஹிட்லர் பட்லரானால்? என்று கேள்வி ஒன்று கிளப்பினேன். விற்பனை பலத்தது. 32 பிரக்களை நிருபர்களாகவும் பார்சல் குமாஸ்தாக்களாகவும் வைத்துக்கொண்டேன்." என்றும்

*"கருணைப்பிள்ளை நர்த்தனம்*
*பரதநாட்டியம் ஒரு பழங்கலை"4*

என்றும் செய்தி வெளியிட்டதாகக் கூறுகிறார். இதழ்நடத்தி நட்டமடைந்து புத்தி பேதலித்த சுந்தரம் வழி இதழியலின் நிலைகளை வெளிப்படுத்தியுள்ளார் அண்ணா.

**உழைப்பாளர் உயரவேண்டும்**

ஊருக்குச் சோறு போடும் விவசாயி பட்டினி கிடக்கிறான். துணி, நெசவு செய்துதரும் நெசவாளி கந்தையை உடுத்துகிறான். அனைவருக்கும் வீடுகட்டித்தரும் தொழிலாளி கூரைவீட்டில் குடியிருக்கிறான். இத்தகு முரண்பாடுகளுக்குக் காரணமென்ன? ஒரு பொருளை உற்பத்தி செய்பவனுக்கும் நுகர்வோருக்குமிடையில் இருக்கும் இடைத்தரகர்கள் இதற்குக் காரணம். அவர்களின் சுயநலத்தினால் பொருட்களின் உற்பத்தி விலையைவிடப் பன்மடங்கு உயர்ந்துவிடுகிறது. வாழ்வின் அடிப்படை

தேவையான பொருட்களுக்கும் ஏற்படும் இவ்விலைவுயர்வு ஏழை நடுத்தர வர்க்கத்தினரை பாதிப்பதைத் தமது "சரோஜா ஆறணா!" சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளார். "சரோஜா ஆறணா!" என நடுத்தெருவில் ஒருவன் கூவிக்கூவி விற்றதும் நாயகனுக்குக் கோபம் வந்து காலம் எவ்வளவு கெட்டுவிட்டது? பெண்ணை நடுத்தெருவில் விலைக்கூவி விற்பதா? எனச் சண்டைக்குச் செல்கிறான். கூவியவனுக்கும் இவனுக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் நாயகனை அடித்துவிடுகிறான். நடுத்தெருவில் ஒரு பெண்ணை விலைக்கூறியதைத் தட்டிக்கேட்டதற்கு அடித்தீரே! எனக் கேட்டதற்கு, "இது நூல்மார்க்கெட் தம்பி! சரோஜா மில் நூல் விலை 44–6–0 என்பதையே தான் சரோஜா ஆறணா என்று விற்றதாகக் கூறுகிறான்.

அதனைத்தொடரும் உரையாடல்களில் உற்பத்தி விலைக்கும் நுகர்வோர் பெறுகின்ற விலைக்குமிடையேயான மலையளவு வேறுபாட்டையும் ஏழைகள் அவற்றை அதிக விலைகொடுத்து வாங்கித் துய்க்க வேண்டிய நிலையையும் விளக்கியுள்ளார்.

"இன்றைக்கு இருக்கும் விலை நாளைக்குக் கிடையாது. மணிக்கு மணி தந்தி வருகிறது! இடையிலே இருந்து பலர் இலாபம் பார்க்கின்றனர். ஆர்டர் கொடுப்பவருக்கு நூல் பேல் தேவையில்லை. ஆனால் பணம் இருக்கிறது. வியாபாரச் சூட்சுமம் இருக்கிறது. 200 பேல் வாங்குவார். ஒரு வாரத்திலே 40 என்று விலை ஏறிவிடும். அவர் இலாபச் சாட்டு ஏறும்"5 என்று வியாபார உலகின் நிலையை விளக்கியுள்ளார். இன்றைய சுயநல உலகில் பொருளாதாரப் பற்றாக்குறையால் பெற்ற பிள்ளையை விற்க வேண்டிய நிலையையும் இக்கதை விளக்குகிறது.

## மூடநம்பிக்கை ஒழிப்பு

போலி மதவாதிகள் பொய்ப்புரட்டுகளைக் கூறி மக்களை ஏமாற்றி அதில்தன் வயிறு பிழைக்கும் வஞ்சகர் கூட்டத்தினரையும் திரைப்படத்துறையில் உள்ள சில சுயநலவாதிகளையும் "பேய் ஓடிப் போச்சு" சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளார் அண்ணா. "பார்ப்பன எதிர்ப்பு, கடவுள் உள்ளிட்ட மூடநம்பிக்கை எதிர்ப்பு, இனம் ஏற்றத்தாழ்வு, சுரண்டலை வெளிப்படுத்துவது ஆகியவையே அவரது கருத்துநிலைகள்"6 என்கிறார் பேரா பெருமாள் முருகன்.

செங்கோடனின் மகள் செல்லாயிக்கு திருமணம் நிச்சயித்திருந்த வேளையில் பேய் பிடித்துவிடுகிறது. அதனால் செங்கோடன் வருந்துகிறான். வேலனின் அப்பா கோவிந்தன் குடிகாரனாக இருந்தாலும் வேலனின் நற்குணங்களை அறிந்து செங்கோடன் தன் பெண்ணை கொடுக்க முன்வருகிறான். ஆனால் செல்லாயிக்கு பேய் பிடித்து அதனால் தன் இயல்பு மாறிவிட்டதைக் கண்டு செல்லாயியை திருமணம் செய்துகொள்ள முடியாது எனத் திருமணத்தை நிறுத்திவிடுகிறான். இதனால் மிகுந்த வருத்தமடைந்த செங்கோடன் பூசாரி பொன்னனிடம் அழைத்துச் செல்கிறான். அவன் பல்வேறு சடங்குகளைச் செய்து பேயை விரட்டுவதாகக் கூறி அவனிடம் பணத்தைக் கறந்துவிடுகிறான். ஆனால் செங்கோடன் எதிர்பார்த்தது போலவே பேய் விலகிவிடுகிறது. செல்லாயி நலம் பெற்றுவிடுகிறாள்.

"அண்ணே பூசாரி பொன்னனை நான் என்னமோன்னு எண்ணிக்கிட்டுக்

ISSN : 2581-9712

கிடந்தேன். இப்பத் தெரியுது அவன் இலேசுபட்டவனில்லைங்கற விஷயம்''7 என்று குறிப்பிடுகிறார். திரைப்பட இயக்குநர் சிங் கிராமத்துக் காதல் திரைப்படத்தை எடுக்கக் கிராமத்திற்கு வருகிறார். அதில் தெருக்கூத்தில் ஆர்வமிக்க வேலனையும் அவனைத் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்ட செல்லாயியையும் மடியில் படுக்கவைத்து ஆப்பிளைக் கடிக்க வைத்துப் படமாக்கிப் பின்பு அதைச் செல்லாயி திரைப்பட நாயகனுக்கு ஊட்டிவிடுவதாக மாற்றி எடிட்டிங் செய்து வெளியிடுகின்றார். இதனால் வேலனுக்கும் செல்லாயிக்கும் சண்டை ஏற்பட்டுத் திருமணம் தடைசெய்யப்படுகிறது. செல்லாயி பேய் பிடித்தவளாகிறாள். இறுதியில் உண்மை தெரிந்து வேலன் இயக்குநரை அடித்துவிடுகிறான். தான் செய்த தவறுக்கு வருத்தம் தெரிவித்து விளக்கமளிக்கிறார் இயக்குநர். வேலனும் தன் தவறான புரிதலுக்கு வருந்துகிறான். இயக்குநரின் சுயநலம் செல்லாயி மனதைத் தடுமாறச் செய்து திருமணத்தை நிறுத்திப் போலி பூசாரி பொன்னனின் வருமானத்திற்கு வழிகோலுவதை இச்சிறுகதை விளக்குகிறது.

**சமத்துவம் மலர வேண்டும்**

மனிதர்களில் சிலர் இனம், மத, பேதமற்ற சமத்துவவாதிகளைப் போல நடிக்கின்றனர். உண்மையில் அப்படி இல்லை. மாமன் மச்சான் உறவு கொண்டாடும் இருவேறு சாதியினர் தன் பெண்ணை தன் இனம்விட்டு நட்புக்காக உறவுக்காகத் திருமணம் செய்து கொடுப்பதில்லை. அங்கே தன்சாதி தலைதூக்கி நிற்கிறது. வேற்றுமையில் ஒற்றுமை காணும் பாரததேசத்தில் ஒற்றுமை உண்மையாகவா அல்லது உதட்டளவிலா என்ற கேள்விக்குறியை, ''1938–1940 ஒரு வசீகர வரலாறு'' சிறுகதையில் எழுப்பியிருக்கிறார்.

''அண்ணாவின் கதைகளின் இன்னொரு தனித்தன்மை இக்கதைகளில் வரும் கைம்பெண் மறுமணம், பொருந்தா மணம், பாலியல் சுரண்டல் என இவர் கையாண்டுள்ளவை முக்கியமானவை''8 எனும் பேரா பெருமாள் முருகன் கூற்றுப்படி இக்கதையில் கைம்பெண் மறுமணத்தை ஆதரித்து எழுதியுள்ளார் அண்ணா.

சொக்கலிங்கம் செட்டியார் கடையில் நாயுடு வகுப்பைச் சேர்ந்த கண்ணுசாமி வேலை செய்கிறான். காலை கடையைத் திறந்ததிலிருந்து மாலை கடையைப் பூட்டி சாவியை ஒப்படைப்பது வரை அவனை நம்பி அனைத்தையும் ஒப்படைக்கிறார். அவனும் மிகுந்த நற்பண்பும் நம்பிக்கையானவனாகவும் இருக்கிறான். செட்டியார் அவனை மெச்சித் தன் குடும்பத்தில் ஒருவனாகவே கருதுகிறார். செட்டியாரின் மகள் கலியாணி திருமணமான சில காலத்திலேயே கணவன் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட அவள் கைம்பெண்ணாகிறாள். கண்ணுசாமி செட்டியாரின் மனதை மட்டுமில்லாது கலியாணியின் மனதையும் கவர்கிறான்.

விஷயமறிந்த செட்டியார் அவன் சம்பளத்தைக் குறைக்கிறார். வசைபாடுகிறார். வேலையை விட்டே நிறுத்திவிடுகிறார். கலியாணியும் கண்ணுசாமியும் உடன்போக்குச்சென்று திருமணம் செய்துகொண்டு ஆண்மகவைப் பெற்றெடுக்கின்றனர்.

இனம் ஒன்றையே பெரிதெனக் கொண்டு நோயாளிக்குத் திருமணம் செய்து வைக்கிறார். கைம்பெண்ணான தன் மகளைக் கண்ணுசாமி காதலிக்கும்போது

இனத்தைக் காரணம் காட்டித் திருமணத்திற்கு மறுக்கிறார்.

1938இல் தங்கமானவன் சாது 1939இல் அவனே தறுதலை போக்கிரி! இது செட்டியாரின் கணக்கு என்பதை, "அவர் கணக்குப்படி பார்த்தால் 1938இல் நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக இருந்த கண்ணுசாமி 39இல் நயவஞ்சகனாகிவிட்டான்"9 என்று சாதிவேறுபாட்டின் கொடுமையையும் குறிப்பிடுகிறார்.

"தாலி இழந்தவளுக்குக் கல்யாணமா என்று தாத்தா காலத்துக் கதை பேசாதே. தாலி! கட்டுவதற்கு ஆள் இருக்கும்வரை தாலியை இழப்பது என்ற பதத்திலே பொருள் ஏது?"10 என்று கைம்பெண்களின் துயரம், இளம் வயதில் வாழ்விழந்த இளம் கைம்பெண்களுக்கு மறுவாழ்வு வழங்கப்பட வேண்டும் என்ற மகாத்மா காந்தி, தந்தை பெரியார் போன்றோரின் சிந்தனைகளுக்கு வடிவம் கொடுப்பதாக இச்சிறுகதை அமைந்துள்ளது. "பெண்ணியச் சிந்தனைகள், அவர்களின் முன்னேற்றம் குறித்த கருத்துகள் அவரது சிறுகதைகளில் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பது தெரிகிறது"11 என்ற மருத்துவர் மா. தியாகராஜனின் கருத்து இங்குப் பொருத்தமாகிறது.

## உழுதபவனுக்கு நிலம் சொந்தம்

"அண்ணா தமிழ்ச் சிறுகதைகளை உன்னத நிலையில் வைக்க வேண்டும் என்பதற்காக எழுதியவர் அல்லர். அவருடைய நோக்கம் கருத்துப் பிரசாரம் என்பது தெளிவு"12 என்கிறார் பேரா பெருமாள் முருகன். நம்நாட்டில் உழைப்பவன் ஒருவன்; உழைப்பின் பலனைப் பெறுபவன் ஒருவன் என்ற வினோதமான நியாயம் நிலவுகிறது. "உழுதவனுக்கு நிலம் சொந்தமாக வேண்டும்!" என்ற பொதுவுடைமை சித்தாந்தத்தை "செவ்வாழை" சிறுகதையில் அண்ணா படம் பிடித்துக்காட்டியுள்ளார். பண்ணையாரிடம் வேலை செய்யும் செங்கோடன் தன் நிலத்தில் செவ்வாழைக்கன்றை நட்டு வளர்க்கிறான். வாழை வளரும் காய் காய்க்கும் பழமாகும் உண்டால் மிக இனிக்கும் எனக் கரியன் உள்ளிட்ட தன் பிள்ளைகளுக்குச் சொல்லிச் சொல்லி ஆசை வளர்க்கிறான். குழந்தைகளும் ஏக்கத்தோடு வாழை கனிகொடுக்கும் காலத்தை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

"பாடுபட்டோம் பலனைப் பெறப் போகிறோம். இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. செவ்வாழைக்காக நாமச் செலவிட்ட உழைப்பு, பண்ணையாரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே நூற்றுக்கு ஒரு பாகம் கூட இராது. ஆனால் உழைப்பு நம்முடையதாகவும் வயல் அவருடையதாகவும் இருந்ததால் பலனை அவர் அனுபவிக்கிறார்"13 என்ற எண்ணவோட்டம் அவன் மனதிலே ஓடுகிறது.

காலத்தைப் போலவே செவ்வாழையும் கனிந்தது. அதைச் சுவைக்கக் காத்திருந்த வேளையில் பண்ணையாரின் மருமகள் பிறந்தநாள் விழா வழிபாட்டுக்குச் செவ்வாழை தேவைப்படுகிறது. பண்ணையாரின் தேவைக்காக இத்தனை நாளாய்த் தன் சொத்து என வளர்த்த செவ்வாழை குலையைத் தன் பிள்ளைகளின் ஆசைகளைப் பாழாக்கிக் கனத்த மனத்துடன் செங்கோடன் அதை வெட்டித் தருகிறான். பிள்ளைகள் ஏமாற்றமடைகின்றனர். பூசைக்குப் போக மீதமான பழங்கள் கடைத் தெருவில்

விற்பனைக்கு வருகிறது. கரியன் அதை வாங்கியாவது தின்ன விரும்புகிறான். அவன் கையில் இருப்பதோ காலணா ஆனால் பழத்தின் விலை ஒரு அணா. கையில் இருந்த காசுக்கு வறுத்த கடலையை வாங்கிக் கொறித்துக்கொண்டே செல்கிறான்.

“உழைப்பவனுக்கே நிலம் சொந்தம். பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக் கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா?”14 என்று அவன் சிந்திக்கிறான். வாழைமரம் மட்டும் பார்வதி பாட்டியின் பாடையில் கட்டப்படுகிறது எனச் சாரமற்றுப் போன உழைப்பாளியின் வாழ்வைச் சித்திரிக்கிறார் அண்ணா. “உழைப்பவன் ஒருவன் உழைப்பின் பலனைப் பெறுபவன் இன்னொருவன்” என்ற இழிநிலை மாறவேண்டும். உழைப்பவனுக்கே உழைப்பின் பலனும் நிலமும் சொந்தமாகவேண்டும் என்ற பொதுவுடைமைக் கொள்கையை அண்ணா இக்கதையில் அழகாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

## பொதுவுடமைச் சுதந்திரம் வேண்டும்

முதலாளித்துவ நாடுகளின் வியாபாரத் தந்திரங்கள் எவ்வாறு சாமானிய மனிதனைப் பாதிக்கின்றது என்பதை “பொங்கல் பரிசு” சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளார். உலக முதலாளியின் கையிலுள்ள நூலின் அசைவினால் அடிமை நாடுகள் ஆட்டம் காணுவதை இக்கதையில் படம் பிடித்துக்காட்டியுள்ளார். கதாநாயகன் தன் முதலாளிக்குப் பொங்கல் பரிசு வேண்டி எழுதும் நீண்ட கடிதம், அவன் கண்டனக் கடிதம் பெற்று மருத்துவ மனையில் அனுமதியாகும்படி செய்துவிடுகிறது. பன்னாட்டு முதலாளியின் நிறுவனத்தில் உற்பத்தியாகும் பொருட்களை வாங்கவேண்டி ஒப்பந்தங்களும் திட்டங்களும் சலுகைகளும் அளிக்கின்றன. “ஒவ்வொரு துறையிலும் அமெரிக்கா நுழைந்து இலாப வேட்டை ஆடப் புதுப்புது(தொழில்) கம்பெனி நடத்துகிறது. அமெரிக்காவுக்கு இந்தியாவின் கலை–பலாச்சாரம் கல்வி குழந்தைகள் நிலைமை ஆகியவை பற்றிய அக்கரை துளியும் இல்லை. தங்கள் நாட்டுச் சரக்கை இந்தியாவில் விற்கும் நோக்கம்தான் அதிகமாகிவிட்டிருந்தது.”15 என்று தமது கதையில் எடுத்துக்காட்டுகிறார்.

பன்னாட்டு நிறுவன அசைவுக்குக் கல்வி அமைச்சரும், கல்வி அதிகாரியும், பள்ளி நிர்வாகமும் சேர்ந்து சாதாரணத் தொழிலாளிக்குக் கொடுக்கும் அழுத்தம் மேற்கூறிய நிலைமைக்கு ஆளாக்குகிறது என முதலாளித்துவ நாடுகளின் வியாபாரத் தந்திரங்களை இச்சிறுகதையில் விளக்கியுள்ளார் அண்ணா. “காலிழந்தவன்” சிறுகதையில் ஊனம் உடலில் இருந்தாலும் அது உள்ள உறுதியைக் குலைத்துவிடக்கூடாது. மனதின் உறுதியே மகத்தானது என்பதை அண்ணா காலிழந்தவன் சிறுகதையில் உணர்த்துகிறார்.

## முடிபுகள்

1. தனது கதை விவரிப்புத்திறனால் சமுதாயத்திலுள்ள கவனிக்கப்படாத பொருண்மைகளையும் சிறக்கச் செய்துள்ளார்.

2. அவர் பின்பற்றிய கொள்கைகளுக்குக் கதை வடிவம் கொடுத்துச் சிறக்கச் செய்துள்ளார்.

3. சமுதாயம், அரசியல், இதழியல் எழுத்துத் துறைகளில் தான்பெற்ற அனுபவங்களை அழகாகக் கதையாக்கும் திறன் வியக்கத் தக்கதாக உள்ளது.

ISSN : 2581-9712

4. ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதில் முக்கியப் பங்காற்றும் இதழ்கள் வியாபார நோக்கமின்றி உண்மையாகவும் நடுநிலையாகச் செய்திகளை வழங்கிச் சமுதாய வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என வலியுறுத்துகிறார்.

5. உழைப்பாளியின் வியர்வைக்கு உற்ற ஊதியம் கிடைத்திட வேண்டும். உற்பத்தியாளனுக்கும் நுகர்வோருக்குமான இடைவெளி குறைந்து இடைத்தரகரின்றி உற்பத்தியாளனின் பொருள் நுகர்வோருக்கு நேரடியாகக் கிடைத்திட வேண்டும். உழைக்காமல் இடைத்தரகராய்க் கொழிக்கின்ற உன்மத்தம் நீங்க வேண்டும்.

6. திரைத்துறையில் இருக்கின்ற சுயநலத்துக்காகப் பிறன்நலத்தை கெடுக்கின்ற நிலைமாறவேண்டும்.

7. போலி மதவாதிகளின் சுயநலத்திற்காக அவர்களின் பொய் புரட்டுகளை நம்பி ஏமாறக்கூடாது. போலிச் சடங்குகள் மூடநம்பிக்கைகள் ஆகியவற்றிற்கு மக்கள் பலியாகக் கூடாது. மதங்களின் பெயரால் நடக்கும் பொய் புரட்டுகளைத் தெளிந்து விழிப்புணர்வு பெற வேண்டும்.

8. கைம்பெண்கள் மறுமணம் செய்துகொண்டுவாழ வழிவகை செய்யப்பட வேண்டும்.

9. உழைப்பவனுக்கு நிலம் சொந்தமாக வேண்டும். உழைப்பாளியின் உழைப்பைச் சுரண்டும் தீயபோக்கு மாறி உழைப்பவனே உயர்ந்தவன் என்ற நிலை உருவாக வேண்டும்.

10. உலக நாடுகளிடையே ஆண்டான் அடிமைப்போக்கும் பிற நாடுகளை ஆட்டுவிக்கும் போக்கும் நீங்கவேண்டும். உடற்குறை இருந்தாலும் உள்ளக்குறையின்றி தன்னம்பிக்கையோடு வாழ்ந்து சாதனைகள் புரிய வேண்டும் என்பன உள்ளிட்ட சிந்தனைகளைத் தமது சிறுகதைகளில் பேரறிஞர் அண்ணா வெளிப்படுத்தியுள்ளார் என்பது ஆய்ந்தறியப்பட்டது.

## முதன்மை சான்று

அண்ணாவின் சிறுகதைக் களஞ்சியம், பாரத் பதிப்பகம், மாங்காடு சென்னை – 122. முதற்பதிப்பு–2013.

## அடிக்குறிப்புகள்

1. பேரா பெருமாள் முருகன், “அண்ணா சிறுகதைகள் பலமும் பலவீனமும்” (கட்டுரை) – நடப்பு.காம் (இணையப் பக்கம்) – சனவரி–08–2015.
2. முனைவர் மா.தியாகராஜன் – பேரறிஞர் அண்ணா– சிறுகதைகளில் பெண்ணியம் – சிங்கப்பூர் – 558286, தமிழ்த்தோட்டம், இணையப் பக்கம். சனவரி–22, 2013.
3. திருக்குறள் இல்லறவியல்(நடுவு நிலைமை), குறள் எண் 118, ப.25 – கழக வெளியிடு, திருநெல்வேலி தென்னிந்தியச் சைவச் சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 1 –1959.
4. சி.என் அண்ணாதுரை, “அண்ணாவின் சிறுகதைக் களஞ்சியம்” கொக்கரக்கோ சிறுகதை ப.8 – பாரத் பதிப்பகம், மாங்காடு, சென்னை – 122. முதற்பதிப்பு–2013.
5. மேற்குறித்த நூல் – சரோஜா ஆறணா சிறுகதை–ப.16.
6. பேரா பெருமாள் முருகன், “அண்ணா சிறுகதைகள் பலமும் பலவீனமும்” (கட்டுரை) – நடப்பு.காம்(இணைய பக்கம்)– சனவரி–08–2015.
7. சி.என் அண்ணாதுரை, “அண்ணாவின் சிறுகதைக் களஞ்சியம்” பேய் ஓடிப்போச்சு சிறுகதை–ப.21 – பாரத் பதிப்பகம், மாங்காடு, சென்னை – 122. முதற்பதிப்பு–2013.
8. பேரா பெருமாள் முருகன் “அண்ணா சிறுகதைகள் பலமும் பலவீனமும்”

ISSN : 2581-9712

(கட்டுரை) – நடப்பு.காம் (இணையப் பக்கம்)– சனவரி–08–2015.

9. சி.என் அண்ணாதுரை, “அண்ணாவின் சிறுகதைக் களஞ்சியம்” – 1938–1940 ஒரு வசீகர வரலாறு சிறுகதை, ப.46. பாரத் பதிப்பகம், மாங்காடு, சென்னை– 122. முதற்பதிப்பு–2013.

10. மேற்குறித்த நூல்– மேற்குறித்த சிறுகதை, ப.52.

11. முனைவர் மா.தியாகராஜன்– பேரறிஞர் அண்ணா–சிறுகதைகளில் பெண்ணியம்– சிங்கப்பூர்– 558286. தமிழ்த்தோட்டம், இணையப் பக்கம். சனவரி–22,2013.

12. பேரா பெருமாள் முருகன், “அண்ணா சிறுகதைகள் பலமும் பலவீனமும்” (கட்டுரை) – நடப்பு.காம்(இணைய பக்கம்) – சனவரி–08–2015.

13. சி.என் அண்ணாதுரை “அண்ணாவின் சிறுகதைக் களஞ்சியம்”– செவ்வாழை சிறுகதை பக், 68–69. பாரத் பதிப்பகம், மாங்காடு சென்னை– 122. முதற்பதிப்பு– 2013.

14. மேற்குறித்த நூல் – மேற்குறித்த சிறுகதை, ப.69.

15. மேற்குறித்த நூல் – பொங்கல் பரிசு சிறுகதை, ப.78.

*******************************************



## சங்க வாழ்த்து

பொன்னும் துகிரும் முத்தும் மணியும்
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றியாங்கு உலகுவாழ் தமிழர்
தண்ணிய உறவால் தலைத்தனர்
உலகத் தமிழ்ச் சங்கம் உண்மை யானோ?

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

ISSN:2581-9712